நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 219 ஜன.28-பெப்.03, 2001 விலை 12/-

சொல்லேருழவின் நெறி!

இன்னும் ஒரு தி... எங்களுக்குத் தாவென நீர்
சொன்னபடி செய்த பின்னும் சோர்வெதற்கு இன்னுமவர்
சொல்கின்றார் போ...என்று புகல்கின்றார் நிறுத்துதற்கு
நில் என்று சொல்வதன்றோ நெறி!

ஈழமோகம்




## திண்ணை காலியாகக் காத்திருந்த கதை









## சுயசரிதம் அல்ல ஒரு நாவலின் முன்வரைவு!







போரில் வெற்றியைத் தீர்மானிப்பது எது?

சீனப்பிரதமரின் பார்வையில் இலங்கை!

றோவின் வலையில் தமிழ் கட்சிகள்?

பயங்கரவாதிகள் பட்டம் சூட்டும் பயங்கரவாதிகள்

போர் நிறுத்தம் : நீடிக்கும் புலிகளும் நிராகரிக்கும் அரசும்

கோடீஸ்வரர் ஆக விரும்புகிறீர்களா?

# களத்தில் வெற்றி யாருக்கு?







நன்றி - நூலகத்திட்டம்



## களுத்துறைச் சிறை: சொல்ல முடியா அவலங்கள்!

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குத் தவணைகளுக்காகக் கைதிகள் கொண்டு செல்லப்பட்டால், மொழி பெயர்ப்பாளர் வரவில்லை, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தரப்பைச் சேர்ந்த அதிகாரிகள் வரவில்லை என்ற சாட்டுகள் கூறப்பட்டு இரண்டு வருடங்கள் வரையில் வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதாகவும், இதனால் வீண் அலைச்சலுக்கும் அசௌகரியங்கள் கஸ்டங்களுக்கும் தாங்கள் ஆளாகி வருவதாகவும் கைதிகள் பலரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை அனுராதபுரம், கண்டி மேல் நீதிமன்றங்களின் வழக்கு விசாரணை உள்ள கைதிகளின் வழக்குகள் பத்து மாதங்களுக்கு ஒரு தடவை தான் விசாரணை தவணைகளுக்கான திகதிகள் வழங்கப்படுகின்றன என்றும், இதனால், தமது வழக்குகள் வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் சம்பந்தப்பட்ட கைதிகள் முறையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதன் காரணமாக களுத்துறைச் சிறைச்சாலையின் 348ம் இலக்க அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மன்னாரைச் சேர்ந்த கணேசபதி சுரேஷ்குமார் என்பவர் ஜனவரி 28ம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தகக்கது.

1998 ஜன.6ம் திகதி மன்னாரில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக காலவரையறையற்ற தடுப்பக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 629 பேர் சந்தேகத்தின் பேரில் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

அனுராதபுரம், கண்டி, பதுளை போன்ற சிறைச்சாலைகளிலிலும் பார்க்க களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகளின் அடிப்படை வசதிகள் குறைவாகவும், உணவு சுத்தம் மற்றும் மருத்துவ வசதி குறைந்ததாகவும் இருப்பதாக கைதிகள் மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் முறையிட்டிருக்கின்றார்கள்.

தம்மைப் பார்வையிட வருகின்ற உறவினர்கள் கொண்டு வந்து கொடுக்கின்ற, தலைக்கு வைக்கின்ற எண்ணெய் கொக்கோகோலா போத்தல் மூடியில் மாத்திரமே கொடுக்கப்படுகின்றது. போதிய உணவின்றி நலிந்துள்ள தமது பிள்ளைகள், கணவன்மார்களுக்கு வீட்டு உறவினர்கள் ஆவலோடு கொண்டு வந்து கொடுக்கின்ற பால்மா, முட்டைமா, உளுந்துமா, சீனி, தேயிலை போன்றவற்றை சிறைச்சாலை அதிகாரிகளும் ஊழியர்களும் கைதிகளுக்கு வழங்குவதில்லை என்று கைதிகள் தம்மைச் சந்தித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறையிட்டிருக்கின்றார்கள்.

உறவினர்கள் கைதிகளைப் பார்ப்பதற்காக வரும்போது கொண்டு வந்து கொடுக்கின்ற குளிர்பான வகைகளை, பிளாஸ்டிக் பைகளில் ஊற்றிக் கொண்டு வந்து கொடுக்கப்படுவதாகவும், பிளாஸ்டிக் போத்தல்களைக் கூட உள்ளே கொண்டு வருவதற்கோ, கைதிகள் தண்ணீர் எடுத்து வைத்துப் பயன்படுத்துவதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கைதிகள் தெரிவித்துள்ளார்க்ள்.

களுத்துறைச் சிறைச்சாலைக்கு நேரடியாக வந்து பார்வையிட முடியாத உறவினர்கள் எழுதி அனுப்பி வைக்கின்ற கடிதங்கள் பத்து பதினைந்து நாட்களுக்குப் பின்பே தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் கைதிகள் முறையிட்டுள்ளார்கள். பதிவுக் கடிதங்கள் வந்தால், அக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டமைக்கான கையெழுத்து கைதிகளிடமிருந்து உடனடியாகப் பெறப்படுவதாகவும், ஆனால், அவ்வாறு கையெழுத்திட்டு 15 நாட்களின் பின்னர் தான் கைதிகளுக்கு கடிதங்கள் கொடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளுக்கு வருகின்ற கடிதங்கள் சிறைச்சாலை அதிகாரிகளினால் வாசித்துப் பார்க்கப்பட்ட பின்பே அவர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்ற நியதிக்கமைய அக்கடிதங்களை வாசிக்க வேண்டிய அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாதென்பதனாலும், தமிழ்க் கடிதங்களை சிங்களத்தில் மொழிபெயர்க்கின்ற ஆற்றல் உள்ள அதிகாரிகள் குறைவாக இருப்பதுமே இந்த நிலைமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உறவினர்கள் கொண்டு வந்து கொடுக்கின்ற உணவுப்பொருட்கள், தின்பண்டங்கள் என்பவற்றை உரியவர்களிடம் கொடுக்காத அதேவேளை, எந்தப் பொருளாகிலும் சிறைச்சாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலையிலேயே பணம் கொடுத்து வாங்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கைதிகளுக்குக் கொண்டு வந்து கொடுக்கப்படுகின்ற உணவுப் பொருட்களைத் தடுக்கின்ற அதிகாரிகள், அவற்றைச் சிறைச்சாலையில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் விற்பனை செய்வதற்கு மாத்திரம் அனுமதி வழங்கி, கைதிகளிடமிருந்து பணம் கறக்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலை உணவாக வழங்கப்படுகின்ற பாண் அரை இறாத்தலுக்கும் குறைவாகவே வழங்கப்படுவதுடன், திங்கள், வெள்ளிக்கிழமைகளில் பாணுடன் சொதியும், ஏனைய நாட்களில் சம்பலும் வழங்கப்படுவதாகவும் மதிய உணவின் போது வழங்கப்படுகின்ற மரக்கறிகள் சுகாதாரம் குறைந்ததாகவும், சிலசமயங்களில் காய்கறிகளில் உள்ள புழுக்களும் அப்படியே சமைக்கப்படுவதாகவும் கைதிகள் முறையிட்டுள்ளார்கள்.

அனுராதபுரம், கண்டி, பதுளை போன்ற இடங்களிலுள்ள சிறைச்சாலைகளிலிலும் பார்க்க களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகளின் அடிப்படை வசதிகள் குறைவாகவும், உணவு சுத்தம் குறைந்ததாகவும் இருப்பதாக அப்பகுதிகளில் இருந்து வந்துள்ள தடுப்புக்காவல் கைதிகள் தெரிவித்துள்ளார்கள்.

தடுப்புக்காவல் கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள மண்டபத் தொகுதிகள் (வார்டுகள்) ஒவ்வொன்றுக்கும் இரண்டு மலசலகூடங்கள் இருப்பதாகவும் இவற்றை 34க்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்த வேண்டியிருக்கின்ற போதிலும், இவற்றைச் சுத்தம் செய்வதற்குரிய குளோரின் மாதம் ஒருதடவை மாத்திரமே சிறிய அளவில் தெளிக்கப்படுகின்றது என தெரிவித்துள்ள கைதிகள், இதனை இரண்டு வாரத்திற்கொரு முறை மலசலகூடங்களைச் சுத்தம் செய்யத்தக்க அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மலசலகூடக் குழிகளில் சரியான மூடிகள் இல்லாததன் காரணமாக துர்நாற்றம் வீசும் சூழல் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மண்டபத்தொகுதி 'டி' யின் மாடிக்கட்டிடத்தில் உடைந்த நிலையில் உள்ள கழிப்பறையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் கீழ் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பகுதிக்குள் விழுவதாகவும், இதனால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் கழிவு நீரினால் எழுந்துள்ள துர்நாற்றமும் அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள மண்டபங்கள் பலவற்றில் உரிய மின்விளக்குகள் இல்லாததனால், இருட்டிலேயே கைதிகள் இருக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலையின் வைத்தியப்பிரிவில் கைதிகளுக்கு வழங்குவதற்குரிய முக்கிய மருந்துகள் இல்லாத நிலையும் சுட்டிக் காட்டப்பட்டது.

## வாகரையிலிருந்தும் கோரிக்கை!

விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தத்தை ஏற்று சிறிலங்கா அரசாங்கம் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமெனவும் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமெனக் கோரியும் தமிழர்களின் அபிலாசை சுயநிர்ணயக் கோரிக்கை எனவும் வலியுறுத்தி கடந்த செவ்வாய்கிழமை காலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

கொட்டும் மழையிலும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கானோர் இதில் கலந்து கொண்டனர்.

வெருகலில் இருந்து ஒரு ஊர்வலமும் பனிச்சங்கேணியில் இருந்து மற்றொரு ஊர்வலமும் ஆரம்பித்து வாகரை பிரதேச செயலகம் வரை சென்றன. அதில் கலந்து கொண்டவர்கள் பின்வரும் பதாதைகளையும் ஏந்திச் சென்றனர்.

"வேண்டாம் வேண்டாம் போர் வேண்டாம்", "சிறிலங்கா அரசே போர் நிறுத்தம் செய்", "சிறிலங்கா அரசே பாடசாலைகள் மீது குண்டுமாரி பொழியாதே", "நோர்வே அரசே பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்", "அமெரிக்க அரசே பேச்சு வார்த்தைக்கான அழுத்தத்தைக் கொடு", "பௌத்த பிக்குகளே இனவாதம் பேசாதீர்", "எமக்கு வேண்டும் சமாதானவே", "போரை நிறுத்து சமாதானத்தை ஏற்படுத்து இதுவே தமிழினத்திற்குச் செய்யும் பணி".

இவர்கள் ஊர்வலமாகச் சென்று வாகரைப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடியதுடன் அவர்கள் ஏந்திச்சென்ற சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

அங்கு இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் உரையாற்றினர்.

இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகவுக்கு அனுப்பி வைப்பதற்காக மகஜர் ஒன்றை வாகரைப் பிரதேச செயலாளர் எஸ். பாலசுப்பிரமணியத்திடம் கையளித்தனர்.

## காரணமில்லா கைதும் சித்திரவதையும்

கைகளிரண்டிலும் விலங்கிட்டு, கைவிலங்கை கதிரையில் பூட்டி இருந்த நிலையில், தனியறையில் தன்னை பன்னிரண்டு தினங்கள் அடைத்து வைத்திருந்ததாக ஜன. 2 ஆம் திகதி கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட செய்தியாளர் நடராஜா திருச்செல்வம் (47) தன்னைச் சந்தித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிக்கு வாக்குமூலம் கொடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜன. 14 ஆம் திகதியிலிருந்தே ஏனைய கைதிகளுடன் பொலிஸ் தலைமையகத்தின் ஆறாம் மாடியில் வைத்திருப்பதாகவும், தனியறையில் விலங்கிட்டு வைக்கப்பட்டிருந்த வேளையில் தான் எஸ்லோன் பைப்பினால் தாக்கப்பட்டதாகவம் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மனைவி பிள்ளைகளுடன் நெருங்கிய உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக கொழும்புக்குச் சென்றிருந்த வேளை, வெள்ளவத்தையில் அவர் தங்கியிருந்த வீட்டில் வைத்து பயங்கரவாதப் புலனாய்வு பொலிசாரினால் கைது செய்யப்பட்ட நடராஜா திருச்செல்வம் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

தனது மனைவியை ஒரு தடவை மாத்திரமே பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார். அவர் கைது செய்யப்பட்டு மூன்று வாரங்கள் கடந்து விட்ட போதிலும் அவர் என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டார் என்பது குறித்தோ, அவர் செய்த குற்றச் செயல்குறித்தோ பொலிசார் எதனையும் இன்னும் தெரிவிக்கவில்லை என்பதுடன், அவர் மீது குற்றச்சாட்டுக்கள் எதனையும் சாட்டி, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

*புதிய பண்பாட்டு அமைப்பும் சரிநிகரும் இணைந்து நடத்தும் மலையக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் — 2001*

மேற்படி போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. போட்டி விதிகள் வருமாறு:

*சிறுகதை*

- சிறுகதைகள், மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறுகதைகளின் தட்டச்சாயின் 5 பக்கங்களுக்கும், கையெழுத்தாயின் 10 பக்கங்களும் அமைய ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட வேண்டும்.
- ஆக்கங்கள் சொந்தமானதாகவும், முதலாவது முறையாக போட்டிக்கு சமர்ப்பிப்பனவாகவும் இருத்தல் வேண்டும்.

*கவிதை*

- கவிதைகள் மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினை அடிப்படை கொண்டிருத்தல் வேண்டும்.
- 150 வரிகளுக்குட்பட்டதாக அமைதல் வேண்டும்.

*கட்டுரை*

- மலையக அரசியல் புதிய தலைமைத்துவத்தை நோக்கி....
- மலையக இலக்கியங்களில் பிரதிபலிக்கும் வாழ்வியல்
- மலையகத் தமிழர் பண்பாட்டு உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு

ஆகிய தலைப்புக்களில் ஏதாவது ஒன்றாக இருக்க வேண்டும்.

4 பாடசாலை மாணவர்கள் தமது வகுப்பாசிரியர்களின் உறுதிப்படுத்தலுடன் ஆக்கங்களை அனுப்ப வேண்டும்.

4 போட்டி முடிவுத் திகதி 28.02.2001

4 நடுவர்களின் தீா்ப்பே இறுதியானதாகும்.

*பரிசுகள் 1ம் பரிசு ரூபா 3000ம் சான்றிதழும்*
*2ம் பரிசு ரூபா 2000ம் சான்றிதழும்*
*3ம் பரிசு ரூபா 1000ம் சான்றிதழும்*

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

*மலையக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் - 2001*

*சரிநிகர், 19/4, 1/1 நாவல வீதி, நுகேகொட*

நன்றி - நூலகத்திட்டம்



# போர் நிறுத்தம்:
# நீடிக்கும் புலிகளும்! நிராகரிக்கும் அரசும்!!

– அரவிந்தன்

நோர்வேயின் வேண்டுகோளை அடுத்துப் புலிகள் ஒப்புக்கொண்ட ஒரு மாத கால யுத்த நிறுத்த நீடிப்பு நடைமுறைக்கு வந்துள்ள போதும் அரச தரப்பு தொடர்ந்தும் வரிந்து கட்டிக் கொண்டு யுத்தத்திலேயே தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அரசினது கோரிக்கை-யான 'யுத்தம் புரிந்து கொண்டே பேச்சு-வார்த்தையில் ஈடுபடுவோம்' என்பதைப் புலிகள் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்குக் காரணமே மூச்சுவிட முடியாதபடி அவர்-களது கழுத்தைச் சுற்றி அரச பாதுகாப்புப் படைகளின் சுருக்கு இறுகியிருப்பது தான் என்று எழுதுகிறது அரசாங்கத்தின் ஊது-குழலான டெய்லி நியூஸ் பத்திரிகை. அதாவது புலிகள் யுத்த நிறுத்தத்தைச் செய்தாலென்ன செய்யா-விட்டாலென்ன அரசாங்கம் தொடர்ந்து அடித்துக் கொண்டு தான் இருக்க வேண்டும் என்பது அதன் விருப்பமாக உள்ளது. உண்மையில் இது-தான் அரசாங்கத்திலுள்ள ஏறக்குறைய எல்லோரதும் அபிப்பிராயமாகவும் உள்ளது.

அப்படியானால் புலிகள் இந்த யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட்டது சரியானதா என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் இதுவரை ஒரு யுத்த நிறுத்தத்தை அரசாங்க-மும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை நோர்வே வலியுறுத்தி அரசின் முன் வைத்ததாகத் தெரியவில்லை. ஏற்கெனவே முதலாவது போர் நிறுத்தத்தின் போது இங்கு வந்த சொல்ஹெய்முக்கு அரசுத்தரப்பினர் தமது 'போர் நிறுத்தமின்றி, விரும்பினால் பேசலாம் ' என்ற முடிவையே வலியுறுத்திக் கூறியிருந்தனர். அப்படியிருந்-தும் நோர்வே மீண்டும் ஒரு மாதகால போர் நிறுத்தத்தைப் புலிகளிடம் கோரியிருந்தது சற்று விநோதமான விடயமாக இருந்தாலும் கூட இவ்விடயத்தில் நோர்வேயின் பின்ன ணியில் நிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஒரு நம்பிக்கையான எதிர்பார்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இதை நம்புவதற்கேற்ற விதத்தில் எந்த நிகழ்வுகளும் வெளித் தெரிவ்தாக இல்லை.

ஒருவேளை ஐரோப்பிய ஒன்றியம் சமாதான முயற்சியில் இருதரப்பாருக்கும் இருக்கும் அக்கறையின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதக் கூடும். ஆனால் யுத்த நிறுத்தம் ஒருதலைப் பட்சமா-கச் செய்யப்படுவது அதைச் செய்யும் அணியின் தயார்நிலையை மட்டும் எடுத்துக் காட்ட முடியுமேயன்றி சமாதானத்துக்கான சூழலை உருவாக்கி விடப் போதுமானதல்ல. சமாதானத்திற்குத் தயார் என்று சொல்லிக் கொண்டே சமாதானத்தின் பெயரால் யுத்தத் தில் ஈடுபடவும் முடியும். இன்று இலங்கை அரசாங்கம் செய்து வருவது அதைத் தான். ஏன், ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள பல பெரிய நாடுகள் கூட தமது அயலுறவு விவகாரங்களில் இத்தகைய நடைமுறை களைக் கடைப்பிடித்து வந்துள்ளன.


உண்மையில் சமாதானம் என்பது என்ன என்பது குறித்து சர்ச்சைக்குரிய இருதரப்பாரிடமும் ஒரே விதமான கருத்து இருப்பதில்லை என்பதிலிருந்து தான் சர்ச்சைக்குரிய பிரச்சினையே ஆரம்பமாகி-றது. புலிகளுக்கும் அரசுக்கும் சமாதானம் குறித்து ஒரு கருத்து நிலவவில்லை என்பது வெளிப்படை. அந்த இருதரப்பாரும் தமக் குள் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பொது-வான நிலைப்பாட்டுக்கு வருவதற்கு உதவு வதே உண்மையில் ஒரு மூன்றாம் தரப்பின் பணியாக இருக்க முடியும். இந்த முயற்சி யில் ஒரு மூன்றாம் தரப்பு வெற்றி பெறுவது என்பது அது இந்த விடயத்தில் தனது பொறுப்பையும் பங்கையும் தெளிவாக விளங்கிக் கொண்டிருப்பதிலேயே தங்கியுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படு-வதற்குக் காரணமாக இருந்த மூன்றாம் தரப்பான இந்தியா தனது பொறுப்பையும் கடமையையும் மறந்து செயற்பட்டது. இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடை-யிலுள்ள பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காணும் பொறுப்பிலிருந்த இந்தியா அவ்விரு தரப்பும் சமாதானம் குறித்துக் கொண்டுள்ள கருத்திற்குச் செவிசாய்ப்பதை விட, தான் அது பற்றிக் கொண்டிருந்த கருத்தின் அடிப்படையில் செயற்பட்டது.

அதன் விளைவு ஒரு கசப்பான பாரிய யுத்தத்திற்கும் சமாதானத்திற்கான முயற்சி-களை ஒரு தசாப்த காலத்துக்கு மேலாகப் பின்தள்ளி விடவும் செய்தது.

இன்று மூன்றாம் தரப்பாக நின்று செயற்படும் நோர்வேயோ அதன் பின்னா-லுள்ள ஐரோப்பிய ஒன்றியமோ இந்த அனுபவத்தை நிதானமாகவும் அக்கறை-யுடனும் நோக்க வேண்டும். ஒருதரப்பைப் பலவீனப்படுத்தியும் இன்னொரு தரப்பைப் பலப்படுத்தியும் தமது சொந்த நலன்களுக்கு ஏற்ற விதத்தில் நிலைமைகளைச் சரிக்கட்டி-யும் சமாதான முயற்சிகளில் வெற்றி பெற்று விட முடியாது என்பதை அவர்களுக்கு யாரும் புதிதாகச் சொல்லித் தரத் தேவையில்லை.

மூன்றாம் தரப்பாக இந்த விடயத்தில் செயற்பட வந்துள்ள நோர்வேக்கும் அதன் சகாக்களுக்கும் வரப்போகிற முடிவு தங்க ளுக்குச் சாதகமானதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிச்சயம் இருக்கவே செய்யும்: செய்கிறது. ஆனால் அந்தச் சாதகத்தன்மை இந்தியாவின் நலன்களுக்கும் பாதகமானதாக அமைந்து விடுதலும் முடியாது என்பதையும் அவை அறியாதவை அல்ல. ஆகவே, இவை இரண்டும் இந்தச் சமாதான முயற்சியில் நிச்சயமான அதேவேளை தீர்மானகரமான ஒரு பாத்திரத்தை வகிக்கப் போகின்றன. இது சம்பந்தப்பட்ட இரு தரப்பாருக்கும் கூடத் தெரிந்து தானிருக்கிறது.



அதேவேளை, இரு தரப்பினரிடமும் நோர்வே தமக்குச் சாதகமாகச் செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆயினும் இந்தச் சூழலில் தாம் யாருக்கும் சாதகமாகச் செயற்படவில்லை என்ற ஒருநிலையை எடுப்பது மட்டுமே நோர்வே-யின் மீது நம்பகத் தன்மைகளை ஏற்படுத்த முடியும். அதன் மூலமே அது தன் சொந்த நலன்களைப் பேணிக் கொள்ளவும் முடியும். ஆனால் இந்த நம்பகத் தன்மை என்பது சும்மா வந்துவிட முடியாது. தனது சொந்த நலன்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களின் நலன்களுக்கும் இடையில் நோர்வே எப்படி ஒரு சமநிலையைப் பேணப்போகிறது என்ப திலேயே அது தங்கியிருக்கிறது. இந்தச் சம நிலை தவறுமானால் நோர்வேயினால் இங்கு ஒரு சமாதானம் ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட முடியாது.

இப்போது புலிகளை இரண்டாவது தடவையாகவும் போர் நிறுத்தம் செய்யுமாறு நோர்வே கோரியுள்ள சூழலில், வேறு பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்யும் இன்ரப்போலின் உசார் நிலை அறிக்கை இலங்கை இந்திய அரசுகளின் கோரிக்கையின் பேரில் வெளியிடப்பட்டுள் ளது. புலிகளைப் பிரிட்டனில் தடை செய்வ தற்கான சட்டபூர்வ ஆவணங்கள் தயாரிக் கப்படும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இந்திய அரசு முடிந்தளவுக்கு தனது நலனை இதில் ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தில் பிரபாகரனை நாடு கடத்துவது பற்றிய பேச்சை இப்போது எடுத்திருக்கிறது என்று நடந்து கொண்டி-ருக்கும் விடயங்கள் வெறும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்று அல்ல. அதேவேளை இலங்கை அரசு இப்போது தொடர்ந்தும் செய்து வரும் யுத்தத்தை யாரும் கண்டிப்பதாகத் தெரியவில்லை. அத்துடன் ஒரு பேச்சுவார்த்தைக்காக அது கையில் வைத்திருக்கும் விடயங்கள் என்ன? நாட்டில் எழுந்து வரும் சமாதானத்துக்கு எதிரான செயல்களுக்கு எதிராக அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் என்ன? என்பன போன்ற எந்தக் கேள்விகளும் அரசிடம் கேட்கப்படவில்லை.

இந்த நிலைமைகள் சமாதான முயற்சி-யில் ஈடுபடும் செயற்பாட்டாளர்கள் அவ சியம் கவனத்தில் எடுத்தாக வேண்டிய விடயங்களாகும். ஆயினும் இதுவரை இவை கணக்கெடுக்கப்பட்டதற்கான எந்த ஆதாரங்களையும் காண முடியவில்லை.

இது நோர்வேயின் முயற்சிகள் பலமி ழந்து போவதற்கான சூழலை உருவாக்கி விடவும் கூடும் என்பதை சம்பந்தப்பட்ட வர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

# மட்டு:
# படையினரின் தந்திரோபாயமும் பலியாகும்.....

– வி.ஜே.கே

வடக்குக் கிழக்கில் அரசும் இராணுவ மும் பொதுமக்களை தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து திசை திருப்புவதற்காக பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்-றன. இதன் முதற்கட்டமாக சிவில் சமூகத்துடன் இராணுவத்தினர் இரகசிய தமிழ்த்தேசிய முறிய டிப்புப் போரை நடத்தத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினையே இல்லை. நாட்டில் இருப்பது வெறும் பயங்கர-வாதப் பிரச்சினையே என்ற ஒரு மாயையை இனவாத அரசு தோற்றுவித்து வருகின்றது. இதற்காக அரச, தனியார் பிரச்சார சாதனங்-களையும், அரசுசார் தமிழ் அமைப்புக்களை-யும், அரச்சார்பற்ற நிறுவனங்களையும் மறைமுகமாக ஊக்குவித்து வருகின்றது.

இதனடிப்படையிலேயே மட்டக்களப்பில் அண்மைக் காலமாக படையினர் சிவில் சமூகத்தை நோக்கிய பார்வையில் களியாட்ட நிகழ்வுகளையும், நாடகப் பயிற்சிப் பட்டறை-களையும் நடாத்தி வருகின்றனர். இது ஒரு வகையில் தமிழ் மக்களின் மூளையைச் சலவை செய்யும் ஒரு நிகழ்வாகவே தோன்றுகிறது. இத்தகைய செயற்பாடுகள் தமிழ் மக்களின் கைகளைப் பற்றிக் கொண்டு காலைத் தட்டி விடும் தந்திரோபாயமாகும்.

அண்மையில் நடந்தேறிய களியாட்ட விழா இளைஞர்கள் மத்தியில் புதியதொரு நச்சுக் கலாசாரத்தை விதையிட்டு சென்றுள்-ளது. அரை மார்பு தெரிந்த வண்ணம் பியர் வியாபாரத்தில் ஈடுபட்ட நங்கைகள் போத்தல்-களை நீட்டியவுடன், தட்டுத் தடுமாறி எதைப் பற்றியுமே சிந்திக்காமல் 'சோற்றுக்குக் கேடும் பூமிக்கு பாரமும்' என்று திரிந்த இளவட்டங்கள் அதை எட்டிப் பிடித்துக் கும்மாளமிட்டனர். மட்டக்களப்பில் எதைச் செய்யவேணுமென்று அன்ரனீஸ் நினைத்து நங்கைகளை இறக்குமதி செய்தாரோ அதில் அவர் திருப்தியும் கண்-டுள்ளார். இந்தக் நச்சுவிதைகள் இளசிலேயே தோண்டி எறியப்படாவிட்டால் கிளைவிட்டு விருட்சமாவதற்கும் இடமுண்டு.

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் நாடகப் பயிற்சிப் பட்டறையும் ஒருவகையில் மாண-வர்களை திசைதிருப்பும் உத்திகளில் ஒன்று தான். நாடகம் பலம் மிக்கதொரு ஊடகம். இதனால் சமூகத்தில் மக்கள் மத்தியில் எதை-யும் சாதிக்கலாம், அந்த வலிமை மிக்க ஊட-கத்தை அன்ரனீஸ் கையாண்டுள்ளார். மட்டக்-களப்பில் நாடகத்தில் தேர்ச்சி பெற்ற பலர் இருந்தும் அதைச் செய்வதற்கான நிறுவனங்-கள் இருந்தும் இன்று இராணுவத்தினர் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள நாடகக் கலைஞர்-களைக் கொண்டு வந்து பட்டறை நடத்து-கின்றனர்.

அண்மைக் காலமாக பாதுகாப்பு தரப்பி-னரின் இராணுவ சமூக உறவாடல் அணுகு-முறைமை சிவில் சமூகத்தை நோக்கி திரும்பி-யிருப்பது: மக்களது இயல்பு வாழ்க்கையை இலகுபடுத்துவதற்கானது என்ற ஒரு தோற்-றப்பாட்டை உருவாக்கவே. உண்மையில், இது மக்களின் பகுத்தறிவை மழுங்கடித்து இராணுவ அணுகுமுறை மூலமாக மேலும் ஒரு படி இறுக்கமான நிலைக்கு தள்ளுவதாகவே அமைந்துள்ளது.

இந்த அடிப்படையிலேயே பலம்மிக்க-தாக இருந்துவரும் உள்ளூர் செய்தியாளர்-களை பகைத்துக் கொள்ளாத வகையில் தங்களின் வெகுசன நண்பர்களாக வைத்துக் கொண்டு செயற்படுவதில் இராணுவத் தரப்பினர் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகின்றனர். உள்ளூர் செய்தியா ளர்களை வைத்தே "தமது கருத்தியலை மக்க-ளுக்குள் கொண்டு செல்லலாம். மக்களிடமி-ருந்து தகவல்களைக் கொண்டு வரலாம்" என்ற இராணுவத் தந்திரோபாயத்தை பின்பற்றிய நடைமுறையையே ஸ்ரீலங்கா இராணுவத்-தினரும் கடைப்பிடித்து வருகின்றனர்.

இராணுவத்தினர் "ஒருபோதும் இந்தச் செய்தியைப் போடு. இதைப் போட வேண்-டாம்" என்றெல்லாம் சொல்லமாட்டார்கள். நாங்களாகவே அவர்கள் நினைப்பதைச் செய்-யக் கூடியவர்களாக மாற்றப்பட்டு விடுவோம். இது இன்றுள்ள யதார்த்தம். இந்த வகையில் தான் பத்திரிகைகளையும் செய்தியாளர்களை-யும் இராணுவத்தினர், பயன்படுத்தப் பார்க்-கின்றனர்.

இதனொரு அங்கமாகவே அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ் அமைப்புக்களும் தமிழ் பிரதிநிதிகளும் இராணுவப் புலனாய்வு தந்திரோபாய அறிவு-றுத்தல்களுக்கமைவாக அரசினால் பயன்படுத்-தப்படுகின்றார்கள். இது "நாயை ஆட்டும் வால்" இந்த வகையிலேயே இவர்கள் தமிழ் மக்களுக்கெதிரான அரசபயங்கரவாதச் செயற் பாடுகளுக்கு துணைபோவதோடு அதன் பிரச் சாரப் பீரங்கிகளாகவும் செயற்படுகின்றனர்.

அரச பிரச்சார சாதனங்கள் உண்மைக் குப் புறம்பான செய்திகளையும் கருத்திய லை-யும் மக்கள் மத்தியில் பரவவிட்டுக் கொண்டி-ருக்கின்ற நேரத்தில், தனியார் சாதனங்களை-யும் தமிழ் தேசியத்துக் கெதிராக மறைமுகமாக ஊக்குவிப்பதற்கு அரசு தவறவில்லை. இந்த வகையில் இன்று சக்தி முன்னணியில் திகழ் கின்றது. சக்தி ரிவியும், சக்தி வானொலியும் தமிழ் இளைஞர் யுவதிகளை உய்ய முடியாத-படி தனது கையை விரித்துள்ளது.

தமிழைத் தமிழாய்த் தரும் இவர்கள் கண்டிய நடனத்துடன் சங்கர் மகாதேவனை வரவேற்கிறார்கள். சப்பாத்துக் காலுடன் நின்று பொங்கல் பானைக்கு அரிசி போடுகின்றார்கள். இவர்கள் தானா தமிழ் வளர்ப்பவர்கள் என்-கிறார் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திலுள்ள விரிவுரையாளர் ஒருவர். இப்படிப்பட்ட இவர்-களுக்கு அரசின் ஆதரவு இருக்கத்தான் போகின்றது.

இது மட்டுமன்றி இராணுவத்தினர் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் மக்களை மூளைச்சலவை செய்யப் பார்க்கின்றார்கள்.

⇨ 20

நன்றி - நூலகத்திட்டம்



## முஸ்லிம் காங்கிரஸ்:
# தேவை ஒரு கூட்டுத்தலைமையே!
### - சித்தீக்கிற்கு ஒரு பதில்

– அர்சலான்

சில முக்கிய பிரச்சினைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் போராட்டத்தில் முதன்மையானது "கொழும்பு தலைமைத்துவத்திற்கு எதிரான போராட்டமே" என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அரசியல் பிரவேசத்திற்கு பிழையானதும் அர்த்தமற்றதுமான ஒரு காரணத்தை கற்பிக்கும் வை.எம்.எம்.சித்தீக் என்பவரின் "தேவை ஒரு கிழக்குத் தலைமை" என்ற சரிநிகர் இதழ் 210ல் வெளிவந்த கட்டுரையை தெளிந்த சிந்தனையுடனும், பரந்த மனதுடனும் வாசிக்கும் எவரும் நிராகரிக்கவே செய்வர்.

பிரதேசவாதம் முஸ்லிம்களிடையே இருக்கக் கூடாத ஒரு பண்பு. இருந்த போதிலும் கிழக்குத் தலைமை தான் தேவை என்று கூறும் அக்கட்டுரை ஆசிரியர் அதற்கான ஆதாரங்களையும் நியாயங்களையும் கூட மிகவும் தெளிவாகக் குறிப்பிடாமல் இருப்பது வெறுமனே பிரதேச வெறியின் அடியாகவும் அறிவுபூர்வமான சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவும் எழுந்த கருத்தாகத் தான் இருக்க முடியும் என்ற எண்ணத்தை வாசகர்களுக்கு ஏற்படுத்துகிறது.

மிகச் சிக்கலுக்கு மத்தியில் அக் கட்டுரையாசிரியரின் நியாயங்களை அவரின் கட்டுரையிலிருந்து பொறுக்கி எடுப்போமானால், அதனைப் பின்வருமாறு நிரைப்படுத்த முடியும்.

1. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அரசியல் பிரவேசத்திற்கும், போராட்டத்திற்குமான முதன்மை நோக்கம் கொழும்புத் தலைமையை நிராகரிப்பதும், அதற்கெதிராக போராடுவதும், இதற்கு அவரின் எழுத்துக்களும், மேடைப் பேச்சுகளுமே ஆதாரங்கள்.

2. இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை பாதுகாக்க தலைவர்கள் கிழக்கில் பிறக்க வேண்டும். காரணம் முஸ்லிம் சமூக சனத்தொகை செறிவு இங்கு காணப்படுகிறது.

3. முன்னாள் தலைவருக்கு நன்றிக் கடனாக தலைமைத்துவம் கிழக்குக்குச் செல்ல வேண்டும். காரணம் அவர் கிழக்கைச் சேர்ந்தவர்.

4. கிழக்குத் தலைமை இல்லாவிட்டால் நமது இன அடையாளமே அழியும் ஆபத்து.

மேலுள்ள கருத்துக்களையும், காரணங்களையுமே கட்டுரையின் உள்ளடக்கத்திலிருந்து பெறக் கூடியதாகவுள்ளது.

மேலுள்ள கருத்துக்களை கவனமாக சிந்திப்போமானால், அவை எந்தளவுதூரம் பார தூரமானதும், சமூகத்தில் அபாயகரமான விளைவுகளை எற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன என்பதனை விளங்கிக் கொள்ள முடியும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தலைவரின் பேச்சுக்கள் எழுத்துக்கள் கொழும்புத் தலைமைக்கு எதிராக இருந்தன என்பதற்காக கிழக்குத் தலைமை தான் வேண்டும் என்று நியாயப் படுத்திவிட முடியாது. உண்மையில், எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைத்துவத்தை மட்டுமல்ல கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் காரசாரமாகச் சாடினார்.

எனவே தலைவரின் நோக்கம் "பேரினவாதக் கட்சிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் தலைமையை விமர்சிப்பதும், நிராகரிப்பதுமாக இருந்ததே தவிர, தென்னிலங்கை தலைமைத்துவத்தை முற்றாக நிராகரித்து கிழக்குத் தலைமையை நியாயப் படுத்துகின்ற ஒரு குறுகிய கேவலமான நிலையில் இருக்கவில்லை. ஒரு தடவை தலைவர் அவர்கள் முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ்.- ஹமீத் அவர்களை மு.காவுக்குள் அல்லாஹ் நுழைவித்து அதனை வழிநடத்த வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்திக்கிறோம் என்று கூட மேடைகளில் பேசியிருப்பதும், தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கும் கலாநிதி பதியுத்தின் மஹ்ரூப் அவர்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பும், கருத்தியல் உடன்பாடுகள் இருந்ததும், இதற்குத் தக்க சான்றுகளாகும். எனவே தலைவர் அவர்களின் நோக்கம் பேரினவாத கட்சிகளில் உள்ள முஸ்லிம் தலைமைகளை ஏற்கமுடியாது என்ற சிந்தனை தான்.

இதன் விளைவு தான் அவரின் எழுத்துக்களும், மேடைப் பேச்சுக்களுமாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு மு.காவுக்குள் கிழக்குத் தலைமை தான் வேண்டும் என்பது குறுகிய மனோநிலையின் வெளிப்பாடே.

ஒரு பிரதேச மக்களின் சனத்தொகை செறிவு அச்சமூகத்தின் தலைமைத்துவத்தின் காரணமாகவோ, அச்சமூகத்தின் தனித்துவத்திற்கு பாதுகாப்பாகவோ அமைய முடியாது. கொள்கைப்பற்றும், சமூக உணர்வுமுள்ள எவராலும் சமூகத்தின் தனித்துவத்தைப் பாதுக்க முடியும். கிழக்கில் பிறந்தவர்களால் மட்டுமே தட்டிக் கேட்கும் தைரியத்துடன் செயற்பட முடியும் என்ற கட்டுரையாசிரியரின் கருத்து மிகவும் பொருத்தமற்ற ஒன்றாகும். தூய்மையான உள்ளமும் சமூக உணர்வுமுள்ள எவராலும் அவர்கள் பேரினவாதக் கட்சிகளில் இருந்தாலும் சரி, தட்டிக்கேட்க முடியும். தமது பதவி பறிபோய்விடுமோ என்ற அச்சம் உள்ளவர்கள் அவர்கள் தனித்துவக் கட்சியில் இருந்த போதிலும், அவர்கள் சமூகத்திற்கு பிரயோசனமற்ற வெறும் மரக் கட்டைகளாவே இருப்பர். இவர்களால் தட்டிக் கேட்கவும் முடியாது. தனித்துவம் பேணவும் முடியாது.

அ. அமிர்தலிங்கம் பேரினவாதக் கட்சிகளுக்கு கோவிந்தா போட்டுக் கொண்டிருந்திருந்தால் புத்தளம் பள்ளியில் சுடுபட்ட முஸ்லிம்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்க முடியுமா?

எனவே தனித்துவத்தைப் பாதுகாக்கவும் தட்டிக்கேட்கும் தைரியம் பெறவும் முஸ்லிம் சமூகம் செறிவாக வாழும் பகுதியில் பிறக்க வேண்டும் என்பது அர்த்தமற்ற வாதமாகும். கொள்கைப்பற்றும், சமூக உணர்வுமுள்ளவரும் அவர் கண்டியில் பிறந்தாலும் சரி, கல்முனையில் பிறந்தாலும் சரி, அவரால் நீதியான அரசியல் செய்ய முடியும் என்பதே யதார்த்தமாகும்.

எனவே தலைமைத்துவம் தொடர்பாக, குறிப்பாக இலங்கை முஸ்லிம்களின் தலைமைத்துவம் தொடர்பாக, கருத்தில் சிந்திக்கின்ற நபர்கள் நமது கொள்கை சூழல் இரண்டையும் கொண்டே சிந்திக்க வேண்டும். இரண்டையும் முரண்பட்ட நிலையில் வைத்து சிந்திப்பது பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். நமது கொள்கை பிரதேசவாதத்தை நிராகரிக்கிறது. எனவே பிரதேச உலகத்தை மையப்படுத்திய நச்சுக் கருத்துக்களை அரசியல் தலைமைத்துவம் தொடர்பான சிந்தனையாக முன்வைப்பது பெரும்பாவமும் கூட. அதே நேரத்தில் பௌதீக சூழலையும் கருத்திற் கொண்டோமானால், உண்மையில் தலைமைத்துவம் என்பது ஒருமையல்ல. அது பன்மையாகவே இருக்க வேண்டும். இஸ்லாம் கூறும் 'ஷூறா" எனும் கலந்தாலோசனை முறையே இவ்வாறான பிரச்சினைக்கு ஒரே தீர்வாக இருக்க முடியும். கடந்த காலங்களில் முன்னாள் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் இந்த ஷூறா முறையை நூறுவீதம் பேணாமையும், தன்னிச்சையான முடிவுகளை மேற்கொண்டமையும் அவ்வவ்போது கட்சியின் உள்ளேயும் வெளியேயும் காரசாரமாக விமர்சிக்கப்பட்ட கசப்பான உண்மைகளையும் நாம் ஏற்றாக வேண்டும்.

அந்தவகையில் தற்போது மு.காவுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினையோடு இந்த ஷூறாவுக்கு மீள் உயிர் ஊட்டும் பொறுப்பு தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு உண்டு. இதனை தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் செய்வார்களேயானால் மு.கா. மீது மட்டுமல்ல அதன் முன்னைய தலைமைத்துவத்தின் மீதும் சில புத்திஜீவிகளுக்கும் உலமாக்களுக்கும் இருந்த அதிருப்தியை நீக்குவதோடு, இலங்கை வாழ் உலமாக்களின் பெரும் மதிப்புக்கும் கண்ணியத்திற்கும் உரியவராக இருப்பார். இச்சந்தர்ப்பத்தினை ஒன்றாக அவர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நியாயமாக சிந்திக்கும் எவரும் இந்த விடயத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலை விரும்புவதோடு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையும் இதனையே வரவேற்கும்.

எனவே ஷூறா அமைப்பை உருவாக்கி அதனூடாக முஸ்லிம் சமூகத்துக்கு ஆக்கபூர்வமான சேவையை முஸ்லிம் காங்கிரஸ் வழங்குவதே இன்றைய அதிமுக்கிய தேவை. ⊙

---

# முட்டாள்கள் ஆவது எப்போ?

முட்டாள்கள் மூன்று வகைப்படுவார்கள் என்று கூறுவர்.

முதலாவது ரகத்தினர் தாம் முட்டாள்கள் என்பதையே அறியாத முட்டாள்கள்.

இரண்டாவது ரகத்தினர் தாம் முட்டாள்கள் தான் என்பதை அறிந்த முட்டாள்கள்.

மூன்றாவது ரகத்தினரோ, தாம் முட்டாள்கள் அல்ல, புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.

இதில் முதலாவது ரகத்தினர் அப்பாவிகள். இரண்டாவது ரகத்தினர் சிறந்தவர்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் எதையாவது செய்கையில் யாரிடமாவது ஆலோசனை கேட்கவாவது தோன்றும்.

மூன்றாவது ரகத்தினரோ மிகவும் மோசமானவர்கள். ஆபத்தானவர்களும் கூட. அவர்கள் தமது 'புத்திசாலித் தனத்தால் எல்லாவற்றையும் கெடுத்து விடுவார்கள்.

இலங்கையின் வரலாற்றில் பதவிக்கு வந்த எல்லா அரசியல் தலைவர்களும் இந்த மூன்றாவது ரகத்தினரே - இன்றைய பொ.ஜ.மு அரசாங்கத்தின் மதிப்பிற்குரிய தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க உட்பட!

அவர்கள் இந்த நாட்டை வளமூட்டுவதாகக் கூறிக்கொண்டு படுகுழியில் தள்ளிவிட்டிருக்கிறார்கள்!

புலிகளையும், தமிழர் போராட்டத்தையும் நசுக்கிவிட முடியும் என்று நம்பவும் திரும்பத் திரும்ப விழுந்த குழியிலேயே விழவும் 'புத்திசாலி முட்டாள்களைத் தவிர யாருக்குத்தான் சாத்தியம்?

இது இந்த நாட்டினதும் மக்களதும் தலைவிதியா அல்லது முட்டாள்தனமா?

ஒருவேளை, இந்த அரசாங்கங்களை உருவாக்க விரும்புகிற நாம் எல்லோரும்கூட 'புத்திசாலி' முட்டாள்கள் தானோ?

நாம் எப்போது எம்மை உணர்ந்த 'முட்டாள்கள் ஆகப் போகிறோம்?

# நிவாரண அரசு!

நிவாணரம் வழங்குவதில் இந்த அரசுக்கு நிகர் அதுதான். புயல் வெள்ளமா? யுத் இடப்பெயர்வா? விலைவாசியா அதிகரிப்பா,எல்லா ற்றிற்கும் அரசிட கையில் இருக்கிற ஒரே சொல் 'நிவாரணம் வழங்கப்படும்!

அண்மையில் எரிபொருள் விலை ஏற்றம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் மீன்பிடித்துறை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றார்.

எரிபொருள் விலையேற்றம் பற்றி முடிவெடுக்கும் போது அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று இந்த அமைச்சருக்கு தோன்றாமல் போனது எப்படி? பிறகு தாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்று மக்கள் முறையிடும்போது நிவாரணம் தர தயாராக இருப்பதாக கூறுவதன் அர்த்தம் என்ன? நிவாரணம் வழங்கப் பணம் தர அவருக்கு நிதி எங்கிருந்து கிடைக்கப் போகிறது? அந்த நிதியைப் பாவித்து முதலே விலை அதிகரிப்பை சரி செய்திருக்கலாமே?

அமைச்சர் மீன்பிடியோடு சம்பந்தப்பட்டவர்களின் பாதிப்பு பற்றி மட்டும் பேசுகிறார். மற்றவர்களின் கதி என்ன? அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது அவசியம். அது தவிர்க்க முடியாததும் கூட.

ஆனால், யுத்த அழிவு: இதனால் வரும் இடப்பெயர்வு, விலைவாசி ஏற்றம்,.. இவை அரசு நினைத்திருந்தால் தவிர்த்திருக்கக்கூடியவை.

ஆனாலும் அது அப்படிச் செய்வதில்லை.

குற்றத்திற்கு பிராயச்சித்தம் இருப்பது எப்போதும் குற்றத்தை ஊக்குவிக்கவே செய்யும். நிவாரணம் இருக்கும் வரை அரசின் குற்றச்செயல்ளை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

எரிபொருள் கொம்பனிகள், மற்றும் உலக வங்கி உள்ளிட்ட கடன் வழங்குவோரது தாளத்துக்கு ஆடும் அரசின் மாய்மாலம் தான் இந்த நிவாரணம்.

இதற்கு எப்போது தான் முடிவு வரப்போகிறது? மக்கள் எப்போது தான் எதிர்த்து எழப் போகிறார்கள்...?

'அது வெறுமனே பிராயச்சித்த விவாகரம் இல்லைப் பாரும். அதுக்கு மேலையும் இருக்கு. நிவாரணம் குடுத்தால் தானே அமைச்சற்றை ஆக்களுக்கு 'வெட்டுக் கொத்து' ஆப்பிடும். நிவாரணம் என்பது வெறும் பேருக்குத்தான். பாதிக்கப்பட்டவர்கள் அதைக் கண்ணால் காண்பது அரிது. அது கிடைக்காத பாதிப்புக்கு ஒரு போதும் யாரும் நிவாரணம் தருவதில்லை. அதைப்பற்றி யாரும் பேசுவதில்லை."

-இது சக பத்திரிகையாளர் ஒருவரின் அனுபவ முணுமுணுப்பு.

உண்மை, வெறும் பேச்சு அல்ல. ⊖

நன்றி - நூலகத்திட்டம்



# போர்க்களத்தின் வெற்றியை தீர்மானிப்பது எது?

- சஞ்ஜித்

ஒரு போர்க் களத்தில் வெற்றி பெறுபவர் யார்? நடந்து கொண்டிருக்கும் வடபுலச் சமரின் இன்றைய கள வெற்றி யாருக்கு?

- இந்தக் கேள்வியே இன்று எல்லோர் முன்னும் எழுந்துள்ள ஒரு முக்கிய கேள்வி.

எம்மிடம் இருந்த சுடும் ஆற்றலின் சிறப்புத்தான் கினிஹிர - 9 இல் நாம் பெற்ற வெற்றிக்குப் பெரும் உதவியாக இருந்தது என்ற போதும் துருப்புக்களின் துணிவும் உறுதியும் கூட முக்கியமான பங்கை ஆற்றின' என்கிறார் கினிஹிர நிகழ்வின் 'சாதனை' குறித்துக் கருத்துத் தெரிவித்த அரச பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா.

கடந்த வருடம் ஏப்பிரல் மாதமளவில் புலிகளிடம் இழந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுத் தளத்தை மீளக் கைப்பற்றிக் கொள்ளும் படையினரின் திட்டம் புலிகளது ஒரு மாதகால போர் நிறுத்த அறிவிப்புடன் புத்துாக்கம் பெற்றது. புலிகளிடமிருந்து கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் என்பவற்றை ஒரு கோட்டால் இணைத்தது போன்ற பகுதியைத் தனது கைக்குள் மீளக் கைப்பற்றிக் கொள்வதில் புலிகளின் இந்தப்போர் நிறுத்தம் இராணுவத்திற்கு உதவியிருக்கிறது. இந்தப் பகுதிக்குள் வரமுடிந்ததால் உற்சாகம் பீறிட கினிஹிர - 9 துருப்புக்கள் தெற்கு நோக்கி நகர்ந்து தமது ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்கத்தை நடைமுறைப் படுத்தத் தொடங்கின.

> இந்தவகையில் இன்று புலிகள் எடுத்துள்ள முடிவு ஒரு வெற்றிகரமான முடிவு. முகமாலைச் சந்தியைக் கைப்பற்றி விட்ட கிளுகிளுப்பை அனுபவிக்கும் வாய்ப்பினை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது உண்மையே. ஆனால், அதற்காக அது செலவழித்த வளங்கள் இந்தக் கிளுகிளுப்புக்கு கொடுக்கப்பட்ட நியாயமான விலையா என்பதை காலம் அதற்கு உணர்த்திவிடும்

ஆயினும், சென்ற வாரம் இப்பத்தியில் எழுதியது போலவே இராணுவத்தினரால் அக்குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாத பாரிய நெருக்கடியை புலிகளின் பதில் தாக்குதல் ஏற்படுத்தவே இந்தப் படை முன்னேற்றம் நிறுத்தப்பட்டது. தாக்குதல் நடவடிக்கை ஸ்தம்பித்தது. இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது மீளவும் இலங்கைப் படைகள் தமது பூரண பலத்தைத் திரட்டிக் கொண்டு போரில் குதித்துள்ளனர்.



இலங்கை இராணுவத்திற்கு இழந்த, ஆனையிறவை மீளக் கைப்பற்றுதல் என்பது இன்றைக்கு வெறுமனே 'கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த' நிலையை மீட்டெடுப்பது என்பதை விடவும், தனது பெயரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இது முக்கியமானது என்பதே பிரதான அக்கறைக்குரிய விடயமாகும். 'ஆனையிறவை மீளக் கைப்பற்றுவது என்பது இராணுவத்தின் மீதான நாட்டின் நம்பிக்கையை மீளுறுதி செய்வதுடன் பெருமளவில் படையில் ஆட்கள் சேருவதற்கும் சந்தேகமில்லாமல் உதவும்' என்று எழுதுகிறது கொழும்புப் பத்திரிகை ஒன்று.

ஆம், இந்த 'வெற்றிக்கான யுத்தத்தின்' பின்னால் உள்ள மனோவியல் இதுதான். போருக்கு ஆட்சேர்ப்பு என்பதை, தொடர்ச்சியான வெற்றிகர யுத்தங்களை நடத்திக் கொண்டிருக்கும் போது மட்டும் வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்று அது கருதுகிறது. இந்த மனோவியல்.

அரசியல் ரீதியாக நடாத்தப்படும் போரின் அவசியத்தை உணர்ந்தவர்கள் தாமாகப்போய் சேர்கின்ற ஒரு அமைப்பு அல்ல அரச யுத்த இயந்திரம். அது அதிகாரிகளினது, கட்டுப்பாடுகட்கும், வழிநடத்தல்கட்கும், உட்பட்ட, பணமும், இதர படிகளும், வழங்குகின்ற, இலங்கையின் மிகப்பெரிய தொழில் வழங்கும் அரச நிறுவனமாகும். இந் நிறுவனத்தில் தொழிலுக்காக, வருமானத்திற்காக, சாகச ஈடுபாட்டிற்காக மற்றும் பிற தீய நோக்கங்களுக்காக சேர்பவர்களின் தொகையே அதிகம். நிரந்தரமான சம்பளம், அதுவும் அளவுக் கதிகமான சம்பளம் கிடைப்பதுடன், ஒரு சமூக அந்தஸ்தும், கௌரவமும், கிடைக்கிறது. கேட்க ஆளற்ற, விமர்சனத்துக்கு பெரிதும் அப்பாற்பட்ட ஒருவர் என்ற ஒருவித சலுகையும், கிடைக்கிறது. இவர்களில் வெகுசிலரே இனவாத வெறிக்கூச்சல் போடும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் வழங்கப்படும் அரசியல் வழிகாட்டல் மற்றும் நோக்கங்களுக்காக படையில் சேர்கின்றனர்.

ஆக, இவர்களில் பலரும் தமது உயிரை தியாகம் செய்து தாய் நாட்டைக் காப்போம் என்ற அரசியல்வாதிகளின் போலிக் கவசத்தை அணிந்து கொண்டு படையில் சேரவில்லை. அரசாங்கம் படைக்கு ஆள்திரட்ட செய்யும் விளம்பரங்களில் தெரிவிக்கும் கருத்தெல்லாம் 'கௌரவமும் ம்திப்பும் மிக்க குதூகலமான ஒரு வாழ்க்கையை நோக்கிச் செல்வதற்கு வாருங்கள் என்று அழைப்பதாகவே இருக்கிறது. எனவே அரச படை போரில் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்தால் அதில் சேர்வோர் தொகை குறையவே செய்யும். கடந்த ஏப்பிரலில் ஆனையிறவு வீழ்ச்சியடைந்த பின் பல தடவை அரசு படை திரட்டலில் தீவிர கவனம் செலுத்தியிருந்த போதும், படையில் சேர்வோர் தொகை மிகவும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. இந்த விடயத்தைத் தான் நான் மேலே குறிப்பிட்ட பத்திரிகை எழுதியிருக்கிறது.

இதன் காரணமாக புலிகள் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டாலும் சரி, ஈடுபடாவிட்டாலும் சரி, தன்னை எப்படியும் யுத்தத்தில் ஈடுபடுத்தியே ஆக வேண்டும் என்ற நிலையில் இருக்கிறது இராணுவம் இன்று.

இராணுவத்தின் கினிஹிர படை நடப்புக்கு பலமூட்டும் விதத்தில் வான் படையின் MiG 27 விமானங்கள் எட்டும், அவற்றை ஓட்டுவதற்கு உக்ரேனிய விமானிகளும், ஒரு டசின் கிபிர் (C-2) விமானங்களும், பெரும் பங்காற்றியுள்ளன. வானிலிருந்து வீசப்படும் குண்டுகளுடன் சேர்ந்து தரையில் 'மல்ரி பரல் றொக்கற் லோஞ்சர்கள்' என்று அழைக்கப்படும் (பல்குழல் கனரக துப்பாக்கிகள் MPRL) களால் தாக்கியபடியே இராணுவம் முன்னேறியது. இருந்தும், புலிகளது செல்கள், ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள் போன்றவற்றை ஊடறுத்து அவற்றால் முன்னேறிவிட முடியவில்லை. இதனால் போரை இடைநிறுத்திய படையினர் மீண்டும் இரண்டு நாள் இடைவெளிக்குப் பின் இம் முயற்சியில் இப்போது குதித்துள்ளனர்.

இந்த இடத்தில் போர்க் களத்தின் வெற்றியை தீர்மானிப்பது எது என்ற கேள்வி எழுகிறது. ஆயுத பலமும் ஆட்பலமும் அதிகமாக உள்ள ஒருவர் அழிவு பற்றியோ, போருக்கான செலவு பற்றியோ அக்கறையின்றிச் செயற்படத் தயாராக இருப்பார் என்றால், அவருக்கு போரில் வெற்றிபெறும் வாய்ப்பு உண்டு.

இன்று புலிகளுக்குஎதிராக கினிஹிர - 9 இல் ஈடுபடும் படையினருக்கு இம்மூன்று விடயங்களும் சாதகமாக உள்ளன. வான்படையினையும், விமானத்தையும் கொண்டிருப்பதால் படைச் சமநிலையில் எப்போதுமே அரச தரப்பு மேலோங்கி இருக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. அந்த விதத்தில் புலிகள் தரப்பில் உள்ள பலமான அம்சம் பூகோள அறிவும் அனுபவமும். உறுப்பினரின் இலட்சிய வேகமும், நினைத்த வடிவுக்கு தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புமாகும். நோர்வேயின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டுமொருமுறை போர் நிறுத்தத்துக்கு தயார் என்று ஒரு மாதகால போர் நீடிப்பை அறிவித்த புலிகள் 'தாம் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க தயார்' என்று குறிப்பிட்டிருப்பது வெறும்னே அரசியல் ரீதியான செயற்பாடு மட்டுமல்ல, தமது மேற்சொன்ன பலத்தையும் எதிரியின் பலத்தையும் புரிந்து கொண்டு எடுக்கப்பட்ட ஒரு முடிவும் கூட.


போரில் தமது வளங்களைப் பயன்படுத்துவதில் அக்கறையற்ற ஒரு அணி ஒரு போதும் இறுதி வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைக் கொண்டிருக்க முடியாது. புலிகள் தமது வளங்கள் பற்றிய தெளிவான கணிப்புடன் அவற்றை வீணே அழித்துக் கொள்ளாமல், பின்வாங்குவது என்ற முடிவை நோக்கிச் சென்றுள்ளது வரவேற்கத்தக்க ஒரு சரியான முடிவே. போர்களமொன்றிலிருந்து பின் வாங்குவது என்பது இன்னொரு வெற்றிகரமான தாக்குதலை உரிய தருணத்தில் நடாத்த அவசியமானதும் கூட.

இந்தப் போர் நிறுத்த காலம் முதல், அரசாங்கம், முடிந்தளவுக்கு புலிகளை ஆத்திரமூட்டி சண்டைக்கு இழுக்கவே முயன்றது. 'நீங்கள் உங்கள் வழியில் போரிடுங்கள். நாம் எங்கள் வழியில் போரிடுவோம்' என்று சீனப் புரட்சியின் தலைவர் மாவோ சொன்னது போல, புலிகள் தங்கள் வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அரசின் ஆத்திரமூட்டலால் அவர்கள் துாண்டப்படவில்லை. ராஜதந்திர முதிர்ச்சியுடனும், தமது இராணுவ ரீதியான கணிப்பீட்டின் அடிப்படையிலும் அவர்கள் போர் நிறுத்தத்தை நீடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் அரசியல் இராணுவ வெற்றிகள் இரண்டையும் ஒரு சேரச் சாதித்திருக்கிறார்கள்.

ஆக, போர் களமொன்றில் வெற்றி பெறுபவர்கள் யார் அல்லது எது?

கனரக ஆயுதங்களா? ஆட்பலமா? அல்லது போரிடும் துருப்புக்களின் மனோபலமா?

உண்மையில், போர்க்களமொன்றில் அணியின் வெற்றி இவற்றினால், தீர்மானிக்கப்படுவதில்லை. யுத்த களம் ஒரு குத்துச் சண்டை மேடை போன்றது அல்ல, ஒரு நாள் வெற்றியுடன் ஓராண்டு காலம்



'சாம்பியன்' ஆக உலவுவதற்கு. அதில் கிடைக்கும் வெற்றி அடுத்த நாளே கூடப் பறி போகலாம். அப்படிப் பறிபோகக் கூடிய ஒரு வெற்றிக்காக, அளவுக் கணக்கின்றி வளங்களை வீணடிப்பது தேர்ந்த போரியல் அறிவியலாளர்களினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

ஆக, களத்தில் வெற்றி பெறுவது முழுமையான ஆய்வுக்குப்பின் எடுக்கப்படும் சரியான முடிவு தான். வெற்றி பெறுபவர் அந்த முடிவை எடுப்பவர் தான்.

இந்தவகையில் இன்று புலிகள் எடுத்துள்ள முடிவு ஒரு வெற்றிகரமான முடிவு. முகமாலைச் சந்தியைக் கைப்பற்றி விட்ட கிளுகிளுப்பை அனுபவிக்கும் வாய்ப்பினை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது உண்மையே. ஆனால், அதற்காக அது செலவழித்த வளங்கள் இந்தக் கிளுகிளுப்புக்கு கொடுக்கப்பட்ட நியாயமான விலையா என்பதை காலம் அதற்கு உணர்த்திவிடும்.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் மட்டுமே வெற்றியின் அடையாளங்களாக நின்று நிலைப்பதில்லை. கைப்பற்றிய பிரதேசத்தை ஆளவும், அதை அனுபவிக்கவும், அதில் தன்னை வளர்த்துக்கொள்ளவும், நின்று நிலைக்கவும் முடிகிற ஸ்திரப்பாட்டை உருவாக்கும் போது மட்டுமே அவை பூரண வெற்றியாகின்றன.

இதில் எவையும் இலங்கை அரச படைகளுக்கு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் அரசுக்கும், அதன் படைகளுக்கும், அந்த நம்பிக்கை காரணமாக நாட்டை ஓட்டாண்டியாக்கிக் கொண்டிருக்கும் செயலுக்கு விரைவில் செமத்தியான ஒரு அடி விழக் காத்திருக்கிறது.

அந்த அடியை மக்கள் அடிக்கும் போது போர்க்கள வெற்றிகளும், தியாகங்களும் பிறவும் அதைக் காப்பற்ற ஒரு போதும் முன் வரப்போவதில்லை என்பது தான் பரிதாபம்!


நன்றி - நூலகத்திட்டம்



# திண்ணை காலியாகக் காத்திருந்தவர்களின் வேசம்!

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் அகால மரணம் தொடர்பாக அவர் கட்டி வளர்ந்த கட்சியின் இன்றைய அரசியல் தலைமை மெத்தனமான போக்கில் காலத்தைக் கடத்தி வருகின்றது. 'மௌத்தான தலைவரின் வாயில் மண். இருப்பவரின் வாயில் சோறு' என அது கண்ணாமூச்சி அரசியல் ஆட்டம் போடுகிறது.

அஷ்ரஃபின் மரணத்தில் அவரது கட்சி ஆதரவாளர்களுக்கோ அல்லது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கோ ஒரு தெளிவான விடயம் உள்ளது. அது திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட மரணம் என்பதில்



யாருக்கும் சந்தேகமில்லை. அஷ்ரஃபைக் கொல்வதன் மூலம் தேசிய அரசியலில் முஸ்லிம்கள் கொண்டிருந்த அரசியல் பேரம்பேசும் தன்மையை, பலத்தை அழித்தொழித்து விடலாம் என்பதுடன் சரி பிழைக்கு அப்பாற்பட்டு வடக்கு கிழக்கில் கட்டி வளர்க்கப்பட்டிருந்த முஸ்லிம்களின் ஸ்தாபன அரசியல் பலத்தை சின்னாபின்னப்படுத்தி மேலாதிக்க தேசியவாதிகளிடம் முஸ்லிம்களை சரணாகதியடைய வைப்பதற்கு அஷ்ரஃபை அழிப்பதுதான் தனக்கு முன்னுள்ள ஒரே வழி என அது கணக்குப் போட்டது.

அஷ்ரஃபின் மரணம் நடந்து முடிந்து விட்டது. அவர் மரணத்திற்கான காரணத்தையும் - காரிய கர்த்தாக்களையும் அவரை நேசித்த வடக்கு கிழக்கு முஸ்லிம் தேச மக்களுக்கு முன் அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு, அவர் பெயரால் - வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பெயரால் இன்றும் அரசியல் நடாத்தும் அவரின் கட்சியினருக்கு முன்னுள்ள ஒரு முக்கியமான கடமையாகும்.

இக்கடமையை உடனடியாக முஸ்லிம் காங்கிரஸ் செய்திருக்க வேண்டும். மாறாக அக்கட்சியின் இன்றைய தலைமை - 'அண்ணர் எப்போது மௌத்தாவார் திண்ணை எப்போது காலியாகும்' என கணக்குப் போட்டு காத்திருந்தது போல் நிலைமைகள் இருந்ததை வெளிச்சமாக்கி வருகின்றது. இதனை இத்தலைமையே முஸ்லிம்கள் மத்தியில் ஒவ்வொரு கணமும் தங்களது உட்கட்சிப் பதவிப் போராட்டத்திலும் அரச அதிகாரத்திலுள்ள மோகத்தாலும் அம்பலப்படுத்தி வருகின்றது.

தங்களது பதவி ஆசைக் கனவுகளை சாத்தியப்படுத்துவதற்கு அஷ்ரஃபின் மரணத்தை வைத்து மக்களிடம் வந்து அனுதாப வாக்குகளைப் பெற்று பாராளுமன்றக் கதிரைகளை சூடாக்கும் இவர்கள் - தங்களின் எதிர்கால அரசியல் முதலீடு, அரசியல் பலம், அஷ்ரஃபும் அவரது கட்சியும் தான் என தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டு அப்பாவி முஸ்லிம் வாக்காளர்களை ஏமாற்றும் போக்கில், அஷ்ரஃபின் மரணத்திற்கு விசாரணைக் கமிசன் அமையுங்கள் என சந்திரிக்கா அரசிடம் மெதுவாகக் கேட்டுக்கொண்டு அதனை ஒரு பெரும் கோரிக்கையாக முஸ்லிம் மக்கள் முன் காட்டி வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் கிழக்கு ஏஜெண்டுகள் மக்கள் மத்தியில் ஆர்ப்பாட்டங்களை முடுக்கி விடுவதன் மூலமும், அஷ்ரஃப் மன்றங்களை அமைப்பதன் மூலமும் 'கத்தமுல் குர்ஆன்' ஓதுவதன் மூலமும், இலவச அரிசி வழங்குவதன் மூலமும் - இவர்களின் இன்றைய தலைமைகள் போகுமிட மெல்லாம் தலைவர் என அழுது புரண்டு கண்ணீர் விடுவதன் மூலமும் பத்திரிகை வாய்ச் சவடால்கள் மூலமும் மக்கள் மத்தியில் காலத்தை ஓட்டிவிடலாம் எனத் தப்புக் கணக்கு போட்டிருக்கின்றனர்.

அஷ்ரஃபின் மரணம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒரு உண்மையினை மீண்டும் மக்களிடம் சொல்வதல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் இன்றைய பணி - ஆகக் குறைந்தது முஸ்லிம்களின் அரசியல் தொடர்பாக அக்கட்சி உருப்படியான எவ்வித வேலைத்திட்டங்களையோ, தீர்வினையோ கொண்டிருக்காது விட்டாலும், உங்களை வளர்த்து தலைவர்களாக்கி, பிரதி அமைச்சர்களாக்கி, பாராளுமன்ற உறுப்பினராக்கிய அஷ்ரஃபின் மரணத்தைக் கண்டறிவதற்கான உருப்படியான அரசியல் போக்கையாவது கொண்டிருங்கள் என்பதைத்தான் 'விடியல்' இவர்களிடம் வலியுறுத்துகிறது.

இவர்களால் இத்தனை மந்திரிப்பதவி, இத்தனை அரைமந்திரிப்பதவி, இத்தனை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, கூட்டுத்தாபன தலைவர் பதவி வேண்டுமென - அலரிமாளிகையில் சந்திரிகாவிடம் பேரம்பேச முடியும் என்றால், ஏன் அஷ்ரஃபின் மரணத்தை கண்டறிவதற்கு சந்திரிகாவை நிர்ப்பந்திக்க முடியாது? இக்கேள்வி ஒன்றே போதும் இவர்களின் முகமூடிகளை அம்பலப்படுத்தி போலிப் புரட்சிவாதிகள் இவர்கள் என மக்கள் இவர்களுக்கு நாமம் சூட்ட, இது நடந்து விடுமோ என்கிற அச்சத்தின் காரணமாகத்தான் முஸ்லிம் மக்களைத் திசை திருப்பி - எதுவுமே நடக்காத வெறும் ஏமாற்று வேலைகளால் அஷ்ரஃபின் மரணத்தில் காலத்தைக் கடத்துவது இவர்களின் இன்றைய திட்டமாக உள்ளது.

எப்போதாவது இவர்கள் சந்திரிக்கா அரசிடம் சொல்லி இருக்கிறார்களா? 'தலைவியே - நீங்கள் எமது தலைவரின் மரணத்தில் மௌனமாக இருக்கிறீர்கள் - நாங்கள் உங்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போகிறோம்' என்று. இவர்கள் இப்படிச்சொல்லி, தலைவருக்கு நன்றிக்கடனாவது செய்வார்களா என்று பார்த்தால்-மூன்று மாதங்கள் கடந்தும் முஸ்லிம் மக்களுக்கு பலத்த ஏமாற்றமே மிஞ்சி உள்ளது.

அஷ்ரஃபின் பின் நின்ற வடக்கு கிழக்கு ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இன்றைய இந்த பதவி ஆசை பிடித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களை நோக்கி கேள்வி எழுப்பும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அதுவரை அஷ்ரஃபின் பெயரால் முஸ்லிம்களை ஏமாற்றி- கண்ணீர் வடித்து, புரட்சி பேசி, தலைமைப் பதவிக்காக உட்கட்சி சண்டை பிடித்து, குர்ஆன், 'ஹதீஸையும் விற்று காலம் கடத்தி வாருங்கள்.

ஆனால் மக்கள் உங்களுக்கு விரைவில் பதில் சொல்வார்கள்.

மக்களுக்காகவே கட்சி, கட்சிக்காக மக்களல்ல!

விடியல்

---

# பிக்குவின் காமலீலை: துஷாந்தினி எங்கே?

– விகடகவி

மட்டக்களப்பு நகரின் மத்தியில் உள்ள ஸ்ரீ மங்களாராம பௌத்த விகாரையில் அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவம் அப்பிரதேசத்து மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையத்திற்கு அடுத்ததாக அமைந்துள்ள இந்த மங்களாராம விகாரைக்கு சிங்களம் கற்பதற்கு என்றும், வேலைவாய்ப்புக்காகவும் இளம் பெண்கள் சிலர் அடிக்கடி வந்து போவது வழக்கம்.

இவ்வாறு இந்த விகாரைக்கு அடிக்கடி வந்து சென்று கொண்டிருந்த பாண்சாலை வீதியைச் சேர்ந்த உதயக்குமார் துஷாந்தினி என்கின்ற 14 வயது சிறுமி திடீரென்று கர்ப்பம் தரித்திருந்தது அவளது பெற்றோரால் கண்டுபிடிக்கப்பட்டது.

பொருளாதார வசதிகள் சிறிதும் அற்ற அந்த ஏழைப்பெற்றோரால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்க முடியவில்லை. அந்தச் சிறுமியின் வயிற்றில் வளர்ந்த கரு 6 மாதங்கள் கடந்த நிலையில் காணப்பட்டதால் கருவைக் கலைக்கும் முயற்சியும் கைகூடவில்லை.

இதேவேளை, இந்தச் சிறுமியின் கர்ப்பத்திற்கு பௌத்த விகாரையின் குருவான 30வயது நிரம்பிய யட்டியன பட்டாலோக தேரோ தான் காரணம் என்று அயலவர்களால் நம்பப்பட்டது.

இந்தப் பிரச்சனை ஓரளவு வெளியே தெரியவர ஆரம்பித்ததைத் தொடர்ந்து, ஒருநாள் திடீரென்று இந்தச் சிறுமிக்கும், அந்த விகாரையில் இருந்த பின்னகொட விதாணகே லசந்த ரஞ்சித் என்ற சிறுவனுக்கும் திருமணம் முடித்து வைக்கப்பட்டது.

இந்தத் திருமணம், குறிப்பிட்ட பௌத்த விகாரையின் குருவும், சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணம் என்று அயலவர்களால் குற்றம் சாட்டப்பட்டவருமான யட்டியன பட்டாலோக தேரோ அவர்களாலேயே நடத்தி வைக்கப்பட்டதுடன், தேரோவே பிரதான சாட்சியாக திருமணப் பதிவில் கையொப்பமும் இட்டுள்ளார்.(திருமணப் பதிவு இல. 3047)

திருமணத்தைத் தொடர்ந்து அந்தச் சிறுமி தென்பகுதியிலுள்ள ஒரு சிங்களக் கிராமமொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டதாகவும், தற்போது அந்தச் சிறுமியின் நிலை என்ன என்பதும் மர்மமாகவே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரணமாகவே இலங்கையில் பௌத்த பிக்குகளுக்குள்ள மிதமிஞ்சிய அதிகாரங்கள் பற்றிய பயம் காரணமாகவும், இப்பிரதேசத்தில் சர்வாதிகாரம் செலுத்தி-வரும் சீருடை தரப்பினரிடையே பிக்குக்கு உள்ள செல்வாக்கு காரணமாகவும், இந்தச் சம்பவத்தில் மூடிமறைக்கப்பட்டுள்ள பல விடயங்களை வெளிக்கொணர முடியாது அப்பிரதேசத்து மக்கள் மௌனிகளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி விசாரிக்கச் சென்றபோது குறிப்பிட்ட இந்த பிக்கு பற்றி பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

பல பெண்கள் இந்த பிக்கு பற்றிக் கூறுகையில், இவர் மாலை நேரங்களில் விகாரைக்கு முன்பாக நின்று கொண்டு அவ்வழியால் தனியாகச் செல்லும் இளம் பெண்களுக்கு தனது நாக்கை காண்பிப்பதுடன், அசிங்கமான செய்கைகளை செய்து காட்டுவதாகவும் தெரிவித்தார்கள்.

அத்தோடு இந்த விகாரைக்கு கைவேலை பழகுவதற்கு என்றும், சிங்களம் கற்றுக் கொள்வதற்கென்றும், வேலை வாய்ப்பிற்கான சிபாரிசு பெறுவதற்கு என்று கூறியும் பல இளம் பெண்கள் அடிக்கடி வந்து போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வந்து போகும் பெண்களுள், மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் என்ற இடத்தை சேர்ந்த ஒரு பெண் தற்போது இந்த பிக்குவுடன் நெருங்கிப் பழகுவதாகவும், இந்தப் பெண்ணுக்காக பிக்கு பல பரிசுப் பொருட்களை விகாரைக்கு அருகில் உள்ள கடைகளில் வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று பிக்குவுடன் நெருங்கிய தொடர்பு உள்ளவரும், விகாரையில் சிங்கள மொழி போதித்து வருபவருமான லால் பெரேரா என்பவர் அண்மையில் வாழைச்சேனை காகித ஆலையில் பணிபுரியும் ஒரு பெண்மீது பலாத்கார முயற்சி மேற்கொண்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட இந்த பிக்குவும், அவருடைய சகாக்களும் இந்தப் பிரதேசத்தில் சினிமாக்களில் வருகின்ற "ரவுடிகள்" போன்று நடந்து கொள்வதாகவும், இவர்களது அடாவடித்தனங்களைத் தட்டிக் கேட்கும் தைரியம் இல்லாது அப்பிரதேசத்து மக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு இந்த விகாரைக்கு அருகாமையில் பொலிஸ் நிலையமும், பொலிசாரின் விடுதிகளும் காணப்படுவதால், இவ்வாறு விகாரைக்கு அடிக்கடி சென்று வரும் இளம் பெண்களுடன் பொலிசார் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்வதுடன், இப்படியான தேவையற்ற அறிமுகங்கள் காலப்போக்கில் பலவிதமான கலாசாரச் சீர்கேடுகள் இப்பகுதியில் இடம்பெறக்கூடிய அபாயநிலையை தோற்றுவிக்கக்கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதானத்தை எதிர்ப்பது, பேரினவாதத்தை வளர்ப்பது, மற்ற நாடுகளின் தேசிய கொடிகளை எரிப்பது என்பனவற்றைத் தவிர பௌத்த பிக்குகள் தமிழ் பகுதிகளில் பெண்பிடிக்கும் வேலைகளிலும் தற்போது ஈடுபட்டு வருவது பற்றி கண்டிப்பாக வெளி உலகம் அறிந்துகொள்ள வேண்டும்.

அகிம்சையைப் போதிப்பதைத் தவிர மிகுதி அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்திவரும் இந்த பௌத்த பிக்குகள் பற்றி, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் பயிற்சிப் பட்டறையின்போது, "லேக் ஹவுஸ்" நிறுவனத்தின் தவிசாளரும் மூத்த பத்திரிகையாளருமான லூசியன் ராஜகருணாநாயக்க அவர்கள் தெரிவித்த விமர்சனத்தை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சிங்கள பௌத்த குடும்பங்களில் குழந்தைகள் பிறந்ததும் பெற்றோர் அவர்களுக்கு ஜாதகம் பார்ப்பது வழக்கம். அந்தக் குழந்தைகளின் ஜாதகத்தில், "இந்தக் குழந்தை வளர்ந்து குடும்பத்தில் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்துவான்" என்று காணப்பட்டால், உடனே அந்தக் குழந்தையை பௌத்த விகாரையில் ஒப்படைத்து விடுவார்களாம். இவ்வாறு குடும்பத்தைக் குழப்பக்கூடியவன் என்று பௌத்த விகாரையில் ஒப்படைக்கப்பட்ட அந்தக் குழந்தை தான் பின்னர் வளர்ந்து நாட்டை குழப்பும் செய்கைகளில் முன் நிற்பவர்கள் என்று. [illegible] ராஜகருணாநாயக்கா பௌத்த பிக்குகள் பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

இந்த பிக்குகளின் செய்கைகளைப் பார்க்கும் போது இந்தக் கூற்று உண்மை போலத் தெரிகிறதல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்



# நோர்வே முயற்சியை எதிர்க்கும் "றோ"

## தமிழ்க் கட்சிகள் றோவின் வலையில் ?

– உதயன்

நோர்வேயின் தலையீட்டால் பயன் ஏற்படுமா? இந்தக் கேள்வியை தமிழர்கள் எழுப்பிக் கொண்டே இருக்க வேண்டிய நிலையே தொடரப் போகிறதா? அதனால், பிரயோசனம் இல்லை என்று முடிவெடுப்பதா? இந்த கேள்விகளுக்குப் பதில் என்ன?

நோர்வேயின் தலையீடுகள் பற்றி இந்தியா மகிழ்ச்சியாக இல்லை. இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் மூக்குடைந்திருந்த இந்திய அரச உளவு நிறுவனமான றோ (RAW) மீண்டும் செல்வாக்கு செலுத்தக் கூடிய இடத்திற்கு வந்துள்ளதாக தெரிகிறது. இலங்கைத் தமிழ்த் தலைவர்களில் ஒருவரான ஈழவேந்தனின் நாடு கடத்தலிலிருந்து தொடர்ச்சியாக நடைபெறும் பல விடயங்கள், அதனையே உணர்த்துகின்றன. தமிழக மக்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும், இலங்கை தமிழ் மக்களின் மீதும் வளர்ந்து வருகின்ற செல்வாக்கை முறியடிப்பது போன்ற பல விடயங்களை இந்திய மத்திய அரசு செய்து வருகிறது.

"இலங்கை தமிழ் மக்களின் விடுதலைப் பேராட்டத்தில் அனுதாபமுள்ளவராகக் காட்டிக் கொள்ளும், வை.கோ., ராமதாஸ் போன்ற தலைவர்களினதும், மத்தியில் பெர்னான்டஸ் போன்றவர்களின் கூட்டணியாகவும் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்திருந்த போதும், அவற்றை எல்லாம் மீறி மத்திய அரசு நடந்து கொள்வதற்கு றோவின் அழுத்தங்கள் காரணமாகின்றன. குறிப்பாக நோர்வேயின் நடவடிக்கைகளுக்கு எதிரான போக்கையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான வன்மத்தையும் றோ கொண்டிருக்கிறது.

"ஆனையிறவு முகாம் தாக்கப்பட்ட பிறகு புலிப் படையினர் பலாலியை நோக்கி நகர்ந்து விடலாம் என்ற அச்சம் இந்தியா-வுக்கு அதிகமாக இருந்தது. அதனால் இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகளை வழங்க முன்வந்தது. நூறு கோடி ரூபா பெறுமதியான உதவிகளை வழங்குவதாக அறிவித்தது.

"நோர்வே அரசாங்கத்தின் சார்பில் பிரதிநிதியொருவர் இலங்கை வருவது பற்றிய செய்திகள் வெளிவந்தவுடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு நாடுகடத்த வேண்டும் என்பதை மீண்டும் இந்தியா வலியுறுத்தத் தொடங்கியது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபர் என்ற அடிப்படையில் இந்திய சட்டப் படி இந்திய நீதிமன்றமொன்றில் விசாரிக்க வேண்டும் என்பதற்காகவே பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்று கோருவதாக அது தெரிவித்து வருகிறது.

"அதேவேளை நோர்வே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கும் முயற்சிகளை இந்தியா வரவேற்பதாக இந்திய அரசாங்க வட்டாரங்கள் மேலோட்டமாகத் தெரிவித்து வருகின்றன என்று சுட்டிக் காட்டுகிறார் ஈழத்து இடதுசாரிக் கட்சி ஒன்றின் தலைவர்களுள் ஒருவர். இந்தக் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமான ஒரு பதிலாக அமைந்திருப்பதை கூர்ந்து அவதானித்தால் புரிந்து கொள்ளலாம். அதாவது இந்த சமரச முயற்சியை இந்தியா குழப்பிடவே.முனையும் என்பது தான்.

தற்போது நேரடியாக சம்பந்தப்பட்டதாக தென்படுகின்ற இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகள் இயக்கமும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்ள நோர்வே-யின் உதவியை நாடியுள்ளன. இரண்டு தரப்பினருக்கும் உள்நோக்கங்கள் வெவ்வே-றானதாக இருக்கலாம் என்றாலும், அவை இணக்கத்துனேயே நோர்வேயின் உதவியை நாடியுள்ளன. நோர்வே என்பது சர்வதேச ரீதியில் சமாதான முயற்சிகளை மேற்கொள்-கின்ற போது அதனுடைய பாத்திரம் தனிப்பட்ட ஒன்றாகவன்றி ஐரோப்பிய நாடுகளினதும், அமெரிக்காவினதும் விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டதாக அவற்றின் சமாதான பிரதிநிதியாகவே செயற்படுகின்-றது. இந்தத் த்ன்மையினாலும், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நலனினாலும் விடுதலைப் புலிகள் மீதான வன்மத்தினாலும் "றோ" நோர்வே முயற்சிகளுக்கு எதிராகவே செயற்பட்டு வருவது உண்மையே.

றோவின் அந்த விருப்பங்கள் இலங்கை தமிழ்க் கட்சிகளிடம் எதிரொலிப்பது தெரிகிறது என்று தெரிவித்தார் இடது சாரிக் கட்சி ஒன்றின் உறுப்பினர். தமிழ்க் கட்சிகளும் மலையகத் தொழிற்சங்கங்களும் இணைந்து அரசாங்கம் பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க தூதுவர்களை சந்தித்து வருகின்றன. தமிழ்க்கட்சிகள் ஐக்கியப்பட்டு தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் பொது உடன்பாட்டுடன் செயற்படுவதாக வெளியில் காட்டப்பட்ட போதும், அவை இந்திய றோவின் நலன்களுடன் முரண்படாமல் இயங்குவதாகவே தெரிந்து கொள்ள முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார். ரெலோ இயக்கத்தின் அழைப்பின் பேரில் ஈ.பி.டி.பியை தவிர ஏனைய தமிழ்க் கட்சிகளும், ம.ம. முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனதா தொழிலாளார் காங்கிரஸ், அ.ஜ.தொ.காங்கிரஸ் போன்றன ஒன்று கூடின. நாளடைவில் புளொட்டின் பிரசன்னம் இல்லாமல் போனது. இக் கட்சிகளில் ஏறக்குறைய அனைத்தும் இந்தியாவின் தொடர்புடையவை. அக்கட்சிகளின் பல தலைவர்களின் நிரந்தர வசிப்பிடம் இந்தியாவாகவே இருந்து வருகிறது. ஏற்கெனவே பல தமிழ் அமைப்புகள் 'றோ'வுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்தவையே.

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியப்பட்ட முயற்சிகளுக்கு மத்தியில் ஒரு தமிழ் அமைப்பிற்கு இந்தியாவிலிருந்து பெருந்-தொகை நிதியுதவி கிடைத்திருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்படுகிறது. தமிழ்க் கட்சிகள் இணைப்பின் பேச்சாள அமைப்பாக இயங்கும் ரெலோ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியத்துவம் பற்றி அடிக்கடி கூறி வருகின்றது. புலிகள் அமைப்பை இல்லாதொழிக்கும், அல்லது பலவீனமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் நேர்மையாக அதனுடனே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று அது அழுத்தமாகக் கூறுகிறது.

எனினும், இன்றைய நிகழ்வுகளில் முக்கியமான ஒரு தரப்பாக இருக்கின்ற நோர்வேயின் முயற்சிகளை முழுமனதுடன் அது ஏற்றுக் கொள்வதாகவே இல்லை. மூன்றாம் தரப்பினது மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தை பற்றி பேசும் ரெலோ நோர்வேயின் சமாதான முயற்சிகளை ஒதுக்கி விட்டே சமாதானம் பற்றிப் பேசுகிறது. அதனுடன் இணைந்து செயற்படும் தமிழ் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பவை நோர்வேயின் முயற்சிகளை ஆதரிப்பதாக வெளிப்படையாக கூறினாலும், கூட்டாக இயங்கும் போதும், பேசும் போதும் ரெலோவுடன் சேர்ந்து இழுபடுகின்றன. இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான இந்திய ஆளும் வர்க்கத்தையும் றோவையும் கவலைக்குள்ளாக்காது இருப்பதில் அவை கவனமாக இருக்கின்றன என்கிறார் இடது சாரிக் கட்சியின் பிரதிநிதி ஒருவர்.

நோர்வே சமாதான முயற்சிகளினூடே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி-செய்யக் கூடிய தீர்வை பேச்சுவார்த்தையின் மூலம் அடைவதற்கான வெகுஜன நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றை கடந்த டிசெம்பர் மாத இறுதியில் கொழும்பில் புதிய ஜனநாயக கட்சி நடத்தியது. அக்கூட்டத்திற்கு இடதுசாரிக் கட்சிகளும், தமிழ்க் கட்சிகளும், அழைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான தமிழ்க்கட்சிகளும், இடது-சாரிக் கட்சிகளும் இதில் கலந்து கொண்டன. அக்கூட்டத்தின் முடிவில் நோர்வே முயற்சிகளை எச்சரிக்கையுடன் ஏற்றுக் கொள்வதுடன் அதன் நடவடிக்கைகளுக்-கூடாக பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வை அடைவதற்கான பரந்துபட்ட வெகுசன இயக்கமொன்றைக் கட்டி வளர்ப்பதென அங்கு கலந்து கொண்ட இடதுசாரிக் கட்சிகளும், தமிழ்க் கட்சிகளும் இணங்கிக் கொண்டன.

இதற்குப் பிறகு தான் ரெலோவின் அழைப்பின் பேரில் தமிழ்க் கட்சிகள் கூடின. அவை தனியான வழியில் செயற்பட்டன. அதாவது அமெரிக்கத் தூதுவரை சந்திப்பது முதலான சில நடவடிக்கைகளைச் செய்தன. இந்தியாவுக்கு சென்று இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கான முயற்சிகளையும் எடுத்தன.

இது இவ்வாறிருக்கையில் இடதுசாரிக் கட்சிகளை சந்தித்து தமது முயற்சிகளுக்கு அவற்றின் ஆதரவைத் திரட்டும் தமிழ்க் கட்சிகளின் முயற்சி எடுக்கப்பட்டது. இடதுசாரிக் கட்சிகளைச் சந்தித்த வேளையில் நோர்வேயின் முயற்சிகளில் தமிழ்க் கட்சிகள் மகிழ்ச்சியடையவில்லை என்று தமிழ்க் கட்சிகள் சார்பில் ரெலோ கூறியதாக அறிய, முடிந்தது. போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதனையே தமிழ்க் கட்சிகள் பொது உடன்பாட்டிற்கான விடயங்களாக முன்வைத்துள்ளன. நோர்வேயின் முயற்சிகள் பற்றி எல்லோரும் உடன்படக்கூடிய நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும் என்று சில இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தியதாக அறிய முடிந்தது. நோர்வே பற்றி எதுவுமே தமிழ்க்கட்சிகளின் தரப்பில் கூறப்படாததை அடுத்து கலந்துரையாடிய இடதுசாரி அமைப்புகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே பொது உடன்பாடு ஏற்படுவதில் இழுபறி ஏற்பட்டது. அக்கலந்-துரையாடலில் கலந்து கொண்டு நவசம சமாசஜக்கட்சி மூன்றாம் தரப்பு தலையீட்டை எதிர்ப்பதாகக் கூறியது. ஏனைய இடதுசாரி அமைப்புகள் எச்சரிக்கையுடன் நோர்வேயின் தலையீட்டை ஏற்பதென்று கூறின.



மூன்றாம் தரப்புத் தலையீட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்க் கட்சிகள் நோர்வேயின் தலையீடு முழுமையானதாக இல்லை என்பதால் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கின்றன. இதே போன்ற கருத்தையே பிரிட்டிஷ் தூதுவரை சந்திக்கும் போதும் தமிழ்க்கட்சிகள் தெரிவித்தன. நோர்வேயின் தலையீடு மிகவும் பலவீனமானது என்று தமிழ்க் கட்சிகள் பிரிட்டிஷ் தூதுவரிடம் கூறியதை அடுத்து "நோர்வேயின் சமாதான சாதனைகள்' பற்றி பிரிட்டிஷ் தூதுவரின் விரிவுரையொன்றை கேட்டு விட்டு வரவேண்டிய நிலை தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

இந்தியாவின் இந்து பத்திரிகையும், புரொன்ட் லைன் சஞ்சிகையும் கூட நோர்வேயின் சமாதான முயற்சிகளை பலவீனப் படுத்துவதாகவே கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் எதிரான பிராச்சாரங்களையும் அவை செய்து வருகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசாங்கமும் நோர்வேயின் சமாதான முயற்சிகளை அங்கீகரிக்கும் வரை நோர்வேயின் தலையீடு வலிவுடையதாகவே இருக்கும். தற்போதைய நிலைமையின் கீழ் இரண்டு தரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர நோர்வே எடுக்கும் முயற்சி குறைவானதல்ல. அதன் முயற்சிகள் குறைந்தபட்ச நன்மைகளையாவது பயக்க வேண்டும் எனின், அவற்றைக் குழப்பக் கூடாது.

ஐக்கியப்பட்டுச் செயற்படுவதாக கூறும் தமிழ்க்கட்சிகள் மேற்படி நிலைமைக்கு மாறாக, செயற்படும் போது இந்திய ஆளும் வர்க்கத்தினதும், றோவினதும் 'மறைமுக திட்டங்களுக்-கான' விரிவாக்க நடவடிக்கைகளுக்கே உதவி புரிய முடியும். இந்திய ஆளும் வர்க்கமும் றோவும் எப்போதுமே இலங்கை தமிழ்க்கட்சிகளின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை. (இந்திய மக்களும், குறிப்பாக தமிழக மக்களும் இந்திய ஜனநாயக முற்போக்கு, புரட்சிகர சக்திகளும் ஆதரவாக இருந்து வருகின்றனர்).

இவ்வாறான நிலையில் இலங்கையின் பேரினவாதத்திற்கு எதிராக இந்திய ஆளும் வர்க்கமும், 'றோவும் செயற்பட்டால், அவை இலங்கை தமிழ் மக்களுக்கு ஆதரவாக அமையலாம் என்பது உண்மையே. ஆயினும், அதற்காக இந்தியா இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவளிப்பதாக நினைத்து ஏமாந்து விடக்கூடாது: அப்படி ஆதரவளிப்பதாக பிறரை ஏமாற்றவும் கூடாது. இலங்கை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மாறாக இந்தியா செயற்படுவது பற்றி பிரபாகரன் கடந்த வருட மாவீரர் தினச் செய்தியில் எச்சரித்திருந்தார்.

ஈ.பி.டி.பி. விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களின் போராட்டதுக்கும் எதிரான நிலைப்பாட்டில் இருக்கிறது. ரெலோ உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கதைத்தாலும் அவற்றைப் பொறுத்தவரை இந்தியாவின் மேலாதிக்க வல்லமைக்கு எதிராக தமிழ் மக்களின் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பது அவற்றின் நம்பிக்கையும், விசுவாசமுமாகும். அதற்கேற்பவே அனைவரும் காய்களை நகர்த்துகின்றனர். ஒருவேளை இந்தியாவின் தலையீட்டில் 'புலிகள் சங்காரம் செய்யப்பட்டால்' வடக்கு கிழக்கிற்கு போய் இருந்து கொள்ள முடியும் என்று நம்புகின்றனர்.

அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு செயற்பட்ட நீலன் செயற்படுகின்ற கதிர்காமர் உட்பட, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்-கள் ஒருவகையென்றால் ரெலோவும், தமிழ்க் காங்கிரசும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இன்னொருவகை, அவற்றின் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு பா ஏற்படுவதையே விளைவாகப் பெறமுடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆற்றுநீரையும் அளந்து குடி!

## ஏகாதிபத்தியத்தின் புதிய அதிரடி!!

– ரட்ணா

நீங்கள் குடிக்கும் நீரை எங்கிருந்து பெறுகிறீர்கள்? கிணற்றிலிருந்தா ஆற்றிலிருந்தா அல்லது மலை அருவியிலிருந்தா?

எங்கிருந்து பெற்றாலும், சரி தான். இனிமேல் அதற்கும் நீங்கள் பணம் செலுத்தியாக வேண்டும்.

பசி வந்தவர் இலவசமாக அதைத் தீர்க்க கிடைக்கும் ஒரு பொருள் தண்ணீர் தான் என்ற நிலை இனி இல்லை. குழாய் மூலம் நீர் பெறுபவர்கள் மட்டுமல்லாது இயற்கை மூலம் கிடைக்கும் நீரைப் பெறுபவர்களும் இனி பணம் கட்டியே அதனைப் பெற வேண்டும்.


இது எங்கே என்று கேட்கிறீர்களா?

வேறெங்குமில்லை. எமது இலங்கையில் தான். பொ.ஐ.மு அரசாங்கம் கொண்டு வரப் போகும் புதிய சட்டத்தின் படி இந்தப் புது விதி நடைமுறைக்கு வரவுள்ளது.

"1998ல் பொலிவியாவில் நீர் வரியை அறவிடுவது குறித்து பிரச்சினை ஒன்று ஏற்பட்டது. இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அத்திட்டத்தை கைவிட வேண்டிய நிலைமை அந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. தற்போது அமெரிக்காவில் இப்பிரச்சினை ஏற்பட்டு மக்கள் பெரும் எதிர்ப்பினைக் காட்டி வருகின்றனர்."

பொ.ஐ.மு வின் அடுத்த கட்ட அதிரடி நடவடிக்கையான சகல நீருக்கும் கட்டணம் அறவிடுவது என்ற உத்தேச சட்டம் குறித்து இலங்கையைச் சேர்ந்த சூழல் விஞ்ஞானி ஒருவர் கூறிய விளக்கம் அது.

நதிக்கரையோரம் மனித நாகரீகம் தோற்றம் பெற்றது என்பதை மனித இனத்தின் வரலாறு நமக்கு நிரூபிக்கின்றது. இந்த வகையில் மனிதருக்கும், நீர் வளத்திற்கும் இடையிலிருந்த நெருங்கிய பிணைப்பை விளங்கிக் கொள்ளக் கூடிய-தாகவுள்ளது. எனினும், இந்த நெருங்கிய பிணைப்பை விலை கூறி சந்தையில்



வியாபாரப் பொருளாக்கும் உத்தியை பொ.ஐ.மு அரசாங்கம் சந்தடி இல்லாமல் அமுல்படுத்தும் நடவடிக்கையை எடுத்து வருகின்றது.

இனி நீர் ஒரு இலவசப் பொருள் இல்லை. இலங்கை மக்கள் நீரை விலை கொடுத்து கொள்வனவு செய்யப் போகிறார்கள். அதற்கான தீர்மானகரமான திட்டங்கள் யாவும் 1999 மார்ச் 28ம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு விட்டன. இன்னும் சில நாட்களில் இத்திட்டம் சட்டமாக்கப்பட பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சூழலியல்வாதிகளினால் இன்று பலத்த எதிர்ப்புக்குள்ளாக்கப்படும் இவ் விடயம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அற்ற நிலைமையையே பரவலாகக் காணக் கூடியதாகவுள்ளது.

உலக வங்கியின் தேவைக்கு ஏற்ப நீருக்கு கட்டணம் அறவிடும் இத்திட்டம் 10 வருடங்களுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இத்திட்டம் பலத்த மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் நிறுத்தப்பட்டு இன்று புதிய வடிவில் மீளுருவாக்கம் பெற்றுள்ளது. 1999 செப்டெம்பர் 23ம் திகதி கண்ணொருவ என்கிற தாவரம் குறித்தும் மரபணு குறித்தும் நடந்த ஒரு எதிர்ப்புக் கூட்டத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இங்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா உரையாற்றுகையில், 'நீருக்கு ஒரு விலையை நிர்ணயித்து அறவிடுவது நீர் முகாமைத்துவத்தை சிறப்பாகக் கொண்டு நடாத்தும்' எனத் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இந்த நீர் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் நீர் உரிமையும், பௌதீக ரீதியிலானதோ அல்லது வேறு எந்த ரீதியிலான உரிமையோ அரசுக்குரித்தாகின்றது. இதனால் அரசு நீர் விநியோகிக்கும் சபையை உருவாக்கும் இயல்பை பெற்று விடுவதுடன் நாட்டில் எப்பிரதேசத்திலாயினும், உள்ள நீரைப் பெற்றுக் கொள்ள இந்தச் சபையிடம் நீர் பெறுவதற்கான உரிமையையும் பெற்றுக் கொள்ள வேண்டும். (றுயவநச நுெ-வவைடநஅநவெ)

இந்நீர் உரிமையை நாம் அனைவரும் அத்தியாவசியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த நீர் உரிமையைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூ. 1000 செலவிடப்பட வேண்டும். நீர் உரிமையைப் பெற்றுக் கொள்ள மேலதிகமாக ரூ 500 ஐ செலுத்த வேண்டும். நீரைப் பெறுவது, ஆற்றிலா, கிணற்றிலா, ஏரியிலா, கிணறு எனின் எவ்வளவு ஆழத்தில் நீர் இருக்கும் , ஒரு நாளைக்கு எவ்வளவு தேவை ஆகிய விடயங்கள் கருத்திலெடுக்கப்பட்டு நீருக்கான விலை நிர்ணயிக்கப்படும். இந்த உரிமையைக் கொண்டு நீரை நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய இயலும். நிறுவனங்களும் நீரைக் கொள்வனவு செய்யலாம். உதாரணமாக கிரிந்தி ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த நீர் உரிமையைப் பெலவத்தை சீனி நிறுவனத்தினால் கொள்வனவு செய்ய இயலும். இதன்படி பாராக்கிரம சமுத்திரத்தை உரிமை கூறும் நிறுவனம், பொலனறுவை மாவட்டத்தில் எந்தப் பயிர்ச் செய்கையை செய்யலாம் எனத் தீர்மானிக்கும் நிலை ஏற்படலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நீர் முகாமைத்துவத் திட்டத்தின் உள் நோக்கம் இலங்கையின் நெற்பயிர்ச் செய்கையை அழிப்பது தான் என விவசாயிகள், விவசாய சங்கங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

சர்வதேச நீர்ப்பாசன முகாமை நிறுவனம் (ஐவெநசயெவழையெட ஐச்சபையவழைெ ஆயயெபநஅநவெ ஐளெவவைரவந) எனும் அமைப்பு இலங்கையில் பலதரப்பட்ட பிரதேசங்களில் மேற்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் அந்நிறுவனம் அரசுக்கு புதிய நீர் முகாமைத்துவ கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அமைப்புக்கு ஆழுஏரேயுவேழு எனும் அரச சார்பற்ற நிறுவனம் நிதி உதவி அளித்து வருகின்றது. இந் நிறுவனம் நாடுகளின் விவசாய நிலங்களை, நீர் நிலைகளைக் கைப்பற்றும் ஓர் அமைப்பு என்ற பெயர் பெற்றது. எதிர்வரும் காலங்களில் நீர் வரி குறித்தான தீர்மானங்கள் இந்த மேற் கூறப்பட்ட நிறுவனத்தின் யோசனைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் எனலாம். இச் செயற்திட்டங்களுக்கு கடன் உதவிகள் மற்றும் ஆலோசனைகள் என்பனவற்றை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற அமைப்புகள் வழங்குவதாகத் தெரிய வருகின்றது.



யேவழையெட றுயவநச சுநளழரசஉந ஊழடைஉல யனெ ஐளெவவை-வரவழையெட யுசசயபெநஅநவெள என்று குறிப்பிடப்படும் தேசிய நீர் வள கொள்கைகளில் அடங்கியுள்ள விடயங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின்,

1.3ம் பிரிவு, நீரை அரச உடமையாக்குவதைக் குறிப்பிடுகின்றது.

அதாவது இச்சரத்தில் இலங்கையின் நிலப்பகுதிக்குரித்தான அனைத்து வித நீர் நிலைகளும் அரசு உடமை எனக் குறிப்பிடப்படுகின்றது.

2ம் பிரிவு, நீர் உரிமையை வழங்குதல் குறித்து 15ம் பகுதியில் றுயவநச சுபைாவள யனெ யுடடழஉய-வழைெ ழக றுயவநச யின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் கருத்து யாதெனில் நீரைப் பாவிக்கும் உரிமை நீர் உரிமம் கொண்டவர்களிடமிருந்தே கிடைக்-கும். பாரிய நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் இயங்கும் பரந்தளவிலான பாவிப்பாளர்களிடமிருந்தே தனி நபர்கள் நீரைப் பெற வேண்டியதாகவிருக்கும்.

15ம் பகுதியில் 2.1 பிரிவு 3ம் சரத்தில் விவசாயிகளுக்கு நீர் ஒப்பந்தம் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மகாவலி அதிகார சபையும், நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயிகளுக்கு நீர் பெற்றுக் கொடுப்பது குறித்து சட்டரீதியான உரிமையைப் பெற வேண்டியுள்ளது. இதன்படி விவசாயிகள் அனைவரும் ஒரு ஒப்பந்தத்திற்குட்பட வேண்டியுள்ளது.

28ம் பக்கத்தில் "சழஅழவழைெ ழக றயவநச ளுயஎைபெ வநஉாழெடழபல என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நீரைப் பயன்படுத்தும் அனைவரும் நீரை அளவிடும் கருவி ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். இதன்படி கிணற்றில் இருந்து அள்ளும் நீர் கூட அளவிடைக்குட்படும். சுருங்கக் கூறுவதாயின் கிணறை எப்படி பயன்படுத்துவது என்பதை நிபந்த-னைகளுடன் மக்களுக்கு கற்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

மேலும், 21ம் பக்கத்தில் நெல்லுக்குப் பதிலாக புகையிலை பயிடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஏனெனில் நெற்பயிர்ச் செய்கைக்கு அதிகளவு நீர் விரயமாகுவது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளதனால் இந்த அடிப்படையில், நீர் குறைவாகப் பயன்படும் புகையிலை, கர்கின், பேபிகோர்ன், வாழை போன்ற பயிர்களையே பயிர் செய்ய நேரிடும் என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வாறான செயற்திட்டம் உலக வங்கியினால் தென்னாபிரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் அமுல்படுத்தப்பட்டு இன்று அந்நாடுகள் மோசமான விளைவை அனுபவித்து வருகின்றன. இவ்வாறு பலத்த சர்ச்சைகளைக் கிளப்பிக் கொண்டிருக்கும் இந்த விடயம் குறித்து நீர்ப்பாசனத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரான சரத் அமுனுகம பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்ட பின்பும் அவர் இதனை மறுக்கும் விதமாக தொடர்பூடகங்களுக்கு நேர்காணலை வழங்குவதாக சூழலியல் பத்திரிகையாளரும் யேவுஊழுபு நிறுவனத்தின் தலைவருமான பியல் பாராக்கிரம தெரிவிக்கின்றார்.

"எமது பொருளாதாரம் மிகவும் சீரழிந்து போய் விட்டது. இன்று நாம் உலக வங்கியின் பணயக் கைதிகளாகி விட்டோம். அவர்களது நிபந்தனைகளை நாம் அமுல்-படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இன்று நாம் எமது வீட்டுப் பண்டங்களையே விற்றுச் சாப்பிட வேண்டிய நிலைமையில் உள்ளோம்"

அதேவேளை சூழல் விஞ்ஞானியான ஹேமந்த வித்தானகே, "2030ம் ஆண்டில் நீர்ப்பிரச்சினை உக்கிரமடையப் போகின்றது என்ற கருத்துடன் நான் உடன்படுகின்றேன். எனினும், நீர் முகாமைத்துவத்தை இல்லாதொழிக்கும் முழு பொறுப்பை இந்நாட்டு முதலாளித்துவ அரசாங்கம் ஏற்க வேண்டிய நிலைமையில் இப்புதிய திட்டத் தின் மூலம் மக்கள் மீது நீர் வரியை சுமத்த முயற்சிப்பது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்குச் சமனாகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும், மனிதருக்கு இயற்கை அளித்த கொடைகளான நீர், நிலம், காற்று என்பனவற்றில் நிலம் ஒரு பொருளாதாரப் பண்டமாகி விட்டது. இன்று நீரும் ஒரு பொருளாதாரப் பண்டமாகி விட்டது. நாளை எஞ்சியிருக்கும் காற்றுக்குக் கூட விலை நிர்ணயிக்கப்பட்டு விடும்.

நாளை ஒரு மூச்சுக் காற்றுக்குக் கூட விலை என்ன என கேட்கப் போகின்றோம்!?

நன்றி - நூலகத்திட்டம்



# பின்தொடரும் இந்தியப் பொலிஸ்

ஒரு தமிழீழப் போராளியின் கதை -14

அந்தத் தோழருடன் குறுகிய காலம் பழகியதால் அவரின் மீது எமக்குத் தனிப்பட்ட பாசம் இருந்தது. உண்மையில் அரசியல் பிரச்சினைகளைக் கதைத்த ஒரு சிலரில் இவரும் ஒருவர். மேலும் இவரின் வேதாரண்யத்திற்கான பயணம் மிகவும் ரகசியமானதாகக் கருதப்பட்டது. அவ்ரின் பயணத்தைப் புலிகள் எவ்வாறு அறிந்தார்கள்? யார் தகவல் கொடுத்தது? என்பனவற்றால் பலரும் குழப்பமடைந்தனர். இதனால் புலிகளிலிருந்து பிரிந்தவர்களில் ஒருவர் புலியின் உளவாளியாக அனுப்பப்பட்டிருப்பதற்குரிய சாதகங்கள் உள்ளதனால் அவர் யார் என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. எம்மிடம் முன்பு தங்கி இருந்தவர்கள் இடவசதியும் தேவையும் கருதி தற்போது வேறு இடங்களில் இருந்தனர் என்றபடியால் தான் நான் அவர்களுக்கு என்று குறிப்பிட்டேன். இதன் விளைவாக அவர்களில் ஒருவர் சில நாட்களின் பின், தான் தான் அவரது பயணம் பற்றிய தகவல்கள் மற்றும் அடிக்கடி நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றிப் புலிகளுக்குத் தகவல் கொடுத்து வருவதாகவும், பிரபாவினால் பிரிபவர்களுடன் பிரிந்து விடுவது போல் நடிக்க ஏற்பாடாகி அனுப்பப்பட்ட உளவாளி என்பதையும் ஒப்புக் கொண்டார். இதைக் கேட்ட நாம் மிகவும் பதட்டப்பட்டோம். இவர் எம்மைப் பற்றி என்ன தகவல்கள் சொன்னார்? இதன் விளைவுகள் என்ன? என்பவையே எமது பதட்டத்திற்குக் காரணம். ஏனெனில் இவர்கள் புலிகளிலிருந்து வந்தாலும் புலிகளைப் பற்றி விமர்சனங்களை வைப்பதில்லை. அதற்குச் சிலர் கூறிய காரணம்: தமக்கு அரசியல் ரீதியான வகுப்புக்கள் எதுவும் இல்லாததால் இவ்விமர்சனங்களை வைக்கத் தெரியாது என்பதாகும். ஆனால் இவர்களில் பலர் புலிகளிலிருந்து வெளியேறினாலும் புலிகளில் இருந்ததைப் போன்ற நடவடிக்கைகளில் பின்பும் இருந்தனர். இவர்கள் ஏன் புலிகளை விட்டு வெளியேறினார்கள் என்று கூட எனக்குக் கேள்வி இருந்தது. இதன் மூலம் நான் கற்றது என்னவென்றால் புலிகளிலிருந்து வெளியேறியவர்கள் புலிகளைப் பற்றிய விமர்சனங்களைப் பகிரங்கமாக வைக்கும் பட்சத்தில் தான் அவர்களை மாஜிப் புலிகளாகக் கருதி வேலை செய்யலாம் என்பதும் புலிகளில் இருந்து விலகி விட்டோம் எனக் கூறுபவர்களை நாம் நம்ப முடியாது என்பதுமாகும். இந்தக் கருத்திற்கு நான் வந்ததற்கு மேற்கூறிய ஒரு சம்பவம் மட்டுமல்ல காரணம். எழுத முடியாத பல சம்பவங்களின் பின்னர் தான் இந்த முடிவில் இருக்கிறேன். இதற்காக அன்று புலிகளிலிருந்து வெளியேறிய பின்னர் வேறு அரசியல் ஸ்தாபனங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் மக்களின் விடுதலைக்காக இன்னமும் போராடும் பலரிடம் இன்னமும் நம்பிக்கை எனக்குண்டு. அவர்கள் பகிரங்கமான விமர்சனங்களை வைத்தவர்கள். இன்றும் எமது மக்களின் விடுதலைக்காகப் போராடுபவர்கள். பொதுவாக எம்மவர் பலரிடம் ஒரு கருத்து உண்டு. ஒருவர் ரெலோவில் இருந்து விலகி இருந்தால் அவரை அந்த தலைமையிடம் இருந்தும் ஸ்தாபனத்தில் இருந்தும் விலகி விட்டவராகக் கருதுகின்றோம். ஆனால் புலிகளிடமிருந்து விலகியவர் என்று கூறினால் பலருக்குச் சந்தேகம் வரும். அதற்கு மேல் சொல்லப்பட்ட சம்பவங்கள் போல் பல நடந்துள்ளன. புலிகளிடமிருந்து பிரிந்தவர்கள் ஒழுங்கான விமர்சனங்களை முன் வைக்காத நிலையில் புலிகள் தொடர்பாக இந்த நம்பிக்கையீனங்கள் தொடர்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு.

### தமிழ் நாடு அரசும் நாமும்

தமிழ் நாடு அரசு எம்மைக் கையாண்ட விதத்தினைப் பற்றிக் கூற வேண்டும். முதன் முதலில் சுதன் ரமேஸ் விவகாரத்தில் அவர்களின் விடுதலையில் ஈடுபட்ட அதிகாரிகள் அன்றிலிருந்து அவர்களின் கண்காணிப்புக்குள் எம்மையும் மற்றைய இயக்கங்கள் போல் வைத்திருந்தனர். அதாவது ஒரு அதிகாரி காலையில் சைக்கிளில் ஒவ்வொரு இயக்கங்களின் அலுவலகங்களுக்கும் போய் நிலைமைகளைக் கேட்டும் அவதானித்தும் மேலதிகாரிகளுக்குத் தகவல்கள் சமர்ப்பிப்பார். இவ்வாறு தான் நாம் இருக்கும் வீட்டிற்கும் வருவார். அங்கு என்ன நடக்கின்றது? யார் யார் வந்திருக்கிறார்கள்? எத்தனை பேர் வீட்டில் இல்லை? எங்கு போயிருக்கிறார்கள்? போன்ற பல விசயங்களையும் அறிய முயற்சிப்பார். ஆரம்பத்தில் இதில் அதிக கவனம் செலுத்தினாலும் பின்னர் எமது நடவடிக்கைகள் எதுவும் அவர்களுக்கு புதிய தகவல்களைக் கொடுப்பது போன்று இல்லாத நிலையில் தினமும் வருவதை நிறுத்திக் கொண்டு வாரத்திற்கு இரு தடவை என்றும் பின்னர் வாரத்திற்கு ஒரு தடவையாக மாற்றிக் கொண்டனர். இந்த மாற்றம் எமது வீட்டிற்கு வரும் அதிகாரியின் தேவையுமாகும். அதாவது சைக்கிளில் ஒவ்வொரு நாளும் எமது வீட்டிற்கு வருவது கஷ்டமானதாக (அவரின் உடல்நிலையின் அடிப்படையில்) கருதினார். ஆனால் மேலதிகாரிகள் கேட்டால் அவர் ஒவ்வொரு நாளும் வருவதாக எம்மைச் சொல்லச் சொன்னார். இது எம்மைப் பொறுத்த வரையிலும் உடன்பாடானதும் ஆகும். முன்பு கூறியது போல ஒரு வீட்டினை வாடகைக்கு எடுப்பதற்கும் வீடு மாறும் போது உரிமையாளர் நாம் கொடுத்த பணத்தினைத் தராத பட்சத்தில் இவர்களின் உதவி எமக்குப் பெரிதும் உதவியது. எமது பாதுகாப்பு விடயத்தில், குறிப்பாக மனோ மாஸ்ரரை ரெலோ கடத்த எடுத்த முயற்சியை முறியடிப்பதிலும் இவர்களின் உதவி பெரிதும் கிடைத்தது. கடைசி காலங்களில் சும்மா இருப்பதை விட ஏதாவது கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம் என்று முடிவு செய்த போது எமக்குப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அனுமதி எடுத்துத் தந்தனர். இத்தகைய அனுமதியை இந்தியப் பிரஜை எடுப்பது என்றால் பல காலமாகும். பல லட்சங்கள் லஞ்சம் கொடுக்க வேண்டும். ஆனால் எம்மிடம் எதுவித சட்டரீதியான பத்திரங்களும் இல்லாமலே இவர்கள் எடுத்துத் தந்தனர். ஆனால் எமது பொருளாதார நிலைகளின் நிமித்தம் கிடைத்த அனுமதியை விட்டு விட்டு பின்னர் நாட்டுக்குச் சென்று விட்டோம். இவ்வாறு எமது பாதுகாப்பிற்காகவும் எமது தேவைகள் பலவற்றுக்காகவும் அவர்கள் உயர் அதிகாரிகள் மட்டத்தில் இருந்து உதவிகள் செய்தனர். அவர்கள் ஏன் உதவி செய்தனர் என்பதற்குப் பல காரணங்கள் கூறலாம். நாம் இந்திய விசுவாசிகளாக இல்லாமல் இருந்தும் ஏன் எமக்கு உதவினார்கள்? என்ற கேள்விக்கு எனக்குத் தெரிந்த பல விசயங்களை எழுத விரும்புகிறேன். அந்த அதிகாரிகளுக்கும் எமக்கும் இடையிலான உறவுகளையும் கூற விரும்புகிறேன்.




நாம் ரெலோவை விட்டுப் பிரிந்தவுடன் எமக்குள் இருந்த நிலையில் இன்னுமொரு ஸ்தாபனமாக வேலை செய்கின்ற முடிவில் இருந்ததினால் இந்திய அதிகாரிகளில் எமது நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்தே கண்காணிக்கத் தொடங்கினர். பின்னர் இந்த நிலை மாறி தற்காலிக அன்றாட வாழ்வுப் போராட்டமாக மாறினாலும் எம்முடன் தொடர்புகளை கண்காணித்துக் கொண்டிருந்தனர். உதாரணமாக, எமக்கும் யார் யாருக்கும் தொடர்பு? நாட்டிற்குப் போய் வர யார் உதவி செய்கின்றார்கள்? பணத்திற்கு நாம் என்ன செய்கின்றோம்?

நாம் எங்கு போவதென்றாலும் நாம் அவர்களுக்குச் சொல்லி விட்டுப் போக வேண்டும் எனவும் எதிர்பார்த்தனர். ஆரம்பத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் எமது நாட்டின் பயணங்களுக்கு உதவி செய்தாலும் பின்னர் அவர்களுக்கு பொருளாதார மற்றும் பல நெருக்கடிகள் ஏற்பட்டதால் நாம் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையின் உதவியுடன் போய் வந்தோம். தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, என்.எல்.எஃவ்.ரி போன்றவை இந்திய அரசின் ஊடுருவலைப் பகிரங்கமாக எதிர்த்து வேலை செய்தவை. எனவே பேரவை, என்.எல்.எஃவ்.ரி போன்றவை தடைசெய்யப்பட்ட அமைப்புக்களாக இந்திய அதிகாரிகளினால் கையாளப்பட்டன. தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் நாம் தொடர்பு வைத்திருந்தது அதிகாரிகளுக்கு மறைக்கப்பட்டிருந்தது. நான் வேதாரண்யப் பகுதிக்கு ஒருமுறை போயிருந்த போது என்.எல்.எஃவ்.ரி தோழர் ஒருவரைக் கண்டு கதைத்தேன். அவர்களின் வீட்டிற்குப் போகாமல் நான் பஸ் நிலையத்தில் நிற்பது போலவும் அவரும் பஸ் நிலையத்தில் நிற்பது போலவும் எமது சந்திப்பு நடைபெற்றது. அவர்களின் வீட்டைத் தவிர்த்ததற்கு காரணம் அவர்களின் வீட்டிற்கு முன்னால் எப்பவும் ஒரு அதிகாரி ஏதாவது வேடத்தில் நின்று நடப்பதைக் கவனிப்பார். இதன் விளைவுகள் மோசமாகி விடும் என்பதினால் வீட்டைத் தவிர்த்தேன். இந்த நிலையில் பஸ் நிலையத்தில் நாம் கதைத்துக் கொண்டிருந்த போது ஒரு அதிகாரி வந்தார். அவர் நான் எந்த இயக்கத்தினைச் சேர்ந்தவன் என்றும் மற்றவருக்கும் எனக்கும் என்ன வகையான உறவு என்பது பற்றியும் விசாரித்தார். நான் அந்த அதிகாரிக்குச் சென்னை போவதற்காக பஸ் நிலையத்திற்கு வந்ததாகவும் அவரிடம் பஸ் எப்ப வரும் போன்ற விடயங்களைக் கேட்டதாகவும் கூறி நான் ரெலோவில் இருந்து பிரிந்த குழுவினைச் சேர்ந்தவன் என்றும் சென்னையில் எம்மைக் கையாளும் அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டேன். உடனே அந்த அதிகாரி தானும் சென்னை போக வேண்டும் என்றும் சென்னைக்குப் போனவுடன் என்னை அதிகாரியிடம் கூட்டிச் சென்று விசாரித்த பின்பு தான் நான் வீட்டிற்குப் போகலாம் என்றும் கூறினார். உண்மையில் நான் சென்னை போக நிற்காததால் பணத்தை என்னிடம் நின்ற மற்றத் தோழரிடம் வாங்கிக் கொண்டு சென்னை போகப் புறப்பட்டேன். எனது பயணம் நேரடியாகச் சென்னை போகும் பஸ்ஸில் போகாமல் நாகபட்டினம் போய் அங்கிருந்து சென்னை செல்வதாக அதிகாரிக்குக் கூறினேன். அவரும் தானும் அந்த வழியால் போவதாகக் கூறி எனக்கருகே ஏறி அமர்ந்து கொண்டார். வேறு வழியின்றி சென்னை செல்லத் தான் வேண்டும் என்கிற நிலை எனக்கேற்பட்டது. நாகபட்டினத்திலிருந்து பஸ் புறப்பட்டவுடன் அவர் என்னைக் காலையில் சென்னை சென்றதும் அதிகாரிகளை சந்திக்கச் சொல்லி விட்டு பஸ்ஸிலிருந்து இறங்கி விட்டார். சென்னை வந்தடைந்ததும் இரவு நேரப்பயணம் என்பதால் வீட்டில் தூங்கி விட்டேன். காலை 10 மணியளவில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. ஒரு அதிகாரி வந்து மேலதிகாரிகள் உடனடியாக என்னை வரட்டுமாம் என்று சொன்னார். அவருடன் புறப்பட்டுச் சென்றேன். அங்கு அந்த மேலதிகாரிகள் முன்பு போல இல்லாமல் மிகவும் அதிகாரத்துடன் நான் ஏன் வேதாரண்யம் சென்றேன்? எங்கு தங்கியிருந்தேன்? பஸ் நிலையத்தில் என்னுடன் கதைத்தவர் யார்? அவருக்கும் எனக்கும் என்ன தொடர்பு? போன்ற பல கேள்விகள் கேட்டனர். இதற்குப் பதில் கூறிய பின் தினமும் தம்மை வந்து சந்தித்துப் போகச் சொன்னார்கள்.

அவர் நான் எந்த இயக்கத்தினைச் சேர்ந்தவன் என்றும் மற்றவருக்கும் எனக்கும் என்ன வகையான உறவு என்பது பற்றியும் விசாரித்தார். நான் அந்த அதிகாரிக்குச் சென்னை போவதற்காக பஸ் நிலையத்திற்கு வந்ததாகவும் அவரிடம் பஸ் எப்ப வரும் போன்ற விடயங்களைக் கேட்டதாகவும் கூறி நான் ரெலோவில் இருந்து பிரிந்த குழுவினைச் சேர்ந்தவன் என்றும் சென்னையில் எம்மைக் கையாளும் அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டேன். உடனே அந்த அதிகாரி தானும் சென்னை போக வேண்டும் என்றும் சென்னைக்குப் போனவுடன் என்னை அதிகாரியிடம் கூட்டிச் சென்று விசாரித்த பின்பு தான் நான் வீட்டிற்குப் போகலாம் என்றும் கூறினார். உண்மையில் நான் சென்னை போக நிற்காததால் பணத்தை என்னிடம் நின்ற மற்றத் தோழரிடம் வாங்கிக் கொண்டு சென்னை போகப் புறப்பட்டேன்.

### NLFT யின் முட்டாள்தனம்

இவ்வாறு அவர்கள் சந்திக்கச் செல்லும் சமயத்தில் தான் ஒரு நாள் என்.எல்.எஃவ்.ரியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அங்கு வந்திருந்தனர். இவர்கள் கைது செய்யப்பட்ட விபரம் எவருக்குமே தெரியாமல் அந்த இருவருக்கும் விசேட கவனிப்பு அதிகாரிகளினால் கொடுக்கப்பட்டிருந்தது. பலமாகத் தாக்கப்பட்டிருந்த அவர்கள் என்னைக் கண்டதும் என்மூலம் தாங்கள் கைது செய்யப்பட்டிருப்பதையும் தங்களை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை தமது தோழர்கள் மூலம் எடுக்கச் சொல்லியும் என்னிடம் தகவல்கள் சொன்னார்கள். இவர்களுக்கும் எனக்கும் எந்தவிதமான உறவுகளும் இல்லாதது போல அதிகாரிகளுக்கு முன் நடந்து கொண்டேன்.

இவர்கள் கைது செய்யப்பட்ட விபரம் எமது போராட்டத்தில் மிகவும் முட்டாள்தனமான சம்பவங்களில் ஒன்றாகும். என்.எல்.எஃவ்.ரி ஏற்கெனவே குறிப்பிட்டது போல இந்திய அரசிற்கு வேண்டப்படாதவர்களாக இருந்தார்கள். நாம் பகிரங்கமாக நடமாடுவோம். ஆனால் அவர்கள் பகிரங்கமாக நடமாட முடியாது. அது தான் என்.எல்.எஃவ்.ரியின் நிலைமையாகும். இந்த வேளையில் கிரேனேட்டுக்களைத் தயாரித்து நாட்டிற்கு கொண்டு போக முயற்சி எடுத்தனர். சென்னையிலிருந்து பஸ்ஸின் மூலமாக குண்டுகளை வேதாரண்யம் கொண்டு போயிருந்தனர்.

தொடரும்

தேவமகன்

நன்றி - நூலகத்திட்டம்




# பயங்கரவாதி லேபிள் குத்தும் சர்வதேச பயங்கரவாதிகள்!

"இன்ரப் போல்" என்ற பெயரைக் கேள்விப் படாதவர்கள் மிகக் குறைவு. அதிலும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் இருக்கின்ற ஒருவர் இதைப் பற்றிக் கேள்விப் படாமல் இருக்கும் வாய்ப்பு மிக மிகக் குறைவு.

"சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பான இந்த அமைப்பு, சர்வதேச குற்றவாளிகளைக் கைது செய்வதற்கென சர்வதேச நாடுகளால் அணுகப்படும் ஒரு நிறுவனமாகும். தமது நாடுகளில் உள்ள, தம்மால் கைது செய்ய முடியாதவர்களையும், பிற நாடுகளிலுள்ள தமது நாட்டவரையும் கைது செய்து விசாரிக்க வேண்டிய தேவை ஏற்படும் போது அந்நாடுகள் இந் நிறுவனத்தின் உதவியை நாடும்.

இலங்கையும், இந்தியாவும் கூட்டாக இன்ரப் போலிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க கடந்த பெப்ரவரி மாதம் முதல் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், அவரின் சகாக்கள் சிலரையும் கைது செய்யும் பொறுப்பை அது எடுத்துக் கொண்டுள்ளது. இப்போது 'பயங்கரவாதி' பிரபாகரனை கைது செய்வதற்கான அறிவிப்பை அது வெளியிட்டிருக்கிறது. இன்ரப் போலின் திறமையிலும் வேகத்திலும் பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் அரசின் பத்திரிகையான டெய்லி நியூஸ், இந்தப் பழைய விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்பக்கத்தில் பிரசுரித்துள்ளது.

புலிகளைப் பயங்கரவாத இயக்கம் என்றும், பிரபாகரனைப் பயங்கரவாதி என்றும், வர்ணிக்கும் இந்த இன்ரப்போல் தனது அங்கத்துவ நாடுகளான 178 நாடுகளிலுள்ள தனது பொலிஸ் படையினருக்கு




இவர்கள் பற்றிய தகவல்களை அனுப்பி வைத்துள்ளது என்று அச் செய்தி தெரிவிக்கிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அவரது சகாக்களையும் கைது செய்து அவர்களை நாடுகடத்த வேண்டும் என்று இன்ரப்போல் கோரியுள்ளதாகவும், இச்செய்தி கூறுகிறது. பிரபாகரன் கைது செய்யப்பட்டு விடுவதற்கான தருணங்கள் நெருங்கி விட்டன என்று அப்பாவித்தனமாக நம்பும் ஆசையை டெய்லி நியூசின் இந்தச் செய்தி வெளிப்படுத்தி நிற்கின்றது. ஆயினும், அதன் நோக்கம் பிரதானமாக 'பயங்கரவாதம்', பயங்கரவாதி என்ற சொற்களையும் புலிகள் பயங்கரவாதிகள் என்பதையும் உலக அளவில் முடிந்த அளவுக்குப் பரவலாக்கும் நோக்குடன் செயற்படும் அரசின் பிரச்சாரத்தின் ஒரு பகுதியே இச்செய்தி ஆகும்.

அண்மையில் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று அறிவித்து அதைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வெளி நாட்டமைச்சர் கதிர்காமர் இங்கிலாந்திடம் கேட்டிருந்தது தெரிந்ததே. இங்கிலாந்து இந்த விடயம் தொடர்பாக அவ்வளவாக அலட்டிக் கொள்ளாதது மட்டுமல்ல, அத்தகைய ஒரு தீர்மானம் பற்றிய முடிவுக்கு வர ஓராண்டுக்கு மேல் எடுக்கும் என்று தெரிவித்தும் இருந்தது. ஆயினும். இங்கிலாந்து அவ்வாறு செய்யாதவிடத்து தமது நாட்டுக்கும், இங்கிலாந்துக்கும் இடையிலான இராஜரீக உறவில் விரிசல்கள் ஏற்படும் என்றும், கதிர்காமர் தெரிவித்திருந்தார். இப்போது இவ்வாண்டின் முற்பகுதிக்குள் வெளியிடப்படவுள்ள பிரித்தானியாவின் பயங்கரவாதிகளது பட்டியலில் புலிகளும் இடம்பெறுவர் என்று இலங்கை அரசியல்வாதிகள், சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் மத்தியில் ஆழ்ந்த நம்பிக்கை நிலவுகிறது.

புலிகள் போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக அறிவித்திருந்த போதும், அவர்களுடன் யுத்தமிடுவதிலேயே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை தெரிவித்த அனைவரும் புலிகளின் இந்தப் போர் நிறுத்தச் செயலுக்கு காரணம் பிரிட்டன் கொண்டு வரவுள்ள பட்டியலில் தான் இடம்பெற்றுவிடக் கூடாது என்ற புலிகள் அஞ்சுவதே என்று கருத்து வெளியிட்டிருந்தனர்.

உண்மையில், பயங்கரவாதம் என்றால் என்ன? மேற்கு நாடுகளும், கதிர்காமரும் எதைத் தான் அப்படி 'பயங்கரவாதம்' என் சொல்லால் புரிந்து கொள்கின்றனர்? பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் தான் இங்கே நிலவுகிறது?

'பயங்கரவாதம் என்ற சொல் அடக்குமுறை அரசுகளால் தமது ஒடுக்குதல்களுக்கு அரசியல் ரீதியாகவும், வேறுவிதங்களிலும் மேற்கு நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கு நாடுகளில் உள்ள மக்கள் தங்கள் அரசுகளுக்கு எதிராக வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபடுவது சட்டவிரோதமானது என்று பொதுவாக ஏற்றுக் கொண்டிருப்பது இந்த நாடுகளுக்கு வசதியாகவுள்ளது" - என்கிறார் சுரேன் மனோகரன்.

இக்பால் அகமத் கொலாராடோ பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த ஒரு கட்டுரையில் இப்படி எழுதுகிறார்.

"1930களிலும் 40களிலும் பலஸ்தீனத்தில் இருந்த யூத தலைமறைவு கிளர்ச்சியாளர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டனர். பிறகு புது விடயங்கள் நடந்தன. 1942இல் யூத அழித்தொழிப்பு நடந்தது. மேற்குலகில் யூத மக்களுக்கு ஆதரவான ஒரு மிதவாத அனுதாபம் வளரத் தொடங்கியது. அன்றுவரை பலஸ்தீனத்தின் பயங்கரவாதிகளாக இருந்த சியோனிஸ்டுக்கள் 1944-45இல் திடீரென 'விடுதலைப் போராளிகளாக' வர்ணிக்கப்படத் தொடங்கினர். இஸ்ரேலின் குறைந்த பட்சம் இரு பிரதமர்களாவது (மெனாஹெம், பெகின் உட்பட) 'பயங்கரவாதிகளை, பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம்' என்ற அறிவிப்புடன் புத்தகங்களிலும், சுவரொட்டிகளிலும் படங்களுடன் இடம்பிடித்திருந்தனர். பிரதமர் பெகினைப் பிடித்து தருபவர்களுக்கு ஒரு லட்சம் ஸ்ரேலிங் பவுண் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனக்குத் தெரிந்தளவில் பயங்கரவாதி ஒருவருக்கு நிர்ணயிக்கப்பட்ட மிகப் பெரியளவு சன்மானத் தொகை இது என்று நினைக்கின்றேன்.

"1969 முதல் 1990 வரை பலஸ்தீன விடுதலை இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டு வந்தது, யசீர் அரபாத்தை அமெரிக்க தொடர்பு சாதனங்கள் 'பயங்கரவாதி' என்று வர்ணித்தன. நியூயோர்க் ரைம்சில் வில்லியம் சபைர் 'பயங்கரவாதத்தின் தலைவர்' என்று அவரை வர்ணித்திருந்தார்."

"ஆனால், 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ம் திகதி ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு வலது புறமாக நின்றபடி எடுக்கப்பட்ட யசீர் அரபாத்தின் படத்தைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். கிளின்ரனின் இடதுபுறத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு நின்றிருந்தார்."

"1985 இல் ஜனாதிபதி றொனால்ட் றேகனிடம் தாடி வைத்த மனிதர்களின் கூட்டம் ஒன்று வந்து சேர்ந்தது. அவர்களது பயங்கரப் பார்வை கொண்ட தோற்றம் அவர்கள் வேறொரு நூற்றாண்டைச் சேர்ந்தவர்களோ என்று எண்ண வைக்கும் தன்மை கொண்டதாய் இருந்தது. வெள்ளை மாளிகையில் அவர்களைச் சந்தித்த றேகன், அவர்களைப் பத்திரிகையாளர்களுக்கு காட்டி 'இவர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்த மூதாதையர்களின் நல்லொழுக்கத்தின் இன்றைய வடிவம்' என்று சொன்னார். அவர்கள் ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன் கெரில்லாக்கள். அவர்கள் அப்போது தங்களது சக்கரவர்த்திக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்தி யுத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஒகஸ்ட் 1998ல் அமெரிக்க ஜனாதிபதி, இந்து சமுத்திரத்தில் நின்ற அமெரிக்க கடற்படைக்கு ஆப்கானிஸ்தான் முகாமில் இருந்த ஒசாமா பின்லேடனையும் அவரது சகாக்களையும் கொல்வதற்கு ஏவுகணைத் தாக்குதலை நடாத்துமாறு உத்தரவிட்டார். பதினைந்து ஏவுகணைகள் குறிவைத்துச் செலுத்தப்பட்ட இந்தப் பின் லேடென், றேகனால் எமது மூதாதையரது நல்லொழுக்கப் பிரதிநிதிகளாக வர்ணிக்கப்பட்டவர்களுள் ஒருவர்!

"இவையெல்லாம் பயங்கரவாதம் என்பது மிகவும் சிக்கலான ஒரு விடயம் ஏன்பதையே காட்டுகின்றன. நேற்றைய பயங்கரவாதி இன்றைய ஹீரோ ஆகிறான். நேற்றைய ஹீரோ இன்றைய பயங்கரவாதி ஆகிறான். இந்தச் சிக்கலை புரிந்துகொள்ள நாம் விழிப்பாக இருக்க வேண்டும். எது பயங்கரவாதம், எது பயங்கரவாதம் அல்ல என்று புரிந்துகொள்ள இது அவசியம். ஆனால், அதைவிட அவசியம், அதற்கு காரணம் என்ன? அதை நிறுத்துவது எப்படி என்பது தான்."

உண்மையில் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை இதுவரை யாரும் ஒழுங்காகச் சொன்னதில்லை. அமெரிக்காவினதும், அதன் மேற்கத்தைய சகாக்களதும் அபிப்பிராயம் என்னவென்றால் ஒரு நாட்டில் சட்டவிரோதமாக கணிக்கப்படும் ஒரு விடயம், அனைத்து நாடுகளிலும் அப்படியே கணிக்கப்பட வேண்டும் என்பதாகும். அமெரிக்க ஜனாதிபதி றேகனின் காலத்தில் 'பயங்கரவாதத்தை எதிர்த்த போராட்டம்' என்ற கோட்பாடு அமெரிக்க இராணுவத்தினது பாரிய விரிவாக்கத்துடனும், கூட்டு நாடுகளின் பொருளாதார, ஆதரவுடனும், பெருமளவு உலகநாடுகளின் ஒடுக்கு முறை அரசுகட்கு தத்தம் நாட்டில் உள்ள உள்நாட்டு எதிர்ப்புகளை நசுக்குவதில் ஊக்கம் பெற்றது.

இதற்காக பயங்கரவாதம் என்ற 'லேபிள்' மிகவும் இலகுவாகவே குத்தப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால், இந்த நாடுகளின் அரசுகள் மேற்குலகுக்குச் சார்பான அரசுகளானால், அந்த நாடுகளில் உள்ள ஆயுதம் ஏந்திய எதிர்ப்பாளர்கள் பயங்கரவாதிகளானார்கள். இந்த அரசுகள் மேற்குலகுக்கு எதிரான போக்குள்ளவர்கள் என்றால் இந்த நாடுகளின் கிளர்ச்சியாளர்கள் 'விடுதலைப் போராளிகளானார்கள்'!

இதுதான் பலஸ்தீனியர்கள் அமெரிக்காவை சார்ந்து நின்ற இஸ்ரேலை எதிர்ப்பவர்கள் என்பதால் அவர்கள் பயங்கரவாதிகளாக இருந்ததற்கான காரணம். அதேவேளை நிக்கரகுவாவில் கிளர்ச்சியில் ஈடுபட்ட கொன்ட்ராஸ் படையினர், அவர்களது தாக்குதல்கள் பெரும்பாலும் சிவிலியன்களுக்கு எதிரானதாக இருந்தாலும் அவர்கள் 'விடுதலைப் போராளிகள்' ஆகினர்.

துருக்கியில் தமக்கு அரசதிகாரம் கோரிப் போரிடும் குர்திஸ் இன மக்கள் 'பயங்கரவாதிகள்'. அதேவேளை, சதாம் ஹுசேனை எதிர்த்துப் போரிடும் அவர்களது சகோதரர்கள் 'விடுதலைப் போராளிகள்'!

அதாவது அமெரிக்க நலன்களுக்கு எது எதிரானது எது சாதகமானது என்பதை வைத்து 'பயங்கரவாதம்' என்ற சொல் நிர்ணயிக்கப் படுகிறது. இது பொது விதி.

ஆயினும் அதில் கூட எத்தனை குளறுபடிகள்?

அமெரிக்காவின் பயங்கரவாதம் பற்றிப்பேசும் அரச சார்பானவர்கள் ஆட்சியாளர்களது அறிக்கைகளையோ, பேச்சுக்களையோ எடுத்துப் பார்த்தால் பலவிதமான விளக்கங்களை நாம் காண முடியும்.

பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்கா அரசின் கருத்துக்கள் பெரும்பாலும் பின்வரும் விதத்திலேயே அமைந்திருப்பதாக கூறுகிறார் இக்பால் அஃபத்.

"பயங்கரவாதம் என்பது, பயங்கரவாதம் என நாங்கள் அழைக்கும் காட்டுமிராண்டித்தனத்தின் நவீன வடிவம்"

"பயங்கரவாதம் என்பது ஒருவகை அரசியல் வன்முறை".

"பயங்கரவாதம் என்பது மேற்கத்தைய நாகரீகத்திற்கு வந்துள்ள ஒரு அச்சுறுத்தல்!"

"பயங்கரவாதம் என்பது மேற்கத்தைய உயர் விழுமியங்களுக்கு வந்துள்ள ஒரு ஆபத்து"

வரைவிலக்கணங்களின் இந்தக் குழறுபடிக்கு நிச்சயமாகக் காரணம் இருக்கிறது. எந்த நாட்டுக்குச் சார்பாக அல்லது எதிராக அமெரிக்கா செயற்பட விரும்புகிறதோ அதற்கேற்ற விதத்தில் அதன் வரைவிலக்கணம் அமைந்து விடுகிறது. பொதுவாகவே பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படல் என்ற பேரால் முழு உலகையும் கபளீகரம் செய்து தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பும் அமெரிக்கா வசதியான வரைவிலக்கணங்களை உருவாக்கி வைத்திருக்கிறது. அதன் பார்வையில் இஸ்ரேல் பயங்கரவாத அரசு அல்ல. ஈராக் ஒரு பயங்கரவாத அரசைக் கொண்டுள்ளது!

இன்று புலிகளுக்கு எதிராக அது கொண்டு வந்துள்ள தடையும் கூட இந்த அடிப்படையில் தான் கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கை அரசை இந்திய உபகண்டத்தில் தனது கைகளுள் வைத்திருப்பதன் லாபத்தை அறிந்த அமெரிக்கா இதைவிட வேறுவழியில் சிந்தித்து இருக்க முடியாது.

இதையே பிரித்தானியாவும் பின்பற்ற வேண்டும் என்று கோருகிறார் அமைச்சர் கதிர்காமர்.

பிரித்தானியாவுக்கு அப்படி ஒரு தீர்மானம் எடுப்பதில் சட்டரீதியான, நியாயமான காரணங்கள் இல்லாது இருப்பினும் அமெரிக்காவின் முடிவை அமுல்படுத்தாமல் அதனால் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும் என்பது கேள்விக்குறியே. இன்று இந்தியாவும் புலிகளை பயங்கரவாதிகள் என்று வெளிப்படையாக தெரிவித்துள்ள ஒரு சூழலில் பிரிட்டனின் இந்த தயக்கம் அதிக நாள் தாக்குப்பிடிக்குமா என்பது கேள்வி.

எவ்வாறாயினும், ஏகாதிபத்தியங்களினாலும் ஒடுக்கு முறை அரசுகளாலும் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டப்பட்ட

⇨ 19

நன்றி - நூலகத்திட்டம்



# அழிந்து கொண்டிருக்கும் ஒரு அதிர்ஷ்டத் தீவு!

## சிங்கப்பூர் பிரதமர் லீ குவன் யூவின் பார்வையில் இலங்கை

*துயரிலும், நம்பிக்கையின்மையிலும் நெருக்கடியிலும் இன்று சிக்கித்தவிக்கிறது என்று இலங்கையை வர்ணிக்கும், சிங்கப்பூர் பிரதமர் லீ. குவான் யூ இலங்கை அரசு தலைவர்களுடனான தன் அனுபவங்களை இங்கே கூறுகிறார்.*

*அவருடைய கருத்துக்கள் தீவிர கம்யூனிச எதிர்ப்பும், முதலாளித்துவ வளர்ச்சி நோக்கும் கொண்டவை என்ற போதும் இனச்சிக்கல் தொடர்பான அவரது கருத்துக்கள் கவனத்துக்குரியவை.*

*முதலாளிய அமைப்புக்குள்ளேயே இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியுமான ஒரு சூழலை தவறவிட்ட இலங்கை அரசாங்கங்களின் தலைவர்கள் பற்றிய அவரது கருத்துக்கள் வாசகர்களுக்கு தமிழில் தருகிறோம்.*

எனது இலங்கைக்கான முதற் பயணம் 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் லண்டனுக்கு செல்லும் வழியில் அமைந்தது. அதே வருடம் புதிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சொலமன் வெஸ்ட் ரிஜ்வே பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதம மந்திரியானார். அவர் சிங்களத்தை அரச கரும மொழியாகவும், பௌத்த மதத்தை தேசிய மதமாகவும் ஆக்குவதாக உறுதியளித்திருந்தார்.

அவர் ஆங்கிலத்தில் பயிற்றப் பெற்ற கிறிஸ்தவர். ஆங்கிலக் கனவான் தன்மை கொண்ட சுதேசி. இவர் சுதேசியவாதத்தில் தீர்மானமாய் இருந்தார். இதனால் பௌத்த மதத்தை தழுவி சிங்கள மொழியினை முதன்மைப் படுத்தினார். இதுதான் இலங்கையின் உட்பிளவுகளின் வெளிப்பாட்டின் தொடக்கமாக அமைந்தது. நிமிர்ந்த குள்ளமான நேர்த்தியான உடையணிந்த பேச்சுவன்மைமிக்க பண்டாரநாயக்க இலங்கையை சுதேசிய தன்மைமிக்க நாடாக மாற்றுவதற்கான மக்களது ஆணையை பெற்றமை பற்றி பெரிதும், உவப்படைந்திருந்தார். இந்தத் தன்மை அடிப்படைகளில் அக்கால அரசியல் மேலோங்கிகளிடையே நிலவி வந்த மேலைத்துவப் போக்கிற்கான ஒரு எதிர்வினையாகவே அமைந்தது.

சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்து தமிழர் எதிர்கொள்ளக் கூடிய பின்னடைவுகள் பற்றியோ அல்லது பௌத்தம் தேசியமாக்கப்பட்டதால் இந்துக்களிலும், முஸ்லிம்களிலும், கிறிஸ்தவர்களிலும் அது ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தைப்பற்றியோ பண்டாரநாயக்கா கவலைப்பட்டதாகத் தென்படவில்லை.

பண்டாரநாயக்கா ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்து மாணவரொன்றியத்தின் தலைவராக இருந்தவர். இன்னமும் ஒக்போர்ட் பல்கலைக்கழக விவாத அரங்கில் பேசும்பாணியிலேயே பேசிவந்தார். மூன்று வருடங்களின் பின் இவர் ஒரு புத்தபிக்குவால் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த நான் அதிர்ச்சியடைந்தேன். நான் நினைக்கின்றேன். பௌத்தத்தை தேசிய மதமாக்குவதில் அதீத ஈடுபாடு காட்டாததன் விளைவாக விசனமடைந்த ஒரு பௌத்த பிக்குவாலேயே இவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவரது மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க அனுதாப



சிங்கப்பூர் அரசுத் தலைவர் மாளிகை

வாக்குகள் மூலம் பிரதம மந்திரியானார். இவர் பேச்சுவன்மை கைவரப் பெற்றிராவிடினும், ஒரு கடினமாக தலைவராக அமைந்தார். இவரை நான் 1970 ஒகஸ்டில் இலங்கையில் சந்தித்தேன். இவர் தீர்க்கமான போக்குடையவராகவும், அணிசேரா கொள்கையில் நம்பிக்கையுடையவராகவும், காணப்பட்டார். தென்வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்கா படைகள் விலக்கப்பட வேண்டும் என்பதும், இந்து சமூத்திர பிராந்தியம் அணுவாயுதம் அற்ற வல்லரசுகளின் ஈடுபாடற்ற பிரதேசமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதும், இலங்கையின் கருத்தாயிருந்தது.

நான் வெளிநாட்டுக்கொள்கை சம்பந்தமான எனது மாறுபட்ட கருத்தினை முன்வைத்தேன். தென்வியட்நாம் கம்யூனிஸ்டுகள் வசமானால் அது எப்படிச் சிங்கப்பூரை பாதிக்கும் என விளக்கிக் கூறினேன். அத்துடன் பிராந்திய வல்லரசுகளான சீனாவும் யப்பானும், தமது கடற் படைத்தளங்களை விஸ்தரிக்கும். எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகளுக்கு கொள்கையளவில் ஒத்துப்போவது எம்மால் இயலாத காரியம்.

இலங்கை பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரிப்பொது நலவாய நாடு. இது சுதந்திரத்திற்காக வளர்த்தெடுக்கப்பட்டிருந்த நாடு. இலங்கை ஒரு நடுத்தர அளவுடைய நாடு. 10 மில்லியன்களும் குறைந்த சனத் தொகையைக் கொண்டிருந்தது. அங்கு நல்ல கல்வித்தரம் காணப்பட்டது. அது தரமான இரண்டு பல்கலைக்கழகங்களையும் சுதேசிகளை பெருமளவில் கொண்ட சிவில் நிர்வாகத்தையும் கொண்டிருந்தது. நகரசபைத் தேர்தல்கள் மூலமாக பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் 1930களிலிருந்தே நல்ல அனுபவம் பெற்றிருந்தது. 1948ல் இலங்கை சுதந்திரமடைந்த பொழுதும் அது படிப்படியாக சுதந்திரத்தை நோக்கி வளர்த்தெடுக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும், நினைத்ததைப்போல இலங்கை சோபிக்கவில்லை. எனது பல ஆண்டுகால இலங்கைப் பயணங்களின் போது ஒரு நம்பிக்கைக்குரிய நாடு சீரழிவதைக் கண்டேன். ஒரு பிரசைக்கு ஒரு வாக்கு என்ற கோட்பாடு இலங்கையில் அடிப்படையான பிரச்சினையை தீர்க்கவில்லை. சனத்தொகையில் 8 மில்லியனாக இருந்த சிங்கள பெரும்பான்மையினர் 2 மில்லியன் தமிழரை எப்பொழுதும் வாக்குப்பலத்தால் வெல்லக் கூடியதாக இருந்தது. சிங்களவர் பௌத்த மதத்தை தேசிய மதமாக்கினர். இந்துக்களான தமிழர் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

1966ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நான் லண்டனிலிருந்து திரும்பும்போது பிரதமர் டட்லி சேனாநாயக்காவைச் சந்திக்க கொழும்பு சென்றேன். இவர் மென்மையானவர். எதனையும் விதிவழியென ஏற்றிருப்பவர். அன்று இரவு விருந்தின்போது ஒரு விவேகமான ஒரு சிங்கள முதியவர் கூறினார். "இது சர்வசன தேர்தலின் ஒரு தவிர்க்க முடியாத விளைவு" சிங்களவர் தம்மை ஒரு மேலாட்சிமிக்க இனமாக உருவாக்க முனைந்து நின்றனர். பிரித்தானியரின் நிர்வாகத்தின் கீழிருந்த தேயிலைத் தோட்டங்களையும், இரப்பர் தோட்டங்களையும் தாம் நிர்வாகிக்க வேண்டும் எனக் கருதினர். தமிழர் வகித்த சிவில் நிர்வாகச் சேவைப் பதவிகளை தாம் பெறவேண்டும் எனக் கருதினர். இதற்காக சுயபாஷைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்கள் மூன்று பாஷையிலும் கற்பிக்கத் தொடங்கின. கண்டியில் அமைந்திருந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரைச் சந்தித்தபோது நான் கேட்டேன். "எப்படி சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்ற மூன்று பொறியியலாளர்கள் இணைந்து ஒரு பாலத்தை அமைக்க முடியும்" என, அதற்கு அவர் கூறினார். "இது ஒரு அரசியல்கேள்வி. இதை நீங்கள் அரசியல்வாதிகளிடம் தான் கேட்க வேண்டும்". அவர் ஒரு பறங்கியர். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கற்றவர்.

தேயிலைத் தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன. சுதேச மேற்பார்வையாளர் பிரித்தானியரைபோல திறமை படைத்தவராக இருக்கவில்லை. தென்னைப் பயிர்ச்செய்கையும் பெரும் பாதிப்பிற்குள்ளாகி இருந்தது. நாட்டை எப்படி நடாத்துவது என்பதைக் கற்றுக்கொள்ள சிங்கள மக்கள் பேரிழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் வெகுகாலம் வரை நான் இலங்கைக்கு செல்லவில்லை. 1978ல் புதிய பிரதமரான ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்த்தனாவை நான் அவுஸ்திரேலியாவில் சந்தித்தேன். 1972ம் ஆண்டு பிரதமர் திருமதி பண்டாரநாயக்க இலங்கையை குடியரசாக மாற்றியிருந்தார். இலங்கை சிறிலங்கா என்ற பெயரைப் பெற்றது. இது இலங்கையில் ஒருவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இன்னமும் தேயிலை இலங்கைத் தேயிலை என்றே வழங்கப்பட்டுள்ளது.

சொலமன் பண்டாரநாயக்க போலவே ஜெயவர்த்தனாவும், ஒரு கிறிஸ்தவர். மக்களுடன் தன்னை இனம்காணும் பொருட்டு பௌத்த மதத்தைத்தழுவி சுதேசியத்தை வரித்துக் கொண்டவர்.

அவர் தனது 70 ஆண்டுகால வாழ்வில் பல அரசியல் மேடு பள்ளங்களைச் சந்தித்திருந்தார். இவற்றில் பெரும்பாலானவை தோல்விகளாகவே அமைந்திருந்தன. இதனால் தத்துவ ரீதியில் குறைந்த எதிர்பார்ப்புகளுடனேயே திருப்தியடைந்துவிடும் நிலையினை அடைந்து விட்டிருந்தார். அவர் சிறிலங்காவை வறுமைக்கு இட்டுச் சென்ற சோசலிச கொள்கைகளிலிருந்து விலகிச்செல்ல தீர்மானமாய் இருந்தார்.

சிட்னி நகரில் நாம் சந்தித்தபின் அவர் சிங்கப்பூர் வந்திருந்தார். எம்மையும் சிறிலங்காவின் முன்னேற்றத்தில் பங்களிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். அவரது நடைமுறைச் சாத்தியப்பாடுடைய அணுகுமுறைகள் என்னைக் கவர்ந்தன. 1978ல் நான். சிறிலங்காவிற்கு சென்றிருந்த பொழுது அவர் யாழ்ப்பாணத் தமிழருக்கு சுயாட்சி வழங்கப் போவதாகக் கூறினார். தமிழர் மீதான சிங்களவரது மேலாட்சி இப்படி இலகுவாக விட்டுக் கொடுத்து விடுபடக் கூடியது என நான் நினைக்கவில்லை. இது 1983 கலவரத்துடன் சுபீட்சமான சிறிலங்கா உருவாவதன் சாத்தியப்பாட்டை பல வருடங்களுக்கு அல்லது பல பரம்பரைகளுக்கு பின் தள்ளிவிட்டது.

அவரிடம் பல பலவீனங்கள் இருந்தன. தேசிய விமானசேவை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான அறிகுறியாக அவர் கருதினார். சிங்கப்பூர் விமானசேவையில் இலங்கையைச் சேர்ந்த சிறந்த விமானி ஒருவர் பணியாற்றினார். இந்த விமானியை வைத்து சிறிலங்காவில் ஒரு விமானச் சேவையை தொடங்க அவர் திட்டமிட்டார். ஒரு விமானியால் எப்படி ஒரு விமானச் சேவையை நடாத்த முடியும்? விமானச் சேவை நடாத்துவதாயின் பல திறமையுள்ள அதிகாரிகள் தேவை. இப்படியான திறமையுள்ள அதிகாரிகள் இலங்கையில் வேறுபல அபிவிருத்தி திட்டங்களுக்குத் தேவைப் படுவர்கள் இருந்தாலும் அவர் விமானச் சேவை தொடங்குவதில் பிடிவாதமாக இருந்தார். நாமும் பல வழிகளில் இலங்கையின் விமானச் சேவையை தொடங்கவும், வழிநடத்தவும் உதவினோம். விமான சேவைக்கு தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட விமானி எமது ஆலோசனைகளுக்கு எதிராக இரண்டு பாவிக்கப்பட்ட விமானங்களைக் கொள்வனவு செய்ததமையால் நாம் அந்த விமான சேவையுடனான தொடர்பினைத் துண்டிக்க வேண்டி ஏற்பட்டது. தேவையற்ற விஸ்தரிப்பு திறமையற்ற நிர்வாகம் போன்றவற்றால் இந்த விமான சேவை தோல்வியடைந்தது.

சிறிலங்கா சிங்கப்பூரை ஒரு வகைமாதிரியாக வைத்து முன்னேற முயற்சி செய்தது நமக்கு பெருமையாயிருந்தது. 1982ம் ஆண்டு எமது வீடமைப்புத் திட்டத்தை பின்பற்றி சிறிலங்காவில் ஒரு வீடமைப்புத் திட்டத்தினை ஆரம்பித்தார்கள். ஆயினும், நிதிவசதிகள் போதுமானதாக இருக்கவில்லை. சிறிலங்காவில் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது எமது சுதந்திர வர்த்தக வலயத்தைவிட சற்று சிறியதாக இருந்தது. தமிழ்ப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளால் பிறநாட்டு முதலீட்டாளர்கள் பின்னடையாதிருப்பின் இது வெற்றிகரமானதாகவும் அமைந்திருக்கும்.

பயிர்ச்செய்கைக்காக மீட்டெடுக்கப்பட்ட வறண்ட நிலங்களைப் பகிர்ந்தளிப்பதில் ஜெயவர்த்தனா மகிப்பெரிய தவறை விட்டார். பிற நாட்டு உதவியுடன் அவர் பண்டைக்குளங்களை மையப்படுத்தி ஒரு நீர்ப்பாசன முறையினை மீள்அறிமுகம் செய்தார். இப்படியாக மீட்டெடுக்கப்பட்ட நிலங்களை சிங்களவருக்குத் தான் பகிர்ந்தளித்தார். வரண்ட நிலப்பயிர்ச் செய்கையில் இதனால் நிலவுடைமையிழந்த நசுக்கப்பட்ட தமிழர் மத்தியிலிருந்து தமிழ்ப் புலிகள் உருவாகினர். ஜெயவர்த்தனாவின் செயலாளராக இருந்த ஒரு யாழ்ப்பாணத் தமிழரும் இதனை ஜெயவர்த்தனாவின் ஒரு பெரிய தவறு என என்னிடம் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வந்த போர் 50,000 உயிர்களையும், பல தலைவர்களின் உயிர்களையும் குடித்தது. 15 ஆண்டுகள் கடந்த பின்னும் இன்னமும் இந்தப்போர் தணிவதாகத் தோன்றவில்லை.

ஜெயவர்த்தனா 1988ம் ஆண்டு ஒரு இளைத்துப்போன மனிதராக அரசியலிலிருந்து ஒதுங்கினார். இவரைத் தொடர்ந்து வந்த பிரேமதாச ஒரு சிங்களப் பேரினவாதியாக இருந்தார்.

இவர் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் தீர்மானமாய் இருந்தார். இது ஒரு விவேகமான முடிவல்ல. இந்திய இராணுவம் சிறிலங்காவுக்காக ஒரு விரும்பப்படாத பணியை மேற்கொண்டிருந்தது.

⇨ 19

தமிழில்:
கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன்.

நன்றி - நூலகத்திட்டம்



# நீங்கள் கோடிஸ்வரனாக வேண்டுமா?

- வெயில் மொழியன்

இந்தியாவின் தனியார் தொலைக் காட்சிகள், அறியாமை அரக்கனை சங்காரம் செய்திட இந்த நூற்றாண்டின் மின்னணு யுகத்தில் "அறிவு அவதாரம்" எடுத்து ஓங்கி நிற்கின்றன. அடித்துக் கொண்டு வரும் அத்தனை அலை வரிசைகளிலும் அறிவை வளர்க்கும் (!) நோக்கமே நீக்கமற நிறைந்திருக்கிறது. மக்கள் கூட்டத்தை மேம்படுத்த மேனிகளைத்துப் பாடுபட்டவர்கள் இப்போது இறுதியாக ஓர் உத்தியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.


ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அறிவின் (!) அடிப்படையில் கோடிகள் கொட்டிக் கொடுத்து அவனை எப்படியாவது சமூக உயர்நிலைக்குக் கொண்டு வந்து விடுவது என்பதுதான் அது. ஓர் ஐந்தாண்டு திட்டத்தைவிடப் பொறுப்புணர்வோடும், இலக்குத் துல்லியத்தோடும் "அலைவரிசை முதலாளிகள்" அறிவை சகாய விலையில சாமானியர்களுக்கும் கிடைக்கச் செய்கிறார்கள். ஸ்டார் டிவி (குரோர்பதி), ஜி.டிவி (சவால்தஸ் குரோக்கா), சன் டிவி (கோடீஸ்வரன்) என்பவையே அந்த "அறிவின் அவதாரங்கள்".

ஏன் இந்தத் திடீர் 'அறிவுப் புரட்சியை' தனியார் அலைவரிசைகள் பிடித்துக் கொண்டன? இதன் பின்னணி மிகவும் வஞ்சகமானதும், அதே நேரத்தில் கூர்ந்து ஆய்வுசெய்யப்பட வேண்டிய அளவுக்கு அடி ஆழத்தில் ஆபத்தை உடையதும் ஆகும்.

உண்மையில் அறிவு என்பது இந்த "கோடி ரூபாய் சூதாட்டங்கள்" ஏற்படுத்தும் கருத்துத்தானா? இல்லை. அறிவு என்பதன் "நடை வண்டி நிலையோடு" இவர்கள் நிகழ்ச்சிகள் ஓய்ந்து விடுகின்றன. இந்த நிகழ்ச்சிகளின் கருத்தமைவின்படி, ஒரு கேள்விக்கு சரி தவறு என்று விடை சொல்வது அல்லது நான்கு விடைகளில் பொருத்தமான ஒன்றைப் பொறுக்கி எடுப்பது - இதைத்தான் நாம் 'அறிவின் நடைவண்டி நிலை' என்கிறோம்.

எப்படி எனில், தகவல்களைப் பதிவு செய்து சேகரம் பண்ணுவது மூளையின் ஒரு பணி. ஆகவே அதை அப்படியே உரிய நேரத்தில் உதிர்ப்பது என்பதை கணிப் பொறியே செய்துவிட முடியும். மனித மூளையை இதைவிட மகத்தான முறையில் வீணடிக்க முடியாது.

அறிவு என்பது ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு நாட்டுச் சூழலுக்கேற்ப ஒவ்வொரு விதமாய் கற்பிதம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சான்றாக அரசனுக்கு - போர், அரசன் நலம் - பற்றி மட்டுமே அறிவுரை வழங்கிய அதிகார மையச் சார்புடைய ஒன்றும், அறிவு என வழங்கப்பட்டிருக்கிறது. சிறந்த உள்ளர்த்தம் பொதித்த செய்யுள்கள் (குறிப்பாக



வெண்பா) இயற்றுவது என்பதும், அறிவாளியைத் தீர்மானிக்கும் அளவு கோலாக இருந்திருக்கிறது.

முகலாயப் பேரரசின் கால கட்டத்தில் சிறந்த 'சதுரங்க ஆட்டக்காரரே அறிவாளி' என்கிற அபிப்பிராயங்கள் நிலவியதுண்டு. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழர் வாழும் பகுதிகளில் "கவனகர்கள்" (பதின்பதினெண்) மிகப்பெரிய அறிவாளிகளாக மனப்பாட சக்தியாக மரியாதை பெற்றதுண்டு.




வெள்ளைக்காரர்களின் காலனிய ஆட்சியில் அவர்களின் "குமாஸ்தாக் கல்வியின் மனப்பாடக் கிளிகளாக விளங்கியவர்கள் மிகப்பெரிய அறிவாளிகளாகப் பட்டங்களோடு பவனி வந்திருக்கிறார்கள். சான்று ஜஸ்டிஸ், ராவ்பகதூர், திவான் பகதூர் சர் போன்றவை.


இதன் தொடர்ச்சியாக இன்று ஒரு கேள்விக்கு விரைவாக விடை சொல்லும் ஒரு நபரை அறிவாளி என மின் - ஊடங்கள் முன் மொழிய காகித ஊடகங்கள் வழிமொழிகின்றன. இன்றைய சமூகவியல் வரையறுப்பின்படி அறிவு என்பது நான்கு கூறுகளை உடையது அவை.

1. தகவல்களைப் புலன் வழி பதிவு செய்தல்.

2. அவற்றை எண்ணங்களாக, சிந்தனைகளாக மாற்றுதல்.

3. சிந்தனைகளின் வழி சூழலுக்குத் தகவமைதல் - தகவமைத்தல்

4. கடந்த அனுபவங்களின் இருந்து நிகழ்வுக்குப் பாடமும் எதிர்கால முன்னெச்சரிக்கை தர்க்கபூர்வமான ஊகங்களை மேற்கொள்ளல்: செயல்பட உந்துதல்.



ஆனால், இந்தத் 'தகவல் திமிர் பிடித்த' சூதாட்டமோ இவற்றின் தொடக்க நிலைத்தகுதியான தகவல்களைப் பதிவு செய்து கொண்டு அவற்றை உதிர்ப்பது என்பதை மட்டுமே அறிவுத் திரவத்தின் உச்சபட்ச கொதிநிலை என்கிறது. அதற்கான சூதாட்டப் பரிசு பார்வையாளர்களிலோ, அல்லது பங்கேற்பாளர்களிலோ உள்ள சமூகவியல் தெளிவு உள்ளவர்களையும் ஈர்க்குச்சியைத் துடுப்பாகப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கிறது.

இதன் இன்னொரு சகிக்க முடியாத விளைவு சில மீடியா பண்டிதர்கள் இந்நிகழ்ச்சிகளுக்கு கேள்வி - பதில் தயாரித்து தரும் சூதாட்டத் தரகர்களாக மாறியிருப்பது தான். இந்தத் தரகு வேலைக்கு அறிவின் பேரால் கோடிகள் கொட்டிக் கொடுக்கப்படுகின்றன. (சில தினமணி, இந்து வாசகர்கள் அதிலும் காலாவதியான தவகல்களைச் சுட்டிக்காட்டி தங்கள் அறிவின் அபாரத்தை மெச்சி தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள்.)

கடந்த சில ஆண்டுகளாகவே அழகிப் போட்டிகளின் வருகையை உச்சி மோந்து உயிர்சிலிர்ப்பவர்கள் அப்போட்டிகளில் அறிவுக்கும் போதுமான அளவுக்கு இடம் அளிக்கப்படுகிறது என்றார்கள். (இங்கே அறிவின் பயனாக வக்கிரம் காப்பாற்றப்படுவதைக் கவனிக்கவும்) அந்த நான்கே நான்கு கேள்விகள் எப்படி அழகியின் அறிவைத் தீர்மானிக்கப் போதுமானவை என்ற கேள்வியை சில காகிதப் புலிகளும் (வணிகப் பத்திரிகையாளர்கள்) கேட்டிருந்தார்கள்.

ஆனால், இன்றைக்கோ அறிவின் பெயராலேயே நடத்தப்படும் இப்போட்டிகள் குறித்து கொட்டாவி விடக்கூட வாய் திறக்க மறுக்கிறார்கள் இந்த மீடியாப் பண்டிதர்கள். ஒரு வேளை வாய்திறந்தால் அதுவும் அறிவின் அவதாரம் பற்றிய கதாகாலச் சேபமாக இருக்கிறது.

இதில் சுவாரஸ்யமான இன்னொரு விஷயம் இந்நிகழ்ச்சிகளின் நடத்துனர்கள் அனைவருமே முன்னாள் இந்நாள் நட்சத்திரங்கள்.

நட்சத்திரங்களைக் காட்டி நடைபெறும் இந்தச் சூதாட்டத்திற்கான பொருளாதாரம் விளம்பர நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்கப்படுகின்றன. விளம்பர நிறுவனங்கள் பார்வையாளர்கள் அல்லது நுகர்வோர்களிடமிருந்து பல்முனை ஏய்ப்புகளின் மூலம் சூறையாடி விடுகிறார்கள். இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் விளம்பர நிறுவனங்களையும் பொறுத்தவரை மக்கள் வெறும் பார்வையாளர்களும் வெறும் நுகர்வோர்களும் மட்டுமே.

அவர்களுக்கென தனித்த வாழ்க்கை, அலுவல், பிரச்சினைகள் என எதுவுமே இருக்காது. இருக்கவும் அனுமதியில்லை. பார்வையாளர்களின் மனத்தில் எப்போதும் ரீங்கரித்துக் கொண்டே இருக்கும் ஒரு குரல் (விளம்பரங்களில் ஒலிக்கும் கட்டையான குரல்) "மெகா சீரியல்களில் இருந்து உங்களுக்கு விடுதலை இதோ பளிச்சிடும் வெண்மையில் சூதாட்டம்" என்பது தான் அது.

நட்சத்திர நடிகர்களைத் தூண்டில் புழுக்களாக்கி நீரில் மேயும் மீன்களை (மக்களை) தங்கள் குடுவைக்குள் சேகரிக்கிறார்கள் வியாபாரிகள். மத்திய தர வர்க்க மக்களுக்குத் தெரியுமா தூண்டில் புழுக்கள் மீனுக்கு இலவசம் அல்ல என்று?! இந்த நிகழ்ச்சியில் கேட்கப்படும் கேள்விகள் ஒரு தனி மனிதனின் மனப் பாடச் சக்தியை, நினைவாற்றலைப் பரிசோதிப்பதாக

## நீங்கள் கோடீஸ்வரனாக வேண்டுமா?

இந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்த முதலாளிகள் தெளிவாக ஒரு விசயத்தைப் புரிந்து வைத்திருந்தார்கள் - அல்லது நிகழ்ச்சி மூலம் புரிந்து கொண்டார்கள். எல்லோரும் பணத்தைத் தேடி ஓடுகிறார்கள். கொஞ்சம் வரலாறு, கொஞ்சம் விளையாட்டு, கொஞ்சம் இசை, கொஞ்சம் சமையல் எல்லாவற்றையும் சேர்த்து நொதிக்க வைக்கும் ஒரு வித்தை மட்டும் தெரிந்தால் போதும்!

உலகம் முழுவதும் இந்த மோகம் பிடித்து ஆட்டுகிறது. கொலம்பியாவில் உள்ள மருந்துக் கம்பெனிகள், அரச குடும்பங்கள், லெபனியர்கள் என்று பல தரப்பையும் பிடித்துக் கொண்டு விட்டது.

இந்தியாவில் பிழிந்து எடுத்து விடுகிறார்கள். ஜப்பானில் கேள்விகள் படுசுலபம். அங்கே ரொம்பக் கஷ்டமான கேள்வி என்ன தெரியுமா? ஏப்ரல் முட்டாள் தினம் எந்த மாதத்தில் வருகிறது? ஜனவரியில், பிப்ரவரியில், மார்ச்சில், அல்லது ஏப்ரலில்.

'உங்களில் யார் கோடீஸ்வரர்?' என்ற இந்தி நிகழ்ச்சி ஸ்டார் டிவி, வலைப்பின்னல் சொந்தக்காரர் ராபர்ட் முர்தோக்கினுடையது. போட்டியில் கலந்து கொள்கிறவர்களுக்கு கோடி கிடைக்கிறதோ இல்லையோ, அமிதாப்பச்சன் போன்ற பிரபல நடிகரோடு ஒரு மாலை நேரத்தில் பொழுதைப் போக்குகிற பரவசம் ஆனந்த லகரி!

பெரியண்ணன் என்று அழைக்கப்படுகிற பச்சன் இந்த நிகழ்ச்சிக்காகவே வண்ண நூலிழைகளால் பின்னப்பட்ட கோட்டு - சூட்டுகளை மாட்டிக் கொண்டு வருகிறார். இந்தப் பிரமாண்டத்தைப் பார்த்து கலந்து கொள்ள வந்த சிலருக்கு வாய் திறந்து பேசக்கூட முடியவில்லையாம். அத்தனை பிரமிப்பு!

| தொலைக்காட்சி நிறுவனம் | நிகழ்ச்சியின் பெயர் / பரிசுத்தொகை | நடத்தும் நட்சத்திரம் / சம்பளம் | விளம்பரக் கட்டணம் | தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டு வருமானம்/ பிறதகவல்கள் |
|---|---|---|---|---|
| ஸ்டார் டி.வி. | கௌன் பனேகா குரோர்பதி (ஒரு கோடி ரூபாய்) | அமிதாப்பச்சன் (ஆண்டுக்கு 8 கோடி) | ஒரு நிமிடத்துக்கு 15 லட்சம் | 195 கோடி (திங்கள் முதல் வியாழன் வரை இரவு 9 முதல் 10 மணி வரை) |
| ஜீ.டி.வி | சவாஸ்தஸ் குரோர்கா (பத்து கோடி ரூபாய்) | அனுபம்கெர் (4 கோடி) மனீஷா கொய்ராலா (5 கோடி) | ஒரு நிமிடத்துக்கு 15 லட்சம் | 180 கோடி (திங்கள். செவ்வாய். வியாழன் இரவு 8.30 முதல் 9.30வரை - நிகழ்ச்சி இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது) |
| சன் டி வி | கோடீஸ்வரன் (ஒரு கோடி ரூபாய்) | சரத்குமார் (ஆண்டுக்கு 2 லிருந்து மூன்று கோடி) | ஒரு நிமிடம் 1.80 லட்சம் | 60 கோடி ரூபாய் வாரத்தின் சனி. ஞாயிறு இரவு 9 முதல் 10 மணி வரை (இப்போது மலையாளத்தில் சூர்யா டி.வியிலும் துவங்கி விட்டது) |
| சோனி டி.வி | கஸ்மத் வாலா (பரிசுத் தொகை வரம்புஇல்லை) எவ்வளவு அறிவோ(!) அவ்வளவு பரிசுத்தொகை | கோவிந்தா (சம்பளம் தீர்மானிக்கப் படவில்லை) | தீர்மானிக்கப்பட வில்லை (ஸ்டார். ஜீயைவிட அதிகமாக இருக்க வாய்ப்புண்டு) | 200 கோடிக்கு மேல் (இன்னும் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பு தொடங்கவில்லை) |

நன்றி - நூலகத்திட்டம்



மட்டுமே அமைந்து விடுகின்றன. சான்றாக கல்பனா சால்வா எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதாகக் கேட்கப்பட்டு விடைகளில் ஒன்றை பொறுக்கி எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தகவலாகத் தொடங்கி தகவலாகி மட்டுமே முடிவடைகிறது.

இதையே இந்தியாவில் அதிகமான மக்களால் உண்ணப்படும் அரிசி, கோதுமை ரகம் எது என்று அமைப்பார்களேயானால் அதற்கான விடையைச் சொல்கிற ஒரு பங்கேற்பாளர் ஒரு கூட்டிணைவான பண்பாட்டு அம்சத்தை விளங்கிக் கொண்டவராக ஆகிறார். இதன் மூலம் அவர் அறிவும் சமூகமயப் படுத்தப்பட்டிருக்கிறது எனலாம்.

இதேபோல் தான், மக்களின் உடை, ரசனை, பொழுது போக்கு, சுற்றுலா, நிலவியல், உளவியல், வரலாறு பற்றிய சமூக மயப்படுத்தப்பட்ட கோணங்களில் இல்லை கேள்விகள். ஆமணக்கு விதையைப் போல் மேலிருந்து தன் மரநிழலிலேயே விழுந்து விளையாமல் போகின்றன. கேள்விகள் ஓர் இலவம் பஞ்சு போல் தனக்குரிய முளைப்பிடம் தேடிப்பறக்க வேண்டாமா? இவை கேள்விகளே அல்ல, "மலிவான தகவல் சரக்குகள்". இதனுடைய பங்கேற்பாளர்களின் சமூக அக்கறை வெளிப்படும் தருணம் ஒரு ஆயுள் முழுக்க சிரிப்பதற்கு தகுதியுள்ளது.

அது என்னவெனில் ஒரு கோடி ரூபாய்பரிசு கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு, மென்பொருள் நிறுவனங்களில் முதலீடு செய்து சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுப்பேன் என்பதும், அதேபோல் யாருடன் விருந்து சாப்பிட விருப்பம் என்பதற்கு மறக்காமல் 'கம்பியூட்டர் கடவுள் பில்கேட்ஸ்' என எழுத்துப் பிசகாமல் சொல்வதும், பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு கல்விக்காக உதவுவது. (இதில் இட ஒதுக்கீடு என்பதற்கு மறைமுகமான எதிர்ப் பதிவு செய்யப்படுவது கவனிக்கத்தக்கது) என்பது போன்ற "தர்ம கர்த்தா சோஷலிசத்தை" அவிழ்த்துவிட்டுத் தங்களின் மேட்டிமையைக் காட்டிக் கொள்கிறார்கள். இதற்கும் அழகிப் போட்டியில் அழகிகள் கூறும் விடைகளுக்கும் என்ன பெரிய வேறுபாடு உள்ளது? அது அழகின் பேரால் அபத்தம், இது அறிவின் பேரால் அபத்தம்.

இந்த நிகழ்ச்சியைப் பார்வையாளரின் மனத்தில் அழுத்தம் திருத்தமாகப் பதிய வைக்கவே நட்சத்திர நடத்துனர்கள்; பிரமாண்டமான அரங்க அமைப்புகள்; பார்வையாளரை நிகழ்ச்சியோடு ஒன்றவைக்க பின்னணியில் இதயத் துடிப்பு இசை, போட்டியாளர் தன் உறவினரோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கும் வாய்ப்பு. அரங்கத்தில் குழுமியிருக்கும் பார்வையாளரின் கூட்டிணைவான (!) உதவியைப் பெறல் எனப் பல்வேறு ஜனரஞ்சக அம்சங்களை இணைத்து வேலிக்காத்தான் முள் மரத்துக்கு வேப்ப மரத்தின் ஒப்பனையைச் செய்கிறார்கள்.

இறுதியாக, இந்த நிகழ்ச்சியால் லாபம் அடைபவர்கள் தொலைக் காட்சி நிறுவனங்கள், விளம்பர நிறுவனங்கள், சில மத்தியதர வர்க்க மக்கள். இதற்கு அறிவின் பேரால் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம். நம் விலாக்களில் இருந்தே எலும்புகளை உருவி நம்மில் சிலருக்கு எலும்பு போடுகிற முதலாளித்துவ சூட்சுமம் தான் இது.

கோடிஸ்வரன் நிகழ்ச்சியில் சரத்குமார் கூறுகிறார். "நீங்க கோடிஸ்வரன் ஆகணும். நான் ரெடி, நீங்க ரெடியா" என்று. இந்தச் சூதாட்டக் கேவலத்தை ஒழித்துக் கட்டும நிலை வரும் போது உங்களைப் பார்த்து நீங்க ரெடியா என்று மக்கள் கேட்க மாட்டார்கள். அது அறிவின் மீதான பற்றுக் காரணமாக நிகழாது. சமூகத்தின் மீதான பற்றுக் காரணமாக நிகழும்.

நன்றி: - புதிய கலாசாரம்

---

ஜீவாவின்,

## 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்'

# ஒரு முழுமை பெறாத நாவல்!

– ரஞ்சகுமார்

தமிழில் சுய அனுபவங்களை எழுதி வெளியிட்டோர் தொகை மிகக் குறைவு. இலங்கையில் அத்தொகை மிகமிகக் குறைவு. எழுதியவர்களும் தம் "துறை சார்ந்த" அனுபவங்களையே எழுதியுள்ளனர்.

டொமினிக் ஜீவா தமது அனுபவங்கள் சிலவற்றை மல்லிகையில் தொடராக எழுதி "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்" எனும் தலைப்பில் அவற்றை புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் சில, ஜீவா எனும் தனிமனிதனின் சுவாரசி-யமான அனுபவங்களாகவும், வேறு சில ஒரு தலித்தின் கசப்பான அனுபவங்களா-கவும், இன்னும் சில அந்தக் கால யாழ்ப்-பாண நகரத்தையும் அங்கு வாழ்ந்த மனிதர்களையும் பற்றிய தகவல்களாகவும் அமைந்திருக்கின்றன.

தனிமனித அனுபவங்களுள் சில, அசாதாரணமானவர்களுக்கேயுரித்தான கிறுக்குத்தனம் வாய்ந்தனவாகவும் அமைந்-திருப்பது வாசகர்களுக்கு சுவாரசியமாக அமைகிறது. உதாரணமாக அவர்மீது அளவற்ற பாசத்தையும், செல்வாக்கையும் செலுத்திய அவரது தாயார் மறைந்த அன்று, அவரது ஈமக்கடன்களை நிறைவேற்றிய கையோடு நன்கு நீராடிவிட்டு, தமது அபிமான ஹொலிவூட் நடிகர் நடித்த திரைப்படமொன்றுக்கு வெகு ஆறுதலாக சைக்கிளை மிதித்துக் கொண்டு சென்று பார்த்துவிட்டு திரும்பியதாக டொமினிக் ஜீவா குறிப்பிடுகிறார்.

இத்தருணத்தில் "அல்பெர் காம்யு"வின் "அந்நியன்" எனும் நாவலில் வரும் கதா-நாயகனை ஜீவா எமக்கு நினைவூட்டுகிறார். எனினும் காம்யுவின் படைப்புலகத்துக்கும் ஜீவாவின் படைப்புலகத்துக்கும் இடையேயுள்ள மிகப் பாரிய வேறுபாடு எவ்வளவு முரண்நகையாக அமைகிறது?


தமக்கு ஆரம்பக் கல்வியூட்டிய அன்பான ஆசிரியைகளை நன்றியுடன் நினைவுகூரும் அதே வேளை, பிஞ்சு மனம் புண்படும்படி கூறத் தகாதவனவற்றைக் கூறி அவமானப்படுத்தி தமது கல்விக்கு இடையூறாக இருந்த ஆசிரியரைப் பற்றியும் அவர் கூறத் தவறவில்லை. அன்று ஜீவா போன்றவர்கள் ஆரம்பக் கல்வியுடனேயே தமது கல்வியை இடைநிறுத்துவதற்கு இவ்வாறான 'சாதிமான்'களின் கொடுங்-கோன்மையே பிரதான காரணியாக அமைந்திருந்தது. ஜீவா, டானியல் போன்ற-வர்கள் குறைந்த பட்சம் இடைநிலைக் கல்வியையாவது ஒழுங்காகப் பெற 'தமிழர்கள்' அனுமதித்திருந்திருப்பின் அவர்களது 'தமிழில்' காணப்படும் இலகுவில் திருத்தப்படக்கூடிய சில வழுக்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லை.

ஆனால், இன்று காலம் கொஞ்சம் கனிவுடன் நடந்து கொள்கிறது. வறுமை காரணமாக ஒழுங்காக பாடசாலைக்குப் போக முடியாத, கல்வியில் ஊக்கமுடைய தலித் சிறுவர்களை ஆசிரியர்களுள் சிலர் அவர்களது வாழ்விடங்களுக்கே சென்று கூட்டிச் செல்வதை நான் கண்டிருக்கிறேன். அதே ஆசிரியர்கள் ஏனைய சமூக நடைமுறைகளின் போது 'சாதிமான்'களாகி விடுவதையும் கண்டிருக்கிறேன். எவ்வளவு பெரிய முரண்நகை!

இந்த நூலின் சத்தான பகுதிகளுள் யாழ் நகரத்தின் அன்றைய இடங்கள் பற்றியும், யாழ் நகரத்து சண்டியர்கள் பற்றியும், நாடக நடிகர்கள் பற்றியும், சில சுவாரசியமான கொலை வழக்குகள் பற்றியும், பிரபலஸ்தர்கள் பற்றியும் ஆசிரியர் எழுதியிருப்பவையும் அடங்கும். இவற்றில் பெரும்பாலானவற்றை கே. டானியலின் படைப்புக்களில் நாம் ஏற்கெனவே வாசித்திருக்கிறோம். எனினும் யாழ் நகரம் படிப்படியாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இவற்றை நாம் வாசிக்கும் போது வெறும் கட்டிடங்களையும், விலையற்ற மனித உயிர்களையும் மட்டுமல்ல, இனி எப்போதும் மீளப் பெற முடியாத எம் முன்னோரின் ஆன்மாக்களின் அமைதியையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோமே எனும் பதகளிப்பு ஏற்பட்டு எம்மை வதைக்கிறது.

மு. பொன்னம்பலம் அவர்கள் ஓரிடத்தில் "முற்போக்கு இலக்கிய இயக்கம் என்பது திடுதிப்பென் தோன்றிய ஒன்றல்ல, அதற்கு முந்தைய மறுமலர்ச்சிக் கால இலக்கியவாதிகள் மத்தியிலேயே முற்போக்கு இலக்கியத்துக்கான ஆரம்பக் கருக்கூட்டல்கள் தோன்றத் தொடங்கி விட்டன" என்கிறார். அதை உறுதி செய்வதைப் போல அ.ந.கந்தசாமி போன்றவர்களிடமிருந்தே முதன் முதலில் மார்க்சிஸம் என்ற சொல் தமக்கு பரிச்சயமாயிற்று என்கிறார் ஜீவா.

மேலும் கே. கணேஷ், ஜீவானந்தம், கார்த்திகேசன் மாஸ்டர், பூபாலசிங்கம் முதலான பல இடதுசாரிகளுடன் தமக்கிருந்த தொடர்புகள், தமது புனைபெயரை தெரிவு செய்வதில் ஆரம்பத் தில் இருந்த




வெகுளித்தனமான தெரிவுகள், ஜீவானந்தம் தமது ஆளுமை மீதும், பெயரின் மீதும் செலுத்திய செல்வாக்கு போன்ற விடயங்களைப் பற்றியும் சுவாரசியமாக எழுதிச் செல்கிறார் ஜீவா. தமது சுயசரிதையின் அடுத்த பகுதி அரசியல் இலக்கிய வாழ்க்கை பற்றியதாகவே அமையும் என்பதை கோடி காட்டுவதாக அடுத்த பகுதிக்காக அவர் தெரிவு செய்துள்ள "அச்சுத் தாளினூடாக எனது அனுபவப் பயணம்" எனும் தலைப்பு அமைந்துள்ளது.

ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் உள்ள இரண்டு முக்கிய திருப்புமுனைகளாக 60களில் முற்போக்குவாதமும் 80களில் தமிழ் தேசியவாதமும் கருதப்படுகின்றன. முற்போக்குவாதம் இலக்கிய செல்நெறியாக அமைந்த காலத்தில் குறிப்பிடத் தகுந்த படைப்பாளியாக திகழ்ந்தவர் ஜீவா. இன்று தேசியவாதமே எமது தலைவிதியை நிர்ணயிக்கும் காரணி என்பது நிச்சயமாகி விட்ட நிலையில் அவரது அடுத்த இத்தொடரின் அரசியல் நிலைப்பாடுகள் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படும்.

"80களில் தமிழில் எடுத்துச் சொல்லும் முறைமையும், உணர்திறனும், வாழ்வனுப-வங்களும் பெரும் மாற்றத்துக்குள்ளாகியி-ருக்கின்றன" என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள். முக்கியமாக 83 ஜுலைக்குப் பின் தமிழர்களின் வாழ்வனு-பவங்கள் - அவர்கள் சமூகத்தின் எத்தரப்-பினராக இருந்தாலும் சரி - சில பொதுப் பண்புகளை கொண்டிருக்கின்றன. இப் பொதுப் பண்புகளின் தாக்கமே 80களின் படைப்பிலக்கியத்தின் மீது தாக்கம் செலுத்தி அதை புதிய ஒரு போக்குக்கு இட்டுச் சென்றது.

ஜீவாவின் சுயசரிதையின் முதற்பகுதியாகிய இந்நூலில் இவற்றைப் பற்றி எதுவும் காணப்படாதது ஒரு பெருங் குறையே. ஜீவா தன்னை ஒரு தமிழன் என்று அடையாளப் படுத்துவதைவிட, தலித் என்று அடையாளப்படுத்த விரும்புவது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இறுதியாக, இந்நூலில் உள்ள மேலும் சில பகுதிகள் பற்றி அவசியம் குறிப்பிட வேண்டும்.

இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் அகதிகளாக இடம் பெயர்ந்து தீவுப்பகுதிக்குச் சென்ற சமயம் ஒடியற் கூழ் காய்ச்சி கும்பலாக இருந்து குடித்த கதை பற்றி விஸ்தாரமாக எழுதும் ஜீவா, இறுதியில் ஒரு போடு போடுகிறார். "யாழ்ப்பாணத்தானின் ஒடியல் கூழை ஒரு தடவையாவது குடித்துப் பார்த்தவர்களால் தான் அவனைச் சரிவர விளங்கிக் கொள்ள முடியும். - அவனது உணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலும். அவனது ஆத்மக் குரலைத் தெளிவாகக் கேட்க முடியும்". அச்சாவாக இருக்கிறது!

அத்துடன் கே. டானியல், தெணியான், ஜீவா, எஸ். பொ. போன்றவர்களின் எழுத்துக்களிலும் தமிழக தலித் எழுத்தாளர்கள் பலரது எழுத்துக்களிலும் உணவு, அவற்றின் சுவை பற்றிய விவரணைகள் அதிகம் இடம்பெறுகின்றன. இது ஏனோ? வறுமை காரணமாக அவர்களின் இளவயதில் உணவின் அளவும் சுவையும் குன்றியிருந்ததுதான் காரணமோ என்னவோ? மிக்கேல் ஷொலக்கோவ் எழுதிய "கன்னி நிலம்" நாவலில் வரும் சுக்கார் கிழவன் சுவையான நிறைவான உணவுக்காக ஏங்குவதை எவ்வளவு அனுதாபத்துடன் அருமையாக சித்திரிக்கிறார் ஷொலக்கோவ்!

ஜீவாவின் இளவயதில் அவரது இல்லத்தின் அயலில் வசித்த பூவம்மா, பூவய்யா என்னும் சிங்களத் தம்பதிகள், அவர்களது வீட்டின் வேலைக்காரப் பையன் ஜேமிஸ், அவன் வளர்த்த அணில், ஜீவா இளந்தாரிப் பருவத்தில் வளர்த்த ஆயிரக் கணக்கான புறாக்கள்... .... .... மிக மிகச் சுவாரசியமான பகுதிகள் இவை.

இவற்றுக்கும் மேலால், ஜீவாவின் காதல் கதை!

காதல் வந்தவுடன் எல்லோருமே கவிஞர்களாகவும், அசடுகளாகவும் ஆகிவிடுவது உலக வழமை! ஜீவாவோ எழுத்தாளன். விடுவாரா சும்மா! மனுஷன் ரசித்து ரசித்து கவிதை போல அந்த அத்தியாயத்தை எழுதியிருக்கிறார். மத்தாப்புக் கம்பியால் கையில் சூடு வாங்கிய கதை... "மாமி" காதலைக் கைவிடக்கோரிக் கெஞ்சிய கதை... மல்லிகைப் பூ பூத்த கதை... மல்லிகையும் மல்லிகைப் பந்தலும் பிறந்த கதை... எதைச் சொல்ல, எதை விட!.... என்று பெருமூச்செறிகிற கதை....

இந்த குறிப்பை வாசித்துப் பார்த்து விட்டு, ஜீவாவின் புத்தகத்தையும் தேடி வாசித்து விட்டு, ஜீவாவின் கையை யாராவது பிடித்து "நிலவிலே பேசுவோம்" பாணியில் "சாத்திரம் பார்க்க" முனைந்து காதல் தழும்பைத் தேடினால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல!

தன் அனுபவம் சார்ந்து எழுதுவது சுயசரிதை. அதையே நாவல் என மயங்குபவர்களும் உண்டு. ஒரு வகையில் டானியலின் நாவல்களும் அவரது சுயசரிதைகளே! தன் அனுபவங்கள் எப்போ ஒரு நாவலாக விரிவடையுமெனக் கேட்டால் "புற அனுபவங்களையும் தன்னனுபவங் களாகக் கண்டு, புதிய ஒரு தளத்துக்குப் பாய்ச்சும் போது" என எளிமையாக, சுருக்கமாக விடையளிக்கலாம்.

ஒரு முழுமை பெறாத நாவல் போல இந்நூல் அமைந்திருக்கிறது. ஆசிரியரின் நோக்கமும் அதுதான். நாவல் எழுதுவது அல்லவே.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு தலித்தின் கதை

அவன் தனியாக இருக்கும் போதெல்லாம் நாங்கள் இருவரும் தவறாமல் சந்தித்துக் கொள்வோம். நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனை எனக்குத் தெரியும். ஒரு மனிதன் தன் நிழலைத் தெரிந்து வைத்திருப்பதுபோல அவனை நான் தெரிந்து வைத்திருந்தேன்.

வானம் காத்திருந்தாலோ, மேக மூட்டத்துடன் இருந்தாலோ ஒருவனுடைய நிழல் மறைந்து போவதுபோல, அவன் என் பார்வையிலிருந்து அடிக்கடி மறைந்து போனான். இப்போதைய சில ஆண்டுகளாக அவன் கூட்டத்தைக் குறிப்பாக விரும்பத் தொடங்கி இருந்தான். அவன் எப்போதும் யாருடனாவது அல்லது ஒரு பொதுக்கூட்டம், மாநாடு போன்றவற்றிலாவது இருந்தான்.

அன்று அதைப்போல ஒரு நாள் தான் ஏதோ ஒரு மண்டபத்தில் ஏதோ ஒரு சமூகக் கேள்வி பற்றிய ஒரு விவாதம். எல்லா முக்கியமானவர்களும் மேடையில் இருந்தனர். அந்தக் கூட்டத்தில் ஒரு நாற்காலியில் அவன் சுருங்கிப் போய்க் கிடந்தான். அவன் பேச வேண்டிய முறைவந்தது. அவன் உயிரின் ஆழத்திலிருந்து விவாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அவன் வாதம் பலரைக் கவர்ந்தது. கை தட்டல் கூட இருந்தது. கூட்டம் முடிந்தது. அவன் என்னிடம் வந்து கேட்டான்.

"என் பேச்சு எப்படி இருந்தது?"

"நீ மிக நன்றாகப் பேசினாய். ஆனால், என்னிடம் ஒன்றை நீ சொல்ல வேண்டும். நீ எப்போதுமே மகிழ்ச்சியுடன் இருப்பதில்லை. எப்போதும் சலித்துப்போய் இருக்கிறாய். உன் முகம் ஒரு வில்லின் நாண்போல் விறைப்பாகவே இருக்கிறது"

"நீ என்னை நீண்ட நாள்களுக்குப் பிறகு மடக்கிப் பிடித்து விட்டாய். நான் என்றாவது எதையாவது உன்னிடம் மறைந்தது உண்டா?"

"உன் பேராசிரிய நண்பர்களில் ஒருவர் நீ ஒரு "தலித் பிராமணனாகக்" இருப்பதைப்பற்றி உன்னைச் சலித்துக் கொண்டிருக்கிறார்".

"நல்லது. அவர் சொல்வதில் கொஞ்சம் அர்த்தம் இருக்கிறது. பொது மக்களின் கண்களுக்கு ஒரு மகிழ்ச்சியான மனிதனின் சட்டையை நான் அணிந்து கொண்டிருக்கிறேன். யாரும் அப்படித்தான் நினைப்பார்கள்.

மாதம் ரூபாய் எழுநூறு, எண்ணூறு சம்பளம் வரும். அரசாங்க வேலை எனக்கு இருக்கிறது - அது ஒரு தணிக்கை அதிகாரியின் வேலையும் கூட.

எனக்கு பள்ளியில் இரு பெண்கள் உள்ளனர். என்னைச் சுற்றிவிளையாடும், நாளை என் பெயரை இழுத்துச் செல்லும் மகனும் உண்டு. என் பெரிய பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டது. சென்ற ஆண்டு அவளுக்குக் குழந்தை பிறந்தது. எனக்கு நாற்பது வயது ஆவதற்குள்ளேயே நான் தாத்தவாகி விட்டேன். எல்லாம் எந்த வழியில் செல்லவேண்டுமோ அதே வழியிலேயே செல்கின்றன. கொடி அதற்கான பந்தலுக்குள்ளேயே படர்ந்திருக்கிறது.

"சரி இன்னும் ஏன் சோகமாக இருக்கிறாய்? நீ இழந்திருப்பது தான் என்ன?


"உனக்கு தொப்பியைத் தொலைத்துவிட்ட இடைப்பையனின் கதை தெரியுமா?"

நான் தலையசைத்தேன். அவன் சொல்லத் தொடங்கினான்.

"ஓர் இடையனின் மகன் தன் தொப்பியைத் தொலைத்து விட்டான். அவனுக்கு எப்போதும் அதைப் பற்றியே நினைவு. சாப்பிடும்போதும், குடிக்கும்போதும் தொப்பி அவன் முன்னால் வந்து நின்றது. அதனால் அவன் எப்போதும் வருத்தமாக இருந்தான். ஒரு நாள் வழக்கம்போல் மாடுமேய்க்கக் காட்டுக்குப் போனான். நகரத்திலிருந்து ஒரு காதல் ஜோடி அங்கு வந்து இருந்தது. அவர்கள் இருவரும் காதலைப்பற்றிப் பேசுவதை இடைப் பையன் ஒளிந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தான்.

காதலன், காதலியின் கண்களுக்குள் பார்த்துக் கொண்டு சொன்னான், "அன்பே, நான் உன் கண்ணில் நிலாவைப் பார்க்கிறேன். என்னால் சூரியனை, மலர்களை, கடலை, மலையை, இந்த மகிழ்ச்சியான காடு முழுவதையும் பார்க்க முடியும்"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த இடைச் சிறுவன் வந்து கேட்டான். "ஐயா



எனது தொப்பியையும் அந்தக் கண்ணுக்குள் பார்க்க முடிகிறதா?"

"நீ ஒரு தத்துவமேதைபோல அர்த்தங்களுக்கு முகமூடிபோடாதே. ஏன் நீ நேரிடையாக என்ன குறை என்று சொல்லக்கூடாது?"

"நான் எப்படி அதை நேரிடையாகச் சொல்ல முடியும். அது ஒரு நாள் பிரச்சினை அல்ல. அது நாற்பது ஆண்டுக்கால பிரச்சினை. நான் காலையில் என்ன காய்கறி சாப்பிட்டேன் என்று மாலையில் நினைவு வைத்துக்கொள்ள முடிவதில்லை. எனக்கு அதிக ஞாபக மறதி.

அதனாலேயே நான் உயிரோடு இருக்கிறேன். எல்லாவற்றையும் மறந்துவிட முடிகிறது. இல்லையெனில், என் மூளை வெளியே சிதறியிருக்கும். என் பெண்ணின் பிறந்த நாள் எனக்கு நினைவிருப்பதில்லை. அவர்களின் பிறந்த நாள்களை என் மனைவிதான் நினைவூட்டுகிறாள்."

"ஆனால், நீ எனக்குச் சொல்ல வேண்டும். நீ எப்படி வளர்ந்துவந்தாய்? எ்நத அச்சில் நீ வார்க்கப்பட்டாய்? என்று நீ சொல்ல வேண்டும்."

"சரி, எனக்கு எப்படி நினைவுக்கு வருகிறதோ அதே வரிசையில் நான் அதைச் சொல்கிறேன்."

0 0 0

எனது அப்பா வறண்ட பம்பாய் துறைமுகத்தில் வேலை செய்தார். நான் அவரை 'தாதா' என்று அழைப்பேன். இன்று கூட என் மகன் என்னை 'தாதா' என்று தான் அழைக்கிறான். என்னை அவன் 'டாடி' என்றோ, 'பப்பா' என்றோ அழைப்பதை நான் விரும்பவில்லை. அது அந்நிய நாட்டுக் கற்றாழையை உள் நாட்டு முள் செடியுடன் பதியம் போடுவது போலாகும்.

ஆய்மாம்., நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? ஓ, ஆமாம். அந்த நாள்களில் நாங்கள் 'கவ்வாகானா'க்களில் வாழ்ந்தோம். அது ஒரு பத்துக்குப் பன்னிரண்டு அறை. உள்ளேயே குழாய். பொதுக் கழிவறை. என் அப்பா, பாட்டி, மாமாவின் குடும்பம் அதில் வாழ்ந்தது. இன்றைய பம்பாயின் வரை படங்களில் 'கவ்வாகானாக்'களை நீ பார்க்க முடியாது.

'மஹர்' எனும் கீழ்ச்சாதிக்காரர்களின் வாழ்க்கை மிகவும் மோசம். ஒவ்வொரு குடிசையிலும் மூன்று, நான்கு குடித்தனங்கள் உண்டு. அவர்களுக்குள் பெட்டிகளின் அட்டைகளுகளினால் தடுப்புகள் உண்டு. அவர்களின் மொத்த உலகமும் இந்தப் பெட்டி அட்டைக்குள்ளே தான். ஆண்கள் மூட்டை தூக்கும் வேலை செய்தனர்.

பெண்கள் பர்தா அணிவது இல்லை. மாறாக, அவர்கள் ஆண்களைக் காட்டிலும் இன்னும் அடிமைகளாக வேலை செய்தனர். ஒரு குடிகாரக் கணவன் அவளை எவ்வளவுதான் அடிமையாக நடத்தினாலும் அவள் அவனைக் கவனித்துக்கொள்வாள். அந்தக் கெட்ட பழக்கத்திற்கு உடன்படக்கூடச் செய்வாள்.

தெருக்களில் இருக்கும்கோணி, காகிதம், உடைந்த கண்ணாடி, இரும்பு, பாட்டில் ஆகியவற்றைப் பொறுக்கிக்கொண்டு வந்து இரவு முழுவதும் அவற்றை ரகம் பிரித்து காலையில் அவற்றை விற்பதுதான் அவர்கள் வேலை.

மிக அருகில் துணி வியாபாரம் செய்யும் மங்கல் தாஸ் மார்க்கெட் இருந்தது. இந்தக் கடைகளிலிருந்து தூக்கி எறிந்த காகிதங்களை இந்தப் பெண்கள் சேகரிப்பார்கள். ஒவ்வொருவருக்கென்று ஒரு கடை உண்டு. இதில் யார் எந்தக் கடையிலிருந்து குப்பைகளைச் சேகரிப்பது என்பது பற்றி உக்கிரமான சண்டைகள் உண்டு. இதற்காக கடைக்காரச் சிப்பந்திகளுக்கு சில்லறை லஞ்சங்களும் கொடுப்பதுண்டு.

சில பெண்கள் அருகிலிருந்த விபச்சார விடுதிகளில் இருக்கும் விபச்சாரிகளின் புடவைகளைத் துவைப்பார்கள். இன்னும் சிலர் கீமா ரொட்டி சாப்பிட்டு சலித்துப்போன விபச்சாரிகளுக்கு 'பாஜ்ரி பக்ரி', 'பர்பாத்' ஆகியவற்றைச் சமைத்துக் கொடுப்பார்கள். சில நேரங்களில் சண்டைக்கார விபச்சார வாடிக்கையாளர்கள் தங்களுக்கு இந்தப் பெண்கள் தான் வேண்டும் என்றும் கேட்பதுண்டு. அது போன்ற நேரங்களில் கண்ணாடி போன்ற பலவீனமான தங்களது கற்பை மிகவும் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிக்கொள்வார்கள்.

0 0 0

அந்த நாள்களில் தாதாவின் நடத்தை எனக்கு அதிக அவமானத்தைக் கொடுத்தது. அவரது சம்பளம் துயரமான அளவுக்குக் குறைவு. அவர் விபச்சாரிகளிடம் செல்வதுடன், குடிப்பழக்கமும் கொண்டிருந்தார். தன் பழக்கங்களின் காரணமாக அதிகப் பணக் கஷ்டத்திற்கு ஆளானார். அவற்றிலிருந்து மீள்வதற்காக துறைமுகத்திலிருந்து வெண்கலம், பித்தளை, கம்பிகளை வீட்டிற்குத் திருடிக்கொண்டு வருவார்.

வாசலில் கெடுபிடி இருக்கத்தான் செய்தது. அவர் பாக்கெட்டுக்களைத் துழாவினாலும் அதைக்கண்டு பிடிக்கமுடியாது. உண்மையில் அவற்றைத் தனது கோவணத்தில் கட்டி வைத்துக் கொண்டிருப்பார். அவரது திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு இருக்குமானால், இன்று சமுதாயத்தில் நான் முகத்தைக்காட்ட முடியாமல் போயிருக்கும். அது அது போல ஒரு அவமானகரமானதாகும்.

நான் அந்த மொத்தத்தையும் வெறுத்தேன். ஆனால், அவரிடம் அதை யார் சொல்வது? அந்த வயதில் அவரிடம் சொல்லும் அளவுக்கு எனக்குத் தைரியம் இல்லை. ஒரு பக்கத்தில் "உண்மை பேசு" என்று பள்ளிகளில் படித்துக்கொண்டு மறுபுறுத்தில் தாதா திருடிக்கொண்டு வந்தவைகளை சோர்பஜாரில் விற்பதற்காகப் போய்க்கொண்டிருந்தேன். உண்மை வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பள்ளிக்கூட உலகம் செயற்கையானதாகத் தெரிந்தது. அது பார்த்து மகிழ்வதற்காக மாட்டி வைக்கப்பட்ட ஓர் அழகிய படத்தைப் போலத் தெரிந்தது.

எங்கள் அக்கம் பக்கத்தில் என்ன இருந்தது? அக்கம் பக்கத்தில் ஒருவன் தன் வீட்டில் தினந்தோறும் ஒரு பத்து ரூபா நோட்டை அச்சடித்துக் கொண்டிருந்தான். நாங்கள் அதை மொட்டை மாடியில் காய வைப்போம். அவன் எங்களில் ஒருவரிடம் கொடுத்து அதை மாற்றிக்கொண்டு வரச்செய்வான். அந்த ஒரே ஒரு நோட்டைத் தவிர அதிகமாக அச்சடிக்கக் கூடாது என்பதை அவன் விதி முறையாகக் கொண்டிருந்தான். அது அவனது அன்றாட செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது. பேராசைக்காரனாக இருந்தால் சிறை செல்ல

நன்றி - நூலகத்திட்டம்



வேண்டிவரும் என்று அவன் நினைத்தான்.

இதுதான் எனது அக்கம் பக்கத்து உலகம். அந்த உலகில் வளர்ந்திருந்தால் இன்றைய மாற்றம் முடியாதாகிப் போய் இருக்கும். யாருக்குத் தெரியும் நானும் அவர்களுள் ஒருவனாக வாழ்ந்திருப்பேனோ என்னவோ.

ஆனால், தாதாவின் குடிப்பழக்கம் அதிகமாயிற்று. எவ்வளவு சம்பளம் வந்தாலும் அது கடன்காரர்களிடம் போய்விட்டது. லேவாதேவி செய்யும் பட்டாணிக்காரனிடம் பட்ட கடன்சுமை ஒன்றும் தலைமேல் இருந்தது. இது தினந்தோறும் தாள முடியாததாகிப் போய்க்கொண்டிருந்தது. ஒரு நாள் திடீரென்று அவர் தனது வேலையை விட்டுவிட்டார். கைக்கு வந்த வருங் காலவைப்பு நிதியைக் கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு கிராமத்திற்குப் போகத் திட்டமிட்டார்.

"அம்மணமாக நான் வந்தேன். அம்மணமாகவே போய்விடுவேன்." என்பது அவரது விநோதமான தத்துவம். அவர் குடித்துவிட்டால், உளறும் வார்த்தை, அதுதான். அவர் வாழ்க்கையில் பொருள்கள் சேர்க்க முயற்சிக்கவே இல்லை. அவர் துறைமுகத்தில் செய்த திருட்டுக்களுக்குக்கூட ஒரு விஞ்ஞானம் இருந்தது. அவர் என்றைக்கும் பெரிய திருட்டுகளில் மாட்டிக்கொண்டதே இல்லை.

அங்கிருந்த கிளப்பில் விளையாடவரும் யூதர் ஒருவர் தாதாவுக்கு நன்கு தெரிந்தவர். வெள்ளைத் தோல் கொண்ட அந்தக் கிழவர், தனது கோட்டு, சூட்டுடன் காலில் பாத அணியுடன் எங்கள் வீட்டிற்கு வருவார். தொப்பியைக் கழற்றி மெத்தையின் மீது வைத்துவிட்டு உட்கார்ந்து கொள்வார். வீட்டில் செய்த மாமிச 'பர்பாத்'தைச் சாப்பிடுவார். அவர் முகமும் கன்னமும் உணவின் காரத்தினால் சிவந்துபோகும். சாப்பிடும் போது அவர் பெருமூச்சுகள் விடுவார்.

அவர் ஒரு வைர வியாபாரி. அவர் தன் கக்கத்தில் இடுக்கிய சிறிய மரப்பெட்டி ஒன்றுடன் பணக்காரர்களின் வீடுகளுக்குச் செல்வார்.

அவர் ஒரு நாள் பலஸ்தீனத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது. அவருக்கு தாதாவிடம் அதிக நம்பிக்கை இருந்தது. அவர் ஊருக்குப் போகுமுன் அந்த மரப்பெட்டியை எங்கள் வீட்டில் கொடுத்துவிட்டுப் போனார். ஒன்று இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. நாங்கள் நினைத்தோம், அந்தக் கிழவர் செத்துவிட்டு இருக்க வேண்டுமென்று. தாதா அப்போதுகூட அந்த வைரங்களை விற்கத் துணிவில்லை. கிழவர் இரண்டு ஆண்டுகள் கழித்துத் திரும்பியபோது அவரது சொத்து அவரிடம் பத்திரமாகத் திருப்பித்தரப்பட்டது.

இது தான் எங்கள் தாதா.

000

நான் என் வாழ்நாள் முழுவதும் பயந்து செத்து இருக்கிறேன். இதற்கு என் சொந்தக் காரணங்களும், நான் பிறந்த துரதிருஷ்டமான சாதியினுடையதும் ஆகும். ஓர் உதாரணத்திற்கு, இந்த விஷயம் வந்துவிட்டதால் அது பற்றியும் சொல்கிறேன்.

அந்த நேரத்தில் ஒரு தலைமறைவான ஊழியர் எனக்கு ஒரு 'நிரோத்' பாக்கெட்டை அனுப்பி இருந்தார். அதன்மீது அவர் என்ன எழுதியிருந்தார் என்று நினைக்கின்றீர்கள்.

"இது உன்னைப் போன்ற பலகீனமான கால் முட்டி கொண்ட குழந்தைகள் என்றுமே பிறக்காமலிருப்பதற்கான பாதுகாப்பு" ஆனால், இந்தத் தலைமறைவான ஆசாமி கூட பயந்தவர்தான். ஏனெனில், அக்கடிதத்தில் அவர் தன் கையெழுத்தை இடவில்லை.

இன்றைய இரண்டாவது சுதந்திரத்திற்குப் பிறகு அவர் நிச்சயம் மகிழ்ச்சி அடைந்து இருக்க வேண்டும். ஆனால், நான் மகிழ்ச்சி அடையவில்லை. அரசியல் கடை இன்னமும் அதேதான். அதன் பெயர்ப்பலகை மட்டிலும் மாறியிருக்கிறது. அதன் பெயர்ப்பலகை மட்டும் மாறியிருக்கிறது என்று தான் நான் நினைக்கிறேன்.

சுதந்திரத்திற்குப் பிறகு வந்த 30 ஆண்டுக் காலத்தில் மட்டும் நான் பயந்து கொண்டிருக்கவில்லை. எமர்ஜென்சிக்குப் பிறகு வந்த இரண்டாவது சுதந்திரத்திலும் பயந்தேன். இது எந்த நேரத்திலும் என்னை நடைபாதைக்குக் கொண்டு வந்துவிடும் என்று பயப்படுகிறேன். என் குழந்தைக்கு எந்த மாதிரி எதிர்காலம் பரிமாறப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

இதுபோன்ற பயத்துடன் நான் உன்னுடன் உலவிக் கொண்டிருக்கிறேன். உன்னிடம் உண்மை சொல்லவேண்டுமென்றால், நான் இதை விரும்பவில்லை. எல்லா மனிதர்களும் இறுதியில் தனிமைப்பட்டுப்போவது பற்றி பயப்படத்தான் செய்கிறார்கள். இது நான் நீ சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என்பது கூட அல்ல. சில நேரங்களில் வெறுப்பு எனக்குள் கொந்தளிக்கிறது.

000

தாட்கு பவார் நடந்து செல்லத் தொடங்கினான். அவன் தோள்கள் வணங்கி இருந்தன. அவன் ஏதோ இயேசுநாதரைப் போல ஒரு சிலுவையைச் சுமப்பது போலவும், அதன் கனத்தின்கீழே குனிந்து இருப்பது போலவும் தெரிந்தது. ஆனால், இயேசுநாதர் தலையில் ஒளிவட்டம் ஏதும் அவன் தலையில் இல்லை. அவன் காலடிகள் மெல்லத் தேய்ந்து முன்னால் இருந்த பெரிய கும்பலில் காணாமல் போனான்.

நான் என் சொந்தக் கவிதையை நினைத்துக் கொண்டேன்.

'துயரத்தால் நனைந்த இந்த மரத்தை
நான் பார்க்கிறேன்.
ஒரு போதி மரத்தின் வேர்களைப் போல
இதன் வேர்கள் ஆழமாக இருக்கின்றன.
ஆனால், போதி மரமாவது பூக்கச் செய்தது.
இது எல்லாக் காலங்களிலும் காய்ந்தே
கிடக்கிறது.

ஒவ்வொரு நரம்பின் மூலமாகவும்,
வெடித்துக் கிளம்ப
முயற்சிக்கும் துயரங்கள்
அதன் விரல்கள் ஒரு குஷ்டரோகியின்
விரல்களைப்போல
உதிர்ந்து போயின.....
இந்த நோய்தான் என்ன?
ஒவ்வொரு கிளைக்கும் தாங்கி நிற்க என்று
கோல்கள் கட்டப்பட்டுள்ளன.

அது சாவைப்போன்ற வதைகளை
அனுபவிக்கிறது.
ஏனெனில், அதனால் சாகமுடியவில்லை
இந்த மரம்
சோகத்தால் நனைந்து கொண்டிருப்பதை
நான் பார்க்கிறேன்.

## — துயா பவார் மராத்தி

'காற்றுக்குத் திசை இல்லை'
என்ற தொகுப்பில் இருந்து
- இந்திரனின் மொழிபெயர்ப்பு

## அடையாளப் படுத்தல்



நீர் மனிதரா? தமிழரா?
மனிதராக வாழவே விரும்பினேன்
தமிழராக வாழவும்
வாழ்வதற்காகப் போரிடவும்
நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள என்னிடம்
நீர் மனிதரா என்று
எங்ஙனம் நீவிர் வினவுதல் கூடும்?

திரிசங்கு சொர்க்கவாசியாக
எங்ஙனம் நான் வாழுதல் முடியும்?

தேசிய அடையாளம் உத்தியோக அடையாளம்
பாதுகாப்பு அடையாளம் பச்சை அடையாளம்
சிவப்பு அடையாளமெனப் பல அட்டைகளில்
சுட்டிப்பாக, மிகச் சுட்டிப்பாக
அடையாளம் காணப்படும் என்னிடம்,

மருந்துச் சரைகளுடன் சீவியமோட்டும்
தீரா நோய்க்காரர் போல்
அடையாள அட்டைகளினால்
உயிர்காத்துக் கொண்டிருக்கும் என்னிடம்,

நீர் யார் என்று கேட்டால்.....
நான் யாரென்று சொல்ல!

எமக்கெனவொரு அடையாளத்துடன்....
மனிதராக....
வாழ்க தலைமுறை!

— சி. ஜெயசங்கர் —

## புதிய உலக ஒழுங்கு


பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கும்
ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கும்
அப்படி, என்னதான் வித்தியாசம் கண்டுகொள்ளப்படுகின்றது?

பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
தங்களைத் தாங்களே தெரிவு செய்து கொள்கிறார்கள்
ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
மக்களின் பெயரால்
தங்களைத் தாங்களே தெரிவு செய்து கொள்ளப்படுகிறார்கள்

பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
தங்களுக்காகத் தாங்களே சுட்டுக்கொள்கிறார்கள்
ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
தங்களுக்காக ஆட்களை வைத்துக் கொள்கிறார்கள்.

பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
ஊடகவாழிகளாக இருக்கிறார்கள்
ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள்
ஊடக வாழிகளாக இருக்கிறார்கள் - இருப்பதனால்
இலகுவில் இரையாகவும் போய்விடுகின்றார்கள்.

— சி. ஜெயசங்கர் —



நன்றி - நூலகத்திட்டம்



சியாம் செல்வத்துரையின்

Funny Boy

## 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 8

எங்களது அணி முதலில் விளையாடுவதாக இருந்தது. யார் பந்தை அடிப்பது என்று முடிவு செய்வதில் எல்லாப் பெடியங்களும் பின்பற்றிய ஒரு ஒழுங்குமுறை இருந்தது. அணித்தலைவர் நிலத்தில் இலக்கங்களை எழுதிவைப்பார். விளையாடுபவர்கள் பின்புறமாக வந்து அதை எடுக்க வேண்டும். இதில் எனக்கு எரிச்சலாக இருந்த விடயம் என்னவென்றால், அதைத் திரும்பத் திரும்ப செய்ததும், எடுக்கும் இலக்கம் எதுவாக இருந்தாலும், நல்ல விளையாட்டு வீரர்களும் வயதில் மூத்தவர்களும் தான் எப்போதும் முதலில் போவார்கள். இளையவர்களும் மூச்சுவிடாமல் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்பது தான்.

தோண்டி எடுத்த இலச்கங்களைப் பார்த்த போது நான் முதலாவதாகவும், தோண்டி இரண்டாவதாகவும் வந்திருந்தோம். முருகேசுவுக்கு கிடைத்த இலக்கத்தின்படி அவன் தான் கடைசியாக வருவான். சிலவேளை அவனுக்கு விளையாடும் வாய்ப்பே இல்லாமல் போகலாம்.

"நல்லது..." முருகேஸ் சொன்னான். ஏற்கெனவே சொன்ன வாக்குறுதிக்கமைய பேசுவது போல அவன் தொனி இருந்தது.

"நான் அர்ஜேயின் இடத்தை எடுக்கிறேன்" தோண்டி உடனடியாக தலையாட்டினான், தானும் அவ்வாறே யோசித்தான் என்பது போல.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக எனக்கு வேறு திட்டம் இருந்தது.

'நான் முதலில் போகப்போகிறேன்' - என்றேன், நான் உறுதியாக. எனது இந்தக் கோரிக்கை தேவையான பிரச்சினையை உருவாக்கட்டும் என்று நான் பொறுத்திருந்தேன்.

குந்தியிருந்து தனது கால் பட்டிகளை கட்டிய முருகேஸ் ஆறுதலாக நிமிர்ந்தான். அவன் ஆறுதலாக நிமிர்ந்தவிதம் இவ்வாறு கேட்கத் துணிந்த எனது துணிவை எதிர்க்-கவும், தோண்டியை பந்தடிக்கும் ஒழுங்கை மாற்றுமாறு மிரட்டவுமான அவனது கோபத்தை வெளிக்காட்டுவதாக இருந்தது.

அப்போது, மீனா சற்றும் எதிர்பாராத விதமாக எனக்காகப் பரிந்து பேசினாள். அவன் தான் முதலாவது.. நியாயம் எண்டால் நியாயமாக இருக்க வேண்டும். ஐம்பது 'ஓவர்' கொண்ட ஒரு விளையாட்டில் இவர்களது ஒரு பிழையான தொடக்கம் அவளது அணியினரின் வெற்றிக்கு நிச்சயமாக உதவவே செய்யும்.

நியாயமெண்டால் நியாயம் - நானும் மீனாவை எதிரொலித்தேன். நான் தான் ஒன்றை எடுத்தேன். ஆனபடியால் நான் தான் முதலாவதாக விளையாடுவேன்'

'முடியாது... முருகேஸ் தான் எப்பவும் போவான். முதல்லை'

- இது தோண்டி.

தமிழில்:
எஸ்.கே.விக்னேஸ்வரன்

மீனாவின் அணி மீனாவின் கோரிக்கை-யால் தூண்டப்பட்டு 'நியாயம் என்றால் நியாயம்' என்று கத்தத் தொடங்கியது.

தோண்டி வேகமாக முருகேசை நோக்கிப் போனான். அவனது தோளின்மீது தனது கைகளைப் போட்டு அவனை மற்றவர்கள் இருக்கும் இடத்திற்கு அப்பாற் கூட்டிச் சென்று மன்றாடுவது போல அவனுடன் பேசினான். ஆனால், முருகேஸ் தனது தலையை உறுதியாக ஆட்டி மறுத்தான். தோண்டி சொல்லும் எதையும் அவன் நம்பத் தயாரில்லை என்பதாக, அவனது தலையசைப்பு இருந்தது. இறுதியாக தோண்டி தன் கையை அவனிடமிருந்து எடுத்து விட்டு எரிச்சலுடன் கத்தினான். "வாவன்ராப்பா... என்ன இது...."

இதற்குப் பதிலளிப்பவன் போல முருகேசு தன் காலில் கட்டியிலிருந்த பட்டிகளை அவிழ்க்கத் தொடங்கினான். முருகேசின் தோள்களின் மீது தனது கையைத் திரும்பவும் போட்டான் தோண்டி. ஆனால், முருகேஸ் மசியவில்லை. அவனது கையை உதறிவிட்டான். அவன் தனது முடிவில் உறுதியாக இருப்பதைப் புரிந்து கொண்ட தோண்டி என்னைப் பார்த்தான்.

"அர்ஜே... இஞ்சைபார்.. நீ கடைசியாக விளையாடலாம் தானே?' - அவனது குரல் கெஞ்சியது.

'இல்லை.. முடியாது. என்றேன் நான் பிடிவாதமாக. கூறியபடியே அந்த முடிவில் உறுதியாக இருக்கிறேன் என்று காட்ட 'பற்றை'க் (துடுப்பு) கையில் எடுத்துக்கொண்டு விளையாடத் தயாராகினேன்.

எனது இந்தச் செய்கையைக் கவனித்த முருகேஸ், கழற்றிய தனது காற்பட்டிகளை எனது கால்களை நோக்கிவீசிவிட்டு,

"நான், இப்ப உன்ரை அணிக்கு மாறிவிட்டேன்" என்று மீனாவுக்குச் சொன்னான்.

தோண்டி எனது பக்கமாகத் திரும்பி, எனது கையிலிருந்த 'பற்றைப்' பிடுங்கியபடி.

"போ அங்கலை.. நீ..." என்று கத்தி-னான்: "உன்னை எங்களுக்குத் தேவை இல்லை"

பிறகு, எனது கையிலிருந்து பிடுங்கிய 'பற்'றை முருகேசிடம் கொடுப்பதற்காக அவனை நோக்கி நடந்தான்.

"நீ ஒரு ஏமாற்றுக்காரன்... சுத்த ஏமாற்றக்காரன்.. நீ.. நான் தான் முதல்லை அடிக்க தெரிபட்டனான்..." நான் அவனை ஏசினேன்.

ஆனால், நான் கொஞ்சம் அதிகமாகவே போய்விட்டேன். தோண்டி திரும்பி என்னைப் பார்த்தான்.

அவனுக்கு தான் எப்படி எல்லோராலும் அலைக் கழிக்கப்படுகிறேன் என்பது புரிந்திருக்க வேண்டும்.

கோபத்துடன் முருகேசுவிடம் கொடுக்காமல் கத்தியபடியே 'பற்றை' தலைக்குமேல் உயர்த்திக் கொண்டு என்னை நோக்கி ஓடி வந்தான். நான் திடீரென்று வயலுக்கு குறுக்காக விழுந்து அப்பாச்சி வீட்டுக் 'கேற்'றை நோக்கி ஓடினேன். கேற்றை அடைந்ததும், அதன் கொழுக்கியை உயர்த்தி உள்ளே போய் திரும்பவும், அதைச்சாத்தி கொழுக்கியைப் போட்டுக் கொண்டேன். அவனிடமிருந்து அடிவாங்காமல் நான் தப்பிக் கொண்டேன். உள்ளே இப்போது எனக்குப் பாதுகாப்பு என்று உறுதிப்படுத்திக் கொண்டு கேற்றின் துவாரங்களூடாக வெளியே பார்த்தேன். அவன் எனக்குக் கிட்டவாக வந்தான். நான் சிலுப்பிக் கொண்டு நின்றேன். கேற்றின் துவாரங்களூடாகப் பார்த்த அவன் 'எப்பவாவது விளையாட்டிடத்துக்கு வந்தியோ... அப்ப கவலைப் படுவாய்" என்று கண்டிப்பது போல் சீறினான்.

'கவலைப்பாதே... நான் ஒரு நாளும் வரமாட்டேன்" என்றேன் நான், காரமாக.

அத்துடன், முடிந்தது. என்றென்றைக்கு-மாய் பையன்களின் உலகிற்குள் நுழைவதற்-கான எல்லா வாய்ப்புக்களிலுமிருந்து நான் என்னை விடுவித்துக் கொண்டேன். ஆனால், அதற்காக நான் கவலைப்படவில்லை. நான் எந்தளவுக்குக் கவலைப்படவில்லை என்று காட்டுவதற்காக அவனைப் பார்த்து நெளித்துவிட்டு, திரும்பி வீட்டின் முன்பாதை வழியாக அதைநோக்கி நடக்கத் தொடங்கினேன். வீட்டுக்கும், மதிலுக்கும் இடையில் இருந்த ஒடுக்கமான பாதையால் பின்புறமாகப் போய் கொண்டிருக்கையில், பின்னாலிருந்து பெண்கள், மணப்பெண் விளையாட்டுக்-காகத் தயார் செய்யும் சத்தம் கேட்டது.

குறிப்பாக தொக்கையம்மா மற்றவர்-களுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது. பின்புறத் தோட்-டத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த நான் அங்கு வைக்கப்பட்டிருந்த 'வெடிங் கேக்'கைக் (Weeding Cake) கண்டதும் நின்று அதை நோக்கினேன். கேக்கின் அடிப்பாகம் பாதிச் சிரட்டை அச்சில் களிமண்ணைப் போட்டுப் பதிக்கப்பட்டு, ஒரு பிஸ்கட் ரின்னின் மூடியில் அது வைக்கப்பட்டிருந்தது. இந்த மூடியில் மூன்று களிமண் கேக்குகள் இருந்தன. இவற்றின் மீது ஒரு தேங்காய்ப்பால் பேணியின் உறைவைக்கப்பட்டு அதன் மேல் ஒரு தனிக் கேக் வைக்கப்பட்டிருந்தது. இது மூன்று கேக் துண்டுகள் ஒன்றாக இணைக்கப்பட்ட புது வடிவக் கேக். என்னுடைய கண்டுபிடிப்பு இது. அதை அப்படியே 'கொப்பி' அடித்திருந்தாள் தொக்கையம்மா. அத்துடன் அவற்றை சிறு பூங்கொத்துக்களாலும் வேறு மலர்களாலும் அலங்கரிக்கும் பொறுப்பையும் தானே எடுத்துக் கொண்டு நான் எப்போதும் செய்வது போலவே அலங்காரம் செய்திருந்தாள்.

சோனாலி தான் முதலில் நான் வந்ததைக் கவனித்தாள்.

'அர்ஜே' என்று கத்தினாள். அவள் சந்தோசத்துடன்.

மற்றவர்களும் என்னைக் கவனித்து-விட்டு சந்தோசத்துடன் ஆரவாரித்தனர். லக்ஷ்மி என்னையும் தங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளும்படி அழைப்புவிட்டாள். ஆனால், நான் அவர்களுடன் சேர்ந்து கொள்வதற்கு முன்பாக தொகையம்மா எழுந்து நின்றபடி என்னைப்பார்த்துக் கேட்டாள்.

'உனக்கு என்ன வேணும் இஞ்சை?'

நான் சற்று முன்னோக்கி நகர்ந்தேன். அவளும் திடீரென, ஒரு வாத்து தனது குஞ்சைப் பாம்பிடம் இருந்து காக்க வருவதுபோல என்னை நோக்கி முன்னாக நகர்ந்து வந்து கத்தினாள்.

"போ வெளியாலை" - தனது இரு கைகளையும் பிணைத்துப் பிடித்தபடி அவள் மேலும் கத்தினாள்:

"பெடியங்களுக்கு இஞ்சை அனுமதி இல்லை"

அவள் சொன்னதை நான் கேட்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

"கெதியா போய்விடு வெளியிலை... இல்லாட்டி அம்மாச்சியிட்டைப் போய்ச் சொல்லுவேன்...!"

'நானும் மணப்பெண் விளையாட்டு விளையாடப் போகிறேன். - முடிந்தளவுக்கு மென்மையாகவும், பரிதாபமாகவும் நான் சொன்னேன்.

'மணப்பெண் விளையாட்டு?' அவள் கிண்டலடிப்பது போல் அதைத் திரும்பவும் திருப்பிச் சொன்னாள்.

'ஓம்' - நான் ஒரு மெல்லிய, இரகசியமான குரலில் பதில் சொன்னேன்.

சோனாலி எழுந்து வந்தாள். "அவன் விளையாட முடியாதா... அவன் நல்லா விளையாடுவானே?' என்று தொக்கையம்மாவிடம் கேட்டாள் அவள்.

'என்னிடம் உங்களிட்டை இல்லாத இந்த விளையாட்டுக்குத் தேவையான ஒரு சாமான் இருக்கிறது."

நான் திடீரென்று சொன்னேன். - அவளது முடிவில் ஏதாவது ஊசலாட்டம் ஏற்படும் என்ற நம்பிக்கையுடன்.

"ஆ்... என்ன அது..?"


"சேலை"

"சேலை..." அவள் இகழ்ச்சியுடன் எதிரொலித்தாள். அவளது முகத்திற்குக்குறுக்காக ஒரு காழ்ப்புணர்வுடன் கூடிய சூழ்ச்சிக்குரிய பாவம் பளிச்சிட்டு மறைந்தது.

"ஓம்.. அது இல்லாமல் நீங்கள் மணப்பெண் விளையாட்டு விளையாட முடியாது"

"ஏன் முடியாது?" - அவள் எந்த மாற்றமும் இல்லாத முகபாவத்துடன் திருப்பிக் கேட்டாள்.

(தொடரும்)



நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தின் வெற்றியை எவ்வாறு கணிப்பது?

– பிரணவி குணசீலன்

இசர்வதேச தொடர்பூடகங்களால் தற்போது அதிகம் பேசப்படுகின்ற ஒரு விடயமாக இந்த யுரேனியம் ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்காவினால் தயாரிக்கப்படுகின்ற இந்த ஆயுதங்களை அது "அதிசய ஆயுதங்கள்" எனக் கடந்த காலங்களில் வர்ணித்து வந்துள்ளது. 1970களில் இருந்து யுரேனியம் ஆயுதங்கள் பற்றி ஆய்வு செய்து தயாரிப்புக்களில் ஈடுபட்ட போதும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அமெரிக்காவிற்குக் கிடைக்கவில்லை. இந்த வாய்ப்பை வழங்கிய முதல் சந்தர்ப்பமாக அமைந்தது வளைகுடாப் போராகும். வளைகுடாப் போரில் ஈராக்கிற்கு எதிராக இந்த ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தியது. இதன் தாக்கங்கள் குறித்து ஈராக்கும் மனித உரிமை அமைப்புக்களும் குறிப்பிட்ட போதும் அந்த விடயங்களை அமெரிக்காவும் அவற்றின் நேச சக்திகளான மேற்குலகும் நிராகரித்தே வந்துள்ளன.

யூகோசிலாவிய யுத்தத்தின் போதும், சேர்பியாவில் நேட்டோ மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றியும், அதன் அழிவுகள் பற்றியும் யூகோஸ்லாவிய அரசு குறிப்பிட்ட போதும், அவற்றை ஏற்க மேற்குலகும் நேட்டோவும் தயாராக இருக்கவில்லை. ஈராக்கிய, யூகோஸ்லாவிய அப்பாவி மக்களின் பாதிப்புக்கள் குறித்து எந்தக் கவலையும் கொள்ளாமல் இருந்தவர்கள் தற்போது இது பற்றி அதிகம் பேசத் தொடங்கியுள்ளார்கள்.

இதற்குக் காரணம் நிலைமை ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, ஆளைக் கடிக்கின்ற நிலைக்கு வந்தது தான். ஆம். கொசோவோவில் கடமையாற்றிய நேட்டோப் படையணியைச் சேர்ந்த எட்டு இத்தாலிய வீரர்கள் இரத்தப் புற்றுநோயினால் பலியாகி இருக்கின்றார்கள். தமது படையினரையும் இது பாதிக்கின்றது என்ற நிலை வந்த போது தான் இந்த நாடுகள் வாயைத் திறந்துள்ளன. பெல்ஜியம், போர்த்துக்கல் படை வீரர்களிலும் புற்றுநோய் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனி உட்பட மற்றைய நாடுகளும் படையினரை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றன. இராணுவத்தினர் மட்டுமன்றி, மனித உரிமை அமைப்புக்கள், உதவி வழங்கும் அமைப்புக்கள், உள்ளூர் மக்கள் ஆகியோரும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது உத்தியோகத்தர்களை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றது

யுரேனியம் எறிகணைகள் முனையில் யுரேனியத்தினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இது சாதாரண எறிகணைகளின் சக்தியை அதிகரிப்பதாகவுள்ளது. இதன் மூலம் இராணுவ கவச வாகனங்கள், தாங்கிகள், கட்டிடங்கள் என்பனவற்றை இலகுவாகத் தாக்கி அழிக்க முடியும். இதனால் யுத்தங்களின் போது யுரேனியம் ஏவுகணைகள், யுரேனியம் எறிகணைகள், யுரேனியம் குண்டுகள், யுரேனியம் கிரனைட்டுக்கள் என்பன அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கப் படையினர் ஈராக்கின் பரா நகருக்கும் பாக்தாத் நகருக்கும் இடையிலான வீதிகளில், ஏராளமான யுரேனியம் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினார்கள். ஈராக்கின் சக்தி வாய்ந்த பல தாங்கிகள் சின்னாபின்னமாகத் தகர்க்கப்பட்டன. அமெரிக்க இராணுவத்தின் வளைகுடா விஞ்ஞானியான டக் றொக் (Doug Rokke) என்பவர், வளைகுடாவில் ஏழு இலட்சம் படையினர் குவிக்கப்பட்டதாகவும், அவர்களில் ஒரு இலட்சம் பேர் ஏதோ ஒரு வகையில் நோயுற்றுள்ளனர் என்றும் கூறியுள்ளார். யுரேனியம் ஆயுதங்கள் இரத்தப் புற்றுநோயை மட்டும் தான் ஏற்படுத்த வேண்டும் என்றில்லை என்றும், தோல்புற்று நோய், சுவாசப்பை புற்றுநோய் உட்பட நச்சுவாயுக்கள் சுவாசிக்கப்பட்டதனாலும், உடலில் யுரேனியம் கலப்பதனாலும் பல்வேறு நோய்களும் ஏற்படலாம் எனவும் வைத்திய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஸ்பெயின் பாதுகாப்பு அமைச்சர் நாடு திரும்பியுள்ள தமது 35ஆயிரம் படைவீரர்களையும் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். நேட்டோவில் அங்கம் பெறும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெற்றோர்களும் உறவினர்களும் தமது பிள்ளைகளை உடனடியாகக் களத்திலிருந்து மீள அழைக்குமாறு அரசாங்கங்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.

யூகோசிலாவியாவில் 1990களுக்குப் பின்னர் புற்றுநோயின் தாக்கம் 30வீதம் அதிகரித்துள்ளது. பொஸ்னியக் கிராமமொன்றில் மாத்திரம் இதுவரை 400 பேர் இறந்துள்ளனர். பத்துத் தொன் எடையான யுரேனியம் ஆயுதங்கள் யூகோசிலாவியாவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1999ஆம் ஆண்டில் மாத்திரம் கோசோவோ யுத்தத்தின் போது அமெரிக்க A-10 யுத்த விமானங்கள் 31ஆயிரம் யுரேனியம் கிரனைற்றுக்களை அங்கு வீசியுள்ளன.

இயற்கை யுரேனியத்திலிருந்து பெறப்படும் கழிவு யுரேனியத்தையே அமெரிக்கா ஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்தி வருகின்றது. இது குறைந்தளவான கதிர் வீச்சுத் தாக்கத்தைக் கொண்டது என நம்பப்படுகின்ற போதும், அந்தக் குறைந்தளவே விரைவில் புற்றுநோய் பரவப் போதுமானதாக உள்ளது. கழிவு யுரேனியத்தைக் கொண்டு இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்வது மலிவானதாக இருப்பதனால், அமெரிக்கா இதனைச் செய்கிறது. அதுமட்டுமன்றி யுத்தங்களில் ஈடுபட்டுள்ள வறிய நாடுகளும், ஆயுதக் குழுக்களும் இந்த ஆயுதங்களை மலிவான விலையில் பெற்றுக் கொள்கின்றன. அதேவேளை எதிரிக்கு அதிக இழப்புக்களை ஏற்படுத்துவனவாகவும் இவை உள்ளன. "யுரேனியம்-238" என்ற இன்னொரு கழிவு மூலப்பொருளின் மூலம் நேரம் குறித்து வெடிக்க வைக்கும் குண்டுகளை அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. இவை உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் கேடு விளைவிக்கக் கூடியவை எனக் கூறப்படுகின்றது. சுவாசத்தின் மூலம் மாத்திரமின்றி, இந்தக் குண்டுகள்



நிலத்தில் விழும் போது நிலத்தை நஞ்சடையச் செய்கின்றன. இந்த நஞ்சு குறிப்பிட்ட நிலங்களில் பயிரிடப்படும் தாவரங்களின் ஊடாகவும், நீரிலும் கலந்து மக்களின் உணவில் கலந்து விடுகின்றது. இது பெரும் சமூக அழிவிற்குக் காரணமாக அமைகின்றது என இன்னொரு சாரார் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இந்தளவிற்கு ஆபத்துக்கள் நிறைந்த ஒரு ஆயுதமாகத் தான் இந்த மலிவான ஆயுதம் உள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் நடைபெறும் யுத்தம் பற்றியும் சற்று நோக்குவது நல்லது. கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக மிகவும் உக்கிரமாக நடக்கும் யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எத்தனையோ விமானத் தாக்குதல்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடாத்தியுள்ளார்கள். இவற்றில் யுரேனியம் ஆயுதங்கள் உண்டா? இல்லையா? என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. எனினும் சில சந்தர்ப்பங்களில் இரு தரப்பினருமே ஒருவரை ஒருவர் நச்சு ஆயுதங்களைப் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளனர் என்பதையும் இங்கு நினைவூட்ட வேண்டும்.

யுத்தம் ஒன்றின் போது மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்ற ஆய்வாளர்கள் எவரும் வெறுமனே இராணுவ ரீதியான வெற்றி, தோல்விகளை கணக்குப் போடுபவர்களாகவே உள்ளனர். மாறாக யுத்தம் ஒன்றினால் ஏற்படும் சமூகப் பாதிப்புக்கள், சுற்றாடல் பாதிப்புக்கள், நோய்த் தாக்கங்கள், உளவியல் அழுத்தங்கள் என்பன எல்லாம் பற்றி அவர்கள் கவனம் செலுத்துவதாக இல்லை. நிலத்தில் வெடிக்கின்ற ஒரு குண்டினால் ஏற்படும் நச்சுப் பொருட்கள் நிலத்தை மாத்திரமின்றி, காற்று, நீர் என்பனவற்றையும் நஞ்சடையச் செய்கின்றன.

இந்தச் சூழலில் வளரும் தாவரங்கள் கூட, இவற்றின் தாக்கத்தை உள்வாங்கிக் கொள்கின்றன. இவற்றை மக்கள் உண்ணும் போது மக்களின் உடலில் நஞ்சு சேர்கிறது. இது புற்றுநோய் உட்பட பலவகையான நோய்களுக்கு காரணமாகவுள்ளது. நோயால் பாதிக்கப்படும் வடக்குக் கிழக்கு மக்களைக் கூட சரியான வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய வசதிகள் அங்கு இல்லை. இந்த நிலையில் என்ன காரணம் என்று தெரியாமல், என்ன நோய் என்பது அறியப்படாமல், எத்தனையோ மரணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இந்த நிலையில் இந்த மரணங்களுக்கான காரணங்கள் யுத்தச் சூழல் காரணங்களாக ஏன் இருக்க முடியாது? என்ற கேள்வி எழுவது தப்பில்லை. அதுமட்டுமன்றி இந்த நச்சு ஆயுதப் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பல ஆண்டுகளுக்கு நீடித்து, எதிர்காலச் சந்ததியைக் கூடப் பாதிப்பனவாக இருக்க முடியும்.

இவ்வாறான நிகழ்வுகள் இன்று ஈராக்கில் யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் இடம் பெறுகின்றன. வியட்னாம் யுத்தத்தின் பின்னரும் 50 ஆண்டுகள் கடந்தும், அதன் வடுக்கள் இன்னும் உள்ளன. உலக யுத்தத்தின் போது வீசப்பட்ட அணுகுண்டின் தாக்கம், யப்பானில் இன்னும் உண்டு. இதன் அடிப்படையில் இலங்கையில் வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தையும், அதற்குப் பயன்படுத்தப்படும் ஏட்டிக்குப் போட்டியான சக்தி வாய்ந்த ஆயுதங்களின் தாக்கத்தையும், நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

இலங்கையில் யுத்தம் நடைபெறுகின்றது என்று கூறினாலும், உண்மையில் அந்த யுத்தம் வடக்குக் கிழக்கிலேயே இடம் பெறுகின்றது. இதனால் சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் வடக்குக் கிழக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றன. வடக்குக் கிழக்கு நிலத்தையும், நீரையும், தாவரங்களையும், சுற்றாடலையும், கடல் பரப்பையும், வான் பரப்பையும் நஞ்சூட்டுவதுடன், அந்தச் சூழலில் வாழும் பொதுமக்கள், போராளிகள், படையினர் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கும் சவால் விடுவனவாகவே உள்ளன.

இது வெறுமனே இராணுவ ரீதியில் போடப்படும் இலாப நட்டக் கணக்கிற்கு மாறான, சமூகநலன் சார்ந்த மதிப்பீடாகும். யுத்தமொன்றின் உண்மையான வெற்றி தோல்வி என்பது எத்தனை படையினர் அல்லது போராளிகள் கொல்லப்பட்டார்கள்? எத்தனை கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன? எவ்வளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன? என்ற இராணுவ இலாப நட்டக் கணக்கை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க முடியாது.

யுத்தம் நடைபெறும் பிரதேசத்தின் சுற்றாடல் பாதிப்புக்களும், மக்களின் சமூகநலனில் ஏற்பட்டுள்ள இழப்புக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு, அவற்றின் அடிப்படையிலேயே உண்மையான வெற்றி தோல்வி நவீன சமூகநலன் கோட்பாடுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும்.

## யுரேனிய ஆயுதங்களின் அச்சுறுத்தல்

### “நான் ஏன் இறக்க வேண்டும் என்ற உண்மை எனக்குத் தெரிய வேண்டும்.”

"நான் உண்மையை அறிய விரும்புகின்றேன். நான் ஏன் இறக்க வேண்டும் என்ற உண்மை எனக்குத் தெரிய வேண்டும்" எனத் தனது தினக்குறிப்புப் புத்தகத்தில் இருபத்திநான்கு வயதான சல்வரோரே கார்போனரோ என்ற இத்தாலியப் படைவீரர் எழுதியுள்ளார். மூன்று மாதங்களுக்குப் பின்னர் அதாவது யூகோசிலாவியாவில் இருந்து இத்தாலி திரும்பி மூன்று மாதங்களுக்குப் பின்னர் இவர் நோயுற்று உள்ளார். இவர் இரத்தப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

இத்தாலியைச் சேர்ந்த சுமார் 85 ஆயிரம் படையினர் புற்றுநோய் குறித்து அஞ்சுகின்றனர். 1995 ஆம் ஆண்டு முதல் பொஸ்னியா, சேர்பியா, அல்பானியா, கொசோவோ, மசிடோனியா ஆகிய நாடுகளில் இத்தாலியின் 60 ஆயிரம் படையினரும், 15 ஆயிரம் சுயவிருப்பிலான உதவியாளர்களும் கடமையாற்றியுள்ளனர். இவர்களையே தற்போது இரத்தப் புற்றுநோய் அச்சுறுத்தல் அதிர வைத்துள்ளது.

வளைகுடா யுத்தத்தின் பின்னரும் அங்கு கடமையில் இருந்த அமெரிக்கப் படையினர் பலரும் புற்றுநோய்க்குள்ளாகி இருந்த போதும், அத்தகவல்களை வெளியிடாமல் அமெரிக்கா மறுத்து வந்தது. இத்தாலியப் பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்கா யுரேனியக் குண்டுகளைப் பயன்படுத்துகின்றது என்பது தமக்குத் தெரியாது என்றும், உண்மையில் இப்படியான ஒரு விடயம் இத்தாலிப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் தெரிவித்துள்ளார்.

நன்றி - நூலகத்திட்டம்




ஆங்கிலம் பேசும் 'மேட்டுக் குடியினர்க்-கும், சிங்கள, தமிழ் பேசும் மக்களுக்கும் இடையில் இருந்து வந்த இடைவெளி - இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைகளில் ஒன்றாக இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. - கட்சி ஊழியர்களுக்கிடையேயான அரசியல் கலாசாரத்திலும், ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்திற்று. வாழ்க்கை முறை-யிலும் பொருளாதார மட்டத்திலும் ஊழியர்களின் மத்தியில் நிலவிய வேறுபாடுகளில் இது மிகவும் முக்கியமானதாக இருந்தது மட்டுமல்லாமல், இது அவர்களி-டையே 'சகோதரயா' என்று அழைக்கும் ஒரு முறைமை பின்பற்றப்பட்ட போதும், அதனால் கூட இணைக்க முடியாத ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தி இருந்தது.

உதாரணமாக, டொரிக் கட்சியின் ஆட்சிக் குழுவின் கூட்டங்களுக்கு ஒரு ரின் 'கோல்ட்ஃ பிளேக்' சிகரட்டுடன் வருவார். யாராவது ஒரு உள்ளூர் தோழர் ஒரு சிகரட் தரும்படி கேட்டால் அவரை நோக்கி டொரிக் சொல்வார்: " புரட்சிக்கு முன் சோசலிசம் கிடையாது".

இப்போது திரும்பிப் பார்க்கை-யில் கட்சியின் இத்தகைய உள்ளக

கோட்பாட்டு ரீதியான புரிதலின் அவசியத்தை தொழிலாளர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று கட்சி வலியுறுத்தவில்லை. அப்படி வலியுறுத்தியிருந்தால், கட்சிக்கு ஒரு தொழிலாள உறுப்பினர் கூட இருந்திருக்க மாட்டார்கள். ஆனால், அரசியலில் இருந்த இந்த இடை வெளியானது கட்சி அமைப்பையும் அதன் உள்ளக அமைப்பு வடிவங்களையும்




**தலைமறைவு வாழ்க்கை**

றெஜி சிறிவர்த்தன

பாதிக்கவே செய்தது. கட்சி என்பது வர்க்கத்தின் முன்னணிப் படை என்றால், கட்சியின் தலைமைக் குழுக்கள் தான் அரசியல் உணர்விலும், அர்ப்-பணிப்புள்ள செயற்பாட்டிலும் கட்சியின் முன்னணிப் படையாக இருக்க முடியும்.

பிளவுறுவதற்கான குழுவாதப் போக்குக்கான வேர்களை இந்த நிலைமையே அப்போதிருந்தே உருவாக்கி விட்டிருக்கிறது.

இலங்கைச் சமூகத்தை எந்தத் திசையில் வழிகாட்டிச் செல்ல லங்கா சம சமாஜக் கட்சி விரும்பியது? உண்மையில், தேசிய சுதந்திரமும் சோசலிசமும் தான் கட்சியின் அன்றைய நோங்கங்களாக இருந்தன. 1935இல் வெளியிடப்பட்ட கட்சியின் விஞ்ஞாபனத்தில் கூட அதன் நோக்கங்களாக இது குறிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இவற்றை அடைவது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு அந்த அரசியல் விஞ்ஞாபனத்தில் எந்தத் தெளிவான பதிலும் இருக்க வில்லை. ஆனால், 1940 - 41 இல் லங்கா சம சமாஜக் கட்சி மீள ஒழுங்கமைக்கப்பட்டு ஒரு மாக்சியக் கட்சியாகிய போது, அதற்குப் பதிலாக இருந்தது இதுதான்: "புரட்சியினூடாக!"

ஆனால், எந்தவகையான புரட்சி?

1939ல், கட்சி மூன்றாவது அகிலத்தைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது. கட்சியிலிருந்த ஸ்ராலினிஸ்டுக்கள் இந்தத் தீர்மானத்தின் காரணமாக வெளியேற்றப்பட்டாலும், இது வெறுமனே மூன்றாவது அகிலத்தை கண்டிக்க மட்டுமே

# “புரட்சிக்கு முன் சோசலிசம் கிடையாது” என்பார் டொரிக்!

வாழ்வை விளங்கிக் கொள்ள மாக்சின் கோட்பாடொன்றைப் பயன்படுத்தலாமென நம்புகிறேன். அவர் சொன்னார்: "ஒருவருடைய உணர்வு அவருடைய சமூக இருப்பைத் தீர்மானிப்பதில்லை. மாறாக சமூக இருப்பே ஒருவரின் உணர்வைத் தீர்மானிக்கிறது" (இந்தப் புகழ்பெற்ற கோட்பாட்டில் மார்க்ஸ் விட்ட ஒரேயொரு பிழை என்னவென்றால், இந்தக் கோட்-பாடே வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் அத்திவாரம் ஆகியபோது அதை 'சமூக இருப்பு' என்பதிலிருந்து பொருளாதார உறவுகள் தான் உணர்வுகளைத் தீர்மானிக்கும் என்ற முடிவுக்கு அதைக் குறுக்கியது தான். உண்மையில், சமூக இருப்பு என்பது பொருளாதார உறவு-களையும், விடப் பரந்ததும், விரிந்ததுமாகும். இதை அடை-யாளம் கண்டமைக்காக நாங்கள் பின் நாளில் வந்த பெண்ணிய இயக்கங்களுக்கு நன்றியுடைய-வர்களாக இருக்க வேண்டும்.

அர்ப்பணிப்பான செயற்பாடு என்பது ஒருவருடைய தயார் நிலையில் இருந்து வருகிறது. அரசியல் உணர்வு என்பது வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவாகிறது. ஆனால், இது தத்துவார்த்தப் புரிதலினுடாகவே முழுமையடைய முடியும். அன்றைய மத்திய கமிட்டியை (இது விரைவிலேயே 'பிராந்தியக் கமிட்டி' எனப் பெயரிடப்பட்டது. லங்கா சம சமாஜக் கட்சி, டி.எல்.பி.ஐ.இன் ஒரு உறுப்புரி-மைக் கட்சியாக மாறிய போது இந்த மாற்றம் நடந்தது) திரும்பிப் பார்க்கையில் அதில் ஒரு சிறிய சிறுபான்மையினராகவே தொழி-லாள உறுப்பினர்கள் இருந்தி-ருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆனால், இது வெறும் பெயருக்கு இருந்தது போலத்தான். அனேகமான விவாதங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே நடந்தன. பெரும்பான்மையானவர்களுக்கு

## நினைவுக் குறிப்புகள் – 15

எல்லாச் சமூக உறவுகளிலும் அதிகாரம் கலந்து இருக்கிறது என்றும், ஆகவே தனிப்பட்டது என்பது கூட அரசியலிலிருந்து பிரிக்க முடியாதது என்றும், அழுத்தித் தெரிவித்ததற்கு எப்படி பெண்ணிய இயக்கங்களுக்கு நாம் நன்றி கூறுகிறோமா அது போல இதற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.)

நடைமுறையில் கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கும் போது, மாணவர்களையும், மத்திய தரவர்க்க அபிலாசைகள் உள்ளவர்களையும் கட்சிக்குள் சேர்க்கும் போது கடைப்பிடித்த

ஆங்கில மொழியிலேயே விவாதிக்க முடிந்தது. முடிவு எடுக்கப்படும் தருணங்களில் மட்டுமே விவாதங்களின் சுருக்கம் சிங்களத்திலோ, அல்லது தமிழிலோ வழங்கப்பட்டது. சர்ச்சைக்குரிய தத்துவார்த்த விடயங்களில் முடிவு எடுக்க வேண்டிவரும் போது ஆழமற்ற புரிதலைக் கொண்டுள்ள தொழிலாள உறுப்பினர்கள் என்ன செய்வார்கள்? இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் செயற்பட்டவிதத்தில் அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவே இருந்திருக்கிறார்கள். 1942 இலும் அதன் பிறகும் கட்சி

செய்தது. ஆனால், அன்றிலிருந்து கட்சி ட்ரொஸ்கிசத்தை நோக்கி முழுமையாகச் செல்லத் தொடங்கியது. இது லங்கா சம சமாஜக் கட்சி இலங்கைப் புரட்சி தொடர்பான வேறு சில நிலைப் பாடுகளையும் எடுக்க வைத்தது. இந்த நிலைப்பாடு கட்சியை மேலும் அதிகமாக ஸ்ராலினிஸ்டு-களிடமிருந்து விலக வைத்தது.

காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளில் புரட்சி இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்ற கருத்து அன்றைய கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே நிலவியது. முதலாவது கட்டம், தேசிய பூர்ஷுவாக்களின் தலைமையிலான ஒரு ஜனநாயகப் புரட்சி என்றும், இது ஏகாதிபத்தியத்தைத் தூக்கி எறிவதுடன், நிலப்பிரபுத்துவ எச்சசொச்சங்களையும் இல்லா தொழிக்கும் என்றும் கருதப்பட்டது.

இந்தப் புரட்சியில் தொழிலாள வர்க்கமும், அதன் கட்சியும், தேசிய பூர்ஷுவா வர்க்கம் முற்போக்குப் பாத்திரத்தை அதாவது ஏகாதிபத்திய, நிலப் பிரபுத்துவ எதிர்ப்பைக் கொண்டிருக்கும் வரை கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்று கருதப்பட்டது.

இதன் பிறகு, அதாவது முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு, தொழிலாள வர்க்கம், முதலாளித்துவ வர்க்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரு சோசலிசப் புரட்சியை நோக்கி நகர்வதற்கு வழிகாட்ட வேண்டும் என்று கருதப்பட்டது.

**(வரும்)**

# ஏடுக்குறிப்பு

'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை சுடர் - 8 வெளிவந்துள்ளது.

இவ்விதழின் சிறப்பம்சமாக 'கன்னிகா தானங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட அருண் விஜயகுமாரியுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.




**ஞானம்**

தொடர்புகளுக்கு
தி.ஞானசேகரன்
197, பேராதனை வீதி
கண்டி
விலை : ரூபா 15.00

அத்துடன், "சில்லையூர் செல்வராசன், ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறைத் திறனாய்வு முன்னோடி" என்ற தலைப்பில் கே.எஸ்.சிவகுமாரனின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

இதைவிட அல்ஜீரியக் கவிஞர் லைலா ஜபாலி என்பவரின் 'என் சித்திரவதைஞன் லெப்டினன்ற் டிக்காக' என்னும் கவிதை எம்.ஏ.நுஃமானின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளது

கே.விஜயனின் 'பெண்ணென்று பூமிதனில்....! என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் ஞானம் இதழில் வெளிவந்த இலக்கியப் படைப்புகள் தரமானதாக இருந்-தாலும் சென்ற இதழில் வெளி-வந்திருந்த யோகா பாலச்சந்திர-னின் "ஆலகால விஷமா? அமிர்தமா? என்ற சிறுகதையும், இவ்விதழில் வெளிவந்துள்ள கே.விஜயனின் சிறுகதையும் பெண்களின் பிரச்சினைகளை அல்லது தமிழ்ப் பெண்ணின் பிரச்சினையை எந்தவித பிரக்ஞை-யும் இன்றி கொச்சைப்படுத்தி எழுதப்பட்ட சிறுகதைகளாகும்.

இவ்வாறான பெண்களின் பிரச்சினைகளை உணர்வு பூர்வ-மாக உண்மையான நிலையில் கொண்டுவர முடியாத சிறுகதை-களை அதுவும், வேண்டுமென்றே அவர்களின் பிரச்சினைகளைக் கொச்சைப்படுத்தி எழுதுகின்ற எழுத்தாளர்களின் சிறுகதைகளை வெளியிடுவதன் மூலம் ஞானம் தன்னையே தாழ்த்திக் கொள்-கின்றது. இவ்விடயத்தில் ஞானம் இதழின் ஆசிரியர்கள் கவனம் எடுப்பது நல்லது.

'கலை முத்து எனும் 'கலை இலக்கிய சமூக இதழ்' முத்து 2 வெளிவந்துள்ளது.




வழமையான கவிதை, சிறுகதை என்ற அம்சங்களுடன், சிறு சிறு சமூகம் சார்ந்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

தொடர்ந்து வரும் இதழ்கள் இன்னும் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்பபோம்.

**கலை முத்து**

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
கலை முத்து
M.Z. முஹம்மட் நயீம்
163/10 மிஹிந்து மாவத்தை
தெஹிவளை
விலை : ரூபா 20.00

இலங்கைத் தமிழ்ச் சூழலில் அவ்வப்போது புதிய புதிய சிறு சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த

**புதிய தொனி**

ஆசிரியர்
வை.எம்.எல்.றிஸ்வி

வெளியீடு
இளங் கலை இலக்கியப் பேரவை
வீ.சீ.வீதி,
வாழைச்சேனை
விலை : ரூபா 20.00

வகையில் அண்மையில் வாழைச்சேனையில் இருந்து வெளிவந்துள்ள சிறு சஞ்சிகை "புதிய தொனி" ஆகும். காலாண்டு இதழாக வெளிவர இருக்கும் இவ்விதழின் ஆசிரியர் வாழையூர் வை.எல்.எம்.றிஸ்வி (மன்பா).

இலக்கியச் சஞ்சிகையான இதில் கதை, கவிதை, மற்றும் இலக்கியக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

அதை விட "பாலர் பாடசாலையில் மாற்றம் தேவை" எனும் சிறு கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.




தொடர்ந்து வெளிவரவி-ருக்கும் இவ்விதழில் இன்னும் காத்திரமான அம்சங்கள் இடம் பெற வேண்டும் என எதிர்பார்ப்போம்.

நன்றி - நூலகத்திட்டம்




# அம்மனைப் பார்த்து எழுதிய இன்னும் பல விடயங்கள்

சுகபோக சாமியார்கள் என எழுதப்பட்ட உண்மையான தகவல்களை வதந்தியாகவும், பார்த்தெழுதச் சொல்லியும் இதழ் 217இல் இருபது பேர் கையெழுத்திட்டு அனுப்பப்பட்ட விடயத்திற்கு முதலில் எனது நன்றி!

பார்த்தவற்றில் நிறையவே எழுத இடம் போதாமல் தான் போய் விட்டது. அம்மன் விளையாட்டு நடை பெறும் இடத்திற்கு எத்தனை இளம் பெண்கள் வருவதை நிறுத்தி விட்டார்கள்? ஏன்? என்பதைத் தனித்தனியே விபரித்தெழுதினால் சில இளம் பெண்களை விபரீதமான முடிவெடுக்க சரிநிகரும் காரணமாகி விடும்.

ஆகவே சரிநிகர் இதனைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டியுள்ளது. வதந்தியென நீங்கள் எதைக் கூறுகின்றீர்கள்? கால்சட்டையுடன் நின்று பாவாடை கட்டி, மார்புக் கச்சையினை இந்த ஆணின் மார்பில் இழுத்து இறுக்கிக் கட்டி இடமிருக்கும் வரை எதையாவது அடைந்து, மேற்சட்டை அணிந்து, சேலை உடுத்து, நீளத் தலைமயிரணிந்து பெண்கள் போல் அலங்கரித்து, அம்மன் போல நிலையெடுத்து நின்று, பெண்கள் காலில் பூப்போட்டு, விழுந்து கிடக்க, இந்தப் பேர்வழி மாலை போட்டு மயக்க நினைப்பது வதந்தியா? இந்தப் பேர்வழி மலைநாடு, கதிர்காமம் போன்றவற்றிற்கு சிலருடன் சுற்றுலாச் சென்ற போது, கூடவே சென்ற இளம் பையன் ஒருவனை தனது இச்சையைத் தீர்க்க பயன்படுத்தும் எண்ணத்துடன், விடுதியொன்றில் தங்கியிருந்த வேளை அந்த இளம் பையனிடம் இந்த அம்மன் உதை வாங்கியதையா? இது பக்தர்களிற்குத் தெரிய நியாயமில்லைத் தான். ஆனால் இது வதந்தியில்லை ஈஸ்வரனுக்கே வெளிச்சம். ரமேஸ் என்பவரது காணியில் இடம் பெயர்ந்து வந்து இருக்கக் கேட்டது உண்மை தான். கோயில்கட்டி அம்மன் விளையாட்டு விளையாடுவதையோ, அதற்குள் கிணறு வெட்டி ரமேஸின் காணியை பிடிக்கலாமென நினைத்ததையோ, பின்பு புளொட் இயக்கம், காணியை விட்டு வெளியேற காலக்கெடு கொடுத்ததையோ ஏன் பார்த்தெழுத வேண்டுமென எழுதாமல் விட்டுவிட்டீர்கள் பக்தர்களே?

புகைப்படம் எடுத்தது பற்றி ஏதேதோ குழப்பி வைத்திருக்கின்றீர்கள். பலதடவை பல கோணங்களில் புகைப்படமெடுத்ததும், எப்படியான புகைப்படக் கருவிகள் பயன்படுத்தப்பட்டனவென்பது பற்றியும் பக்தர்களுக்கேன், அம்மனுக்கே தெரியாது. நீங்கள் சொல்வது போல் புகைப்படம் பிடித்திருந்தால் வரம் கொடுக்கும் அம்மனால் ஏனதைத் தடுக்க முடியாமல் போய் விட்டது. இதையும் பார்த்தெழுத வைத்து விட்டீர்கள். நீங்கள் எதிரிகள் என யாரைக் கூறுகின்றீர்களோ, அவர்கள் உங்களைப் போல் முன்னாள் பக்தர்கள் தான். அரச உயரதிகாரிகள் மட்டு மல்லாது கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களும் வருவதாகக் கூறுகிறீர்களே. இங்கே பெருமளவானவர்கள் வரம் பெறவா வருகின்றார்கள் என நினைக்கின்றீர்கள். அம்மன் என்றாடும், கேலிக்கூத்தைப் பார்த்துக் கேலி செய்வதற்கு வருகின்றனர் என்பதை உங்களுக்கு படம் பிடித்துத் தான் காட்ட வேண்டும். நீங்கள் சொல்வது போல பக்தர் கூட்டமே நிறைந்து வழிகின்றது என்றால், ஏன் ஆக இருபது பேரை மட்டுமே இவ்வளவு சிரமப்பட்டு கையொப்பமிட தேடிப்பிடித்தீர்கள். வன்னியிலிருந்தும், மக்கள் வருகின்றனர் என கூறப் படுவதை நினைக்கும் போதே வேதனையாக இருக்கின்றது. வன்னியில் போரின் பிடிக்குள் சிக்குண்டு மக்கள் பெரும் துயருக்குள் சிக்கித் தவிக்கின்றனர். அந்த மக்களின் அவ லத்திலும் ஐந்தோ, பத்தோ பறித்தெடுக்கப் பார்க்கும் வேலையெல்லவா நடக்கின்றது. அம்மன் தான் வந்திருக்கின்றா என்றால், வெற்றிலையில் பணம் தட்சணையாக வேண்ட வேண்டுமா? நீங்கள் ஆலயம் என சொல்லப்படும் இடத்தின்




முன்புறம் சிறிய தண்ணீர் தொட்டி அமைத்து அந்தத் தண்ணீ ருக்கு வரும் மக்களிடம் சில்லறையினை வேண்டியேன் போடுவான். அம்மனுக்கேன் பணம்? இவையெல்லாம் போக வதிவிட அனுமதிப் பத்திரம் இல்லாமல் இந்த ஈஸ்வரன் - அம்மனால் வவுனியாவில் வாழ முடியுமா? இந்தப் பேர்வழியை நம்பி வந்த அரச திணைக்களத்தில் கடமையாற்றும் பெண் உயரதிகாரியான ஒருவரிடம் நிரந்திர அனுமதி கேட்டு ஏன் இழிச்சுக் கொண்டு நிற்க வேண்டும் வரம் கொடுக்கும் இந்த அம்மன்? இந்த அம்மனுக்கும் பெண்களுடனான பிரச்சினைகள் பற்றி தவிர்த்தது நாகரீகம் தான் என்பதை விளங்கிக் கொள்ளவில்லை என்றால், திருமணம் செய்வதாக இவரால் ஏமாற்றப்பட்ட ஒரு இளம் பெண் எங்கு வந்தும் உண்மை சொல்லத் தயாராக உள்ளார். பத்திரிகையில் மட்டுமல்ல, நீதிமன்றம் மூலமாகவும் நடவடிக்கை எடுக்க உதவுவதாகவும், தன்னைப் போல் வேறு பெண்கள் பாதிக்கப்படாமல் இருக்கத் தான் இதற்கு துணிவதாகவும் பாதிக்கப்பட்ட இவ்விளம் பெண் ஒருவர் முன் வந்துள்ளார்.

ஊர் முழுக்க வேட்டுச்சத்தம் ஒப்பாரி ஒலி கேட்டுக் கொண்டிருக்க, போரின் அவலத்தை தாங்க முடியாது தமிழர் வெந்து வேகியிருக்க, ஈஸ்வரன் ஒய்யாரமாக ஊஞ்சலில் ஆடுவது தேவை தானா? இப்படியான விடயம் வெளிக் கொண்டு வரப்பட்டது தேவையானதொன்றென பலரால் கூறப்பட்டது. பார்த்தெழுதுக என்றதும், பார்த்து இன்னுமெழுதுங்கள் என பல தொலைபேசி அழைப்புக்களின் விளைவால் இது எழுதப்படுகிறது இன்னும் இன்னும் பார்த்து எழுத வேண்டியநிலையும் ஏற்பட்டுள்ளது.

– கே.ஆர்.

# அம்மனுக்கு ஒரு ரேட்!

சென்ற வருடம் டிசம்பர் 17ம் திகதி அன்று வெளியான இதழ் 214 சரிநிகரில் "சுகபோகச் சாமியார்கள்" என்னும் சம்பவம் ஒன்று பிரசுரமாகியிருந்தது. அக்கட்டுரையை வாசித்த நான் சரிநிகரின் உண்மை தன்மை கண்டு மகிழ்ச்சி கொண்டேன். மக்கள் மத்தியில் உண்மையை உரைக்கும் முதற் பத்திரிகை சரிநிகர் தான் என்கிறேன். மூடநம்பிக்கை ஏமாற்று வேலைகள் போன்றவற்றைக் களைவதில் சரிநிகரின் பங்கு சிறப்பானது.

இந்தச் சுகபோகச் சாமியாரிடம் சென்ற பல ஏழை பக்தர்கள் இந்தச் சாமியாரிடம் ஐம்பது ரூபாய்க்கு குறைவாகப் பணம் கொடுத்து குறிபார்க்கச் சொன்ன வேளையில் இதற்கெல்லாம் அம்மன் குறிசொல்லாது, அம்மனுக்கென்று ஒரு ரேட் இருக்கிறது என்று பலரின் மத்தியில் வைத்து நக்கல் பாணியில் சொல்வாராம். இப்பொழுது இந்தச் சாமியிடம் ஏழை எளியவர்கள் செல்வது மிகவும் சொற்பம். இவ்வாறான இந்தச் சாமி தனக்கு பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா என்று ஏதோ சாதாரண மனிதன் கொண்டாடுவது போல் மிகவும் ஆடம்பரமாகச் செய்திருக்கிறார். இனி திருமணம் ஒன்று தான் பாக்கி. பாவம் அதுவும் அவர் அம்மனாக இருப்பதால் யாரையாவது ஒரு ஆணைத்தான் மணஞ் செய்ய வேண்டும்.

இந்த அம்மனின் எடுபிடிகள் சிலர் தங்களுக்கும் எழுதத் தெரியும் என்ற தோரணையில் சரிநிகரையே "பார்த்து எழுதுக" என்று சொல்லி விட்டார்கள். இருபது கையெழுத்துக்களாம். நாங்கள் அதைவிட கூடுதலான கையெழுத்து வேண்டினால் அவர்கள் அதைவிட கூடுதலாக வாபஸ் பெற்று விடுவார்களா என்ன?

அந்த லட்சணத்தில் சாமியாரின் கூத்தை நேரில் வேறு பார்க்க வரச்சொல்கிறார்கள். நாங்களும் அதைத் தான் சொல்கிறோம் நேரில் வந்து பார்த்து இதன் போலித் தனத்தை அறியத்தான் வேண்டும். சரிநிகரின் உண்மையான உழைப்பை மக்கள் மத்தியில் நிலைநாட்டத் தான் வேண்டும். இது தான் இந்த அன்பான வாசகனின் வேண்டுகோள்.

நி.பிரதீபன், வவுனியா

**ஆ.கு.**
**இந்தக் கடிதம் போல இன்னும் ஏராளம் கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. சாமியாரின் திருக் கூத்துக்களை சரிநிகர் பாராமல் எழுதவில்லை. பார்த்து தான் எழுதியது. ஏமாறும் மக்களில் ஒரு சிலராவது உண்மையைப் புரிந்து கொண்டால் சரி.**

# பொங்கு தமிழும் தமிழ் மக்களும்!

இருபது வருடங்களிற்குப் பின் மீண்டுமொரு அகிம்சைப் போராட்டமாக 'பொங்கு தமிழ்' நடந்து முடிந்திருக்கிறது. உலக நாடுகளின் மத்தியில் யாழ்ப்பாணத்தைப் பற்றி எடுத்தியம்பும் அரசின் பொய்ப் பிரச்சாரங்களை எல்லாம் முறியடித்து யாழ்ப்பாணம் ஓர் திறந்தவெளிச் சிறைச்சாலை என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் யாழ். மாணவர்களும், மக்களும்.

வன்னி மட்டுமே திறந்தவெளிச் சிறைச்சாலை என்று பிரச்சாரப்படுத்தி வரும் அரசிற்கு, தமிழர்கள் இலக்கத்துடன் (அடையாள அட்டை) திரிகின்ற இலங்கையின் ஏனைய இடங்களும் திறந்த வெளிச் சிறைச்சாலை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கான ஓர் ஆரம்ப கட்டமாக இந்தப் பொங்கு தமிழை எடுத்துக் கொண்டு அனைத்துத் தமிழர்களும், சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

பாரிய இராணுவ முற்றுகைக்கு மத்தியிலும் யாழ் மக்கள் துணிந்து நிறைவேற்றிய இந்நிகழ்விற்கு ஆதரவாக, வடக்குக் கிழக்கிலுள்ள ஒரு சில பகுதி மக்கள் மட்டுமன்றி அனைத்துப் பகுதி வாழ் தமிழ் மக்களும் குரல் கொடுத்திருக்கலாம்.

குமார் பொன்னம்பலம் இறந்த போது அறிக்கைவிட்ட எத்தனையோ தமிழ் அமைப்புக்கள் அவரது பணியின் ஓர் அங்கமாகக் கொள்ளக் கூடிய இந்நிகழ்ச்சிக்கு ஆதரவாக ஓர் அறிக்கையேனும் வெளியிட்டிருக்கலாம்.

இந்நிகழ்ச்சியைப் பொறுப்பேற்று நடாத்திய யாழ் பல்கலைகழக சமூகத்திற்கு ஆதரவாக ஏனைய பல்கலைக்கழக தமிழ்ச் சமூகம் செயற்பட்டிருக்கலாம்.

நிமலராஜன் படுகொலையைக் கண்டித்த தமிழ் ஊடகவியலாளர்கள் அனைத்துத் தமிழர் படுகொலையைக் கண்டிக்கும் இந்நிகழ்வுக்கும் ஆதரவு தெரிவித்திருக்கலாம்.

ஜனநாயக வழிமூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ப் பறை தட்டித் திரியும், சில தமிழ்க் கட்சிகள் இந்த அகிம்சை வழிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கலாம்.

இவ்வாறு நாடு முழுவதும் வாழும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து பொங்கு தமிழ் நிகழ்வை ஆதரித்திருந்தால் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்ததைப் போலல்லாவிட்டாலும் ஓரளவேனும் மக்கள் புரட்சி மூலம் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளுமாறு அரசை நிர்ப்பந்திருக்கலாம்.

சபேசன், வெள்ளவத்தை

# சிங்கப்பூர் பிரதமரின் ..................

இந்திய இராணுவம் வெளியேரிய பின் இவர் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார். தமிழ்ப் புலிகளுடன் இவர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுத் தோல்வி கண்டார். இவர் போதியளவு விட்டுக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை.

இந்தப் பிரச்சினையை இராணுவம் மூலம் தீர்க்க முடியாது என நான் பல தடவைகள் இவரை சிங்கப்பூரில் சந்தித்த பொழுது வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். அரசியல் தீர்வுதான் ஒரேவழி. இது யாழ்ப்பாணத் தமிழராலும் உலகத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது. இது தமிழ்ச் சுயாட்சி இயக்கத்தின் மிதவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியிரால் நிராகரிக்கப்பட முடியாதது. வாக்கெடுப்பு மூலம் தமிழர் தமக்கென ஒரு அரசை அமைக்கக் கூடிய ஒரு சுயாட்சித் திட்டத்தை முன்வைப்பதன் மூலம் பயங்கரவாதிகளுக்கான மக்களின் ஆதரவை குறைக்க முடியும். இதனையே பிரதான நோக்கமாகக் கொண்டு பிரேமதாசா செயற்பட வேண்டும் என நான் அவருடன் வாதாடி இருக்கிறேன்.

இருந்தாலும் புலிகளை அழித்துவிட முடியும் என அவர் கருதினார். 1991இலும் 1992 இலும் அவர் சிறிலங்கா இராணுவத்தை தமிழ் புலிகளுடன் பாரிய யுத்தத்தில் ஈடுபடுத்தினார். இது வெற்றியளிக்கவில்லை.

1993ம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் இலக்குக்கு அவரும் இன்னும் பலரும் பலியாகினர். அவரைத் தொடர்ந்து சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வியான சந்திரிகா குமாரணதுங்க பேச்சுவார்த்தையையும், போரையும் பயன்படுத்தி வருகிறார். அவர் யாழ்ப்பாணத்தைக் கைபற்றியிருந்தாலும், தமிழ்ப் புலிகளை அழிக்க முடியவில்லை. போர் இன்னமும் தொடர்கிறது.

சிறிலங்காவின் பண்டைய பெணர் 'செரண்டிப்' செரன்டிபிடி (களிப்புறச் செய்யும் பொருட்களின் தற்செயலாக கண்டுபிடிக்கும் திறன்) என்ற சொல்லை ஆங்கில மொழிக்களித்த ஒரு நாடு இன்று துயரிலும் நம்பிக்கையின்மையிலும் நெருக்கடியிலும் சிக்கித்தவிப்பது கவலைக்குரியதே.

# பயங்கரவாதி லேபிள் குத்தும்.......

பெரும்பாலான தனிநபர்களோ அமைப்புக்களோ உண்மையில், பயங்கரவாதிகள் அல்ல என்பதை உலகம் பின்னர் கண்டு கொண்டுள்ளது.

பயங்கரவாத செயல்களை செய்திருப்பதால் மட்டும் ஒருவர் பயங்கரவாதி ஆவதில்லை. பயங்கரவாத செயல் நோக்கத்திற்காகவே அதனைச் செய்யும் போது தான் அவர்கள் பயங்கரவாதிகளாகின்றனர். உலகின் எல்லா அரசியல் விடுதலை இயக்கங்களிலும் பயங்கரவாத செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. அவை கண்டிக்கப்பட வேண்டிய திருத்தப்பட வேண்டிய பெரும் தவறுதான். ஆனால், அதற்காக ஒருவர் அந்த விடுதலை இயக்கங்களையோ, விடுதலைப் போராட்டங்களையோ அதற்கு காரணமான அவர்களது பிரச்சினையையோ நிராகரித்து விடுவதில்லை.

புலிகள் பிரிட்டனாலும், முத்திரை குத்தப்படக்கூடும். கதிர்காமர் தற்காலிகமாக வெற்றி பெறக்கூடும். ஆனால், புலிகளை பயங்கரவாதிகள் என்று நிறுவும் தீவிரத்தில் தன்னையும் தனது அரசையும் பயங்கரவாதிகள் அல்ல என்று அவ்வரால் நீண்ட காலம் உலகை நம்பவைக்க முடியாது!

தொகுப்பு: மகேஸ்

நன்றி - நூலகத்திட்டம்




# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

இல.: 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல்: 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## புத்தி பேதலித்தது யாருக்கு?

கினிஹிர - 9 துருப்புக்கள் முகமாலையைப் பிடித்து விட்டதான ஆரவாரத்தை எழுப்பிக் கொண்டிருக்கையில், கடந்த ஒரு மாத காலமாக இருந்து வந்த தமது தன்னிசையான போர்நிறுத்தத்தை இன்னும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கு தாம் ஒப்புக் கொண்டுள்ளதாக வன்னியிலிருந்து புலிகளின் தலைமையகம் அறிவித்துக் கொண்டிருந்தது.

இந்த அறிவிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவர் புலிகளுக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்று யோசிக்கக் கூடும். ஆனால், புத்தி பேதலித்திருப்பது புலிகளுக்கா அல்லது அரசுக்கா என்பதை நாம் புரிந்து கொள்ள அதிக நாள் எடுக்கப் போவதில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காணப்பட முடியும் என்று கருதுகிற ஒரு அராசாங்கம், யுத்தம் செய்வதில் தீவிரமாக முனைந்து நிற்கிறது. தமிழீழம் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுடன் ஆயுதம் ஏந்திய புலிகள் பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்பதை இரண்டாவது தடவையாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

புலிகளின் இந்த அறிவிப்பு இன்னும் இலேசாக எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல. தாம் கைப்பற்றிய பிரதேசங்களை விட்டுக் கொடுக்கத் தயாரான ஒரு மனோநிலைக்கு அவர்கள் வருவதென்பது நிச்சயமாக கவலை தருகிற ஒரு விடயமாகத் தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும், அவர்கள், தாம் சமாதானத்தின் எதிரிகள் அல்ல என்ற தமது நிலைப்பாட்டை அரசியல் ரீதியாக வலியுறுத்தவும், உண்மையில் சமாதானத்தின் எதிரி அரசாங்கமே என்று உலகின் முன் அம்பலப்படுத்தவும் அவர்கள் இந்த விலையைக் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை ஏற்று, ஒருகால், இலங்கை அரசு பேச்சுவார்த்தை மேசைக்கு வருமானால், அந்தப் பேச்சுவார்த்தை எந்த அடிப்படையில் அமைய வேண்டும். புலிகள் எத்தகைய அடிப்படையிலமைந்த ஒரு பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு பேச்சுவார்த்தை தொடர்வதை ஏற்றுக் கொள்வார்கள்?

அண்மையில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்மொழியப்பட்டு அரசின் நெருக்கடிக்கும், எதிர்ப்புக்கும் மத்தியில் இதர தமிழ்ப் பல்கலைக்கழகங்களிலும், பிற இடங்களிலும் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்ட 'பொங்குதமிழ்' எழுச்சி விழா மிகவும் தெளிவாக ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ் மக்களின் தாயகப் பிரதேசம், தமிழ் தேசியவாதத்தின் நியாயத்தன்மை ஆகியவற்றை அங்கீரிக்கும் அடிப்படையில்மைந்த ஒரு அரசியல் வாழ்வை தமிழ் மக்கள் ஏகோபித்து ஆதரிக்கின்றனர் என்பதை இந்த எழுச்சி விழாவின் வெற்றி துலாம்பரமாகக் காட்டியுள்ளது.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமாகவும், சமத்துவமாகவும் தம்முடைய அரசியல் உரிமைகளை சுதந்திரமாக அனுபவிக்கக் கூடியதாக வாழவும், உரிய ஒரு சூழலைத் தரக்கூடிய எந்தக் குறைந்த பட்சத் தீர்வும் இந்த மூன்று சம்பவங்களின் அடிப்படையிலேயே சாத்தியமாக முடியும் எனறே தமிழ் மக்கள் நம்புகிறார்கள் என்பதை இந்த விழாவின் வெற்றி எடுத்துக் காட்டியுள்ளது.

உண்மையில், இந்த வெற்றி இன்னுமொரு உண்மையையும் எமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. அதாவது நியாயமான கோரிக்கைகட்கும், உரிமைகட்காக குரலெழுப்பவும் எத்தனை அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் மக்கள் தயாராகவே இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல்வாதிகள் நம்புவது போல, அவர்கள் அரசியல் கோரிக்கைக்காக போராடும் பொறுப்பை பாராளுமன்றக் கதிரைகளில் தூங்கிக் கொண்டிருக்கும் அவர்களிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கியிருக்க விரும்பவில்லை. தாமும் திரண்டுவந்து நின்று தமது குரலை ஒலிப்பதற்கும், அதில் வரும் ஆபத்துக்களை எதிர்நோக்கவும் தயாராகவே இருக்கிறார்கள்.

தயாரற்றவர்கள் உண்மையில் அம்மக்களின் உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாக தமிழ் அரசியல்வாதிகள் தான்!

உண்மையில், இந்தப் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நாடு பூராவும், பரவலாக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களில் மட்டுமல்லாமல், பாடசாலைகள், மாணவர்கள், அரச அலுவலங்கள், தொழிலகங்கள், இளைஞர்கள், பெண்கள், மத்தியிலான அமைப்புக்கள் மற்றும் கிராமங்கள் நகரங்கள் எங்ஙனும் பரவலாக்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான 'சமத்துவமான, கௌரவமான, சுதந்திரமான வாழ்வுக்கான' அனைத்து மக்களின் போராட்டமாக இது விஸ்தரிக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப் போராடலாம். பிற அரசியல் கட்சிகள் அந்நிய துாதராலயங்களிடமும், இந்திய பிரதமரிடமும் போகலாம். ஆனால், எல்லோருடைய நோக்கமும் மேலே சொன்ன 'சமத்துவமான கௌரவமான சுந்திரமான வாழ்வு தான் என்றால், இந்த விஸ்தரிப்பு எல்லா அரசியல் நோக்கம் கொண்டவர்களுக்கும் பொருத்தமானதும் ஏற்புடையதும் கூட என்பதில் மறுப்பிருக்க முடியாது.

தனிப்பட்ட நலன்களிற்காகவும், அரச பதவிகட்காகவும், கோட்பாடுகளையும் அரசியல் உரிமையையும் விட்டுக்கொடுக்கும் சுய அழிப்பிற்குரிய 'துணிவு' கொண்டவர்களைத் தவிர மற்றெல்லோரும் இதற்கு ஒத்து வருவார்கள் என்றே நம்புகிறோம்.

பொங்கு தமிழ் எழுச்சி பொங்கட்டும். நமது தேசத்தின் உரிமைக்குரலாய், எமது மனச்சாட்சியின் குரலாய், தர்மத்தின் குரலாய் அது எழுச்சி பெறட்டும்.

சரிநிகர் அந்த எழுச்சியின் முன்னணியில் நின்று தன் பங்களிப்பை ஆற்றத் தயாராகி நிற்கிறது.

## சிறிலங்காவின் அரசியல் அமைப்பில் மக்கள் உயிர்வாழும் உத்திரவாதம் இல்லை

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன்

சிறிலங்காவின் அரசியல் அமைப்பில் மக்கள் உயிர்வாழும் உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இதனால் மனித உரிமைகள் மீறப்படுவதும் ஆட்கள் காணாமல் போவதும் மறைக்கப்பட்டு விடுகின்றன. அத்துடன் கொலைகளும் நடக்கின்றன. இவ்வாறு இடம் பெற்ற வன்மையான செயலே நிமலராஜனின் படுகொலையுமாகும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்தார்.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட யாழ். பத்திரிகையாளர் எம்.நிமலராஜனின் 90 ஆம் நாள் நினைவை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கமும், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் இணைந்து ஜன.24ம் திகதி கொழும்பு மருதானை சனசமூக நடுநிலையத்தில் நடத்திய நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழ்மாறன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் கூறுகையில், தனிமனித சுதந்திரம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளதாக அரசியல் அமைப்புக் கூறுகின்றது. ஆனால் உயிரைப் பாதுகாக்கும் உத்தரவாதம் இதில் குறிப்பிடப்படவில்லை. உயிர்களைப் பாதுகாக்கும் சட்டம் இல்லாத இந்த அரசியல் அமைப்பினால் எந்தவித பயனும் இல்லை. இவ்வாறான சட்ட ஓட்டைகள் இருப்பதை வைத்துக் கொண்டே மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்காததும் இதுபோன்ற விடயங்களாலேயாகும்.

போரினால் சமாதானம் கொண்டு வரப்படும் என அரசாங்கம் கூறுவது சுத்தமான பொய். வடக்குக் கிழக்கில் சிறிலங்கா அரசபடையினரின் பிரசன்னத்தைவிட அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வரும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளே மிகமோசமானது. இந்த உண்மையின் சோகமான முடிவே நிமலராஜனின் முடிவுமாகும்.

இந்த நாட்டில் போர், குற்றவியல் குற்றங்களைப் புரிபவர்களை சர்வதேச சமுகத்திற்குக் கொண்டுவந்தவர்கள் பத்திரிகையாளர்கள்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் கொண்டு வரப்பட்ட உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கம் கையொப்பம் இடமறுத்து விட்டது. இதன் மூலம் காணாமல் போனவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் சட்டத்தையும் மறுத்து விட்டது. காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விளக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டு. ஆனால் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் உரையாற்றுகையில், 'இந்த நாட்டில் விரைவில் சமாதானம் கிட்டக்கூடிய சூழலைக் காணவில்லை. நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்றே பலரும் விரும்புகின்றனர். ஆனால் அந்த எண்ணம் நிறைவேறுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது. இதனாலேயே நிமலராஜனை இன்று நாம் இழந்துள்ளோம்.

நெல்சன் மண்டேலா இளம் வயதில் கைதாகி உள்ளே சென்றார். வெளியே வரும் போது அவர் வயோதிபராக வந்தார். ஆனால் உயிருடன் இருந்தார். ஆனால் சிறிலங்காவில் அவ்வாறு இல்லை. கைதாகுபவர்களுக்கு உயிர் உத்தரவாதம் இல்லை.

சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசியத் தலைவர் இதுவரை உருவாகவில்லை. இதைச் சிங்களச் சமூகம் செய்யத் தவறி விட்டது. அதுபோல் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளவோ அல்லது மதிக்கத்தக்கதொரு தலைவரை உருவாக்க தமிழ் சமூகமும் தவறி விட்டது. இத் தவறுக்கு எதிர்காலச் சமூகத்திடம் இரு சமூகமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

வடக்குக் கிழக்குப் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உறுப்பினரும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயலாளருமான இரா. துரைரெத்தினமும் உரையாற்றினார்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் பத்திரிகையாளர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர்.

## படையினரின்.................

கடந்த வாரத்தில் இரு துண்டுப் பிரசுரங்களை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அத்துண்டுப் பிரசுரத்தில் புலிகள் இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் பொய்யானது என்றும் இது கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட தோல்விகளிலிருந்து மீள்வதற்காகவே. மேலும் பாதுகாப்பு படையையும் அரசையும் இந்த பொய்யான யுத்த நிறுத்தத்துக்கு துாண்டிவிடவும் முயற்சிப்பதாகவும் அதில் ஒரு கட்ட மாகத் தான் அவர்களின் அரசியல் பிரிவின் உறவினர்கள் மூலமாக ஊர்வலம் மற்றும் எதிர்ப்பு பேரணிகள் மூலம் யுத்த நிறுத்தத்துக்கு வருமாறு அரசை வற்புறுத்துகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் அப்பிரசுரம் பொய்யான யுத்த நிறுத்தத்துக்காக ஏமாற வேண்டாம் சமாதான பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராக உள்ளது. அதற்கு யுத்த நிறுத்தம் தேவையில்லை. இப்படியான வலைகளில் சிக்கி அரசுக்கு எதிராகச் செயற்பட்டு குற்றவாளியாகி விடாதீர்கள் என மறைமுகமாக மக்களை எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை.

தமிழ் மக்களின் உண்மையான விருப்பத்தைச் சொல்வதைக் கூட இந்த அரசும் அரச கூலிப்படைகளும் அரசுக்கெதிராகச் செயற்படுவதாகச் பயப்படுத்தி, சொல்ல விடாமல் தடைசெய்வது மட்டுமல்லாமல் அவ்விருப்பம் புலிகளுடையது எனவும் முத்திரை குத்தப் பார்க்கின்றனர்.

"இந்த பயம் பற்றிய தெளிவை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தமிழ் சமூகத்தின் கற்றவர் ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையாகும். இத்தேவையின் அவசியத்தை சொல்ல வேண்டிய நேரத்தில் தவிர்க்க முடியாமல் தமிழ் இனவாதி என்ற தோற்றப்பாடு உருவாவதற்கும் வாய்ப்புகளுண்டு. எது எப்படியோ மக்களை வழிநடத்த வேண்டியவர்களும் உண்மையைப் பேச வேண்டியதும் ஊடகவியலாளர்கள் தான்" என்கிறார் மட்டக்களப்பிலுள்ள மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.


சிறுபான்மையினரின் உரிமைகள்
மத்திய அர்சினுள் பாதுகாக்கப்படுமா?

மாதிரிப் பாராளுமன்ற விவாதம் -3

ஜனவரி மாதம் 30 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்



செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன். 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட: அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 25.01.2001